மணிமேகலைப் பிரசுரம்

# உலகத்துக்கு உழைப்போம்



கவிதைகள்

தங்கராசா சிவபாலு
(தங்கபாலு)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

UNIVERSITY O
14 SEP 2006
LIBRARY

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

UNIVERSITY OF PERADENIYA
14 SEP 2006
LIBRARY
598978
598978
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

UNIVERSITY OF PERADENIYA
14 SEP 2006
LIBRARY

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலகுக்கு உழைப்போம்!

(கவிதைத் தொகுதி)

## தங்கராசா சிவபாலு

UNIVERSITY OF JAFFNA
14 SEP 2006
LIBRARY

**மணிமேகலைப் பிரசுரம்**
தபால் பெட்டி எண் : 1447
7 (ப.எ.4), தணிகாசலம் சாலை,
தியாகராய நகர், சென்னை - 600 017.
தொலைபேசி : 24342926
தொலைநகல் : 0091-44-24346082
மின் அஞ்சல் : manimekalai@eth.net
WebSite : www.manimekalaiprasuram.com

598978

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நூல் விவரம்


| | |
|---|---|
| நூல் தலைப்பு | உலகுக்கு உழைப்போம்! |
| ஆசிரியர் | தங்கராசா சிவபாலு |
| மொழி | தமிழ் |
| பதிப்பு ஆண்டு | 2004 |
| பதிப்பு விவரம் | முதல் பதிப்பு |
| உரிமை | ஆசிரியருக்கு |
| தாளின் தன்மை | 11.6 கி.கி. |
| நூலின் அளவு | கிரௌன் சைஸ் (12½ x 18½ செ.மீ.) |
| அச்சு எழுத்து அளவு | 11 புள்ளி |
| மொத்த பக்கங்கள் | xii + 192 = 204 |
| அட்டைப்பட ஓவியம் | சாய் |
| லேசர் வடிவமைப்பு | கிறிஸ்ட் கம்ப்யூட்டர்ஸ் சென்னை - 26. |
| அச்சிட்டோர் | ஸ்கிரிப்ட் ஆஃப்செட் சென்னை - 94. |
| நூல் கட்டுமானம் | தையல் |
| வெளியிட்டோர் | மணிமேகலைப் பிரசுரம் சென்னை - 17. |

நூலின் விலை ரூ. 50.00


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமர்ப்பணம்

UNIVERSITY OF JAFFNA
24 SEP 2006
LIBRARY



**தம்மின்தம் மக்கள் அறிவுடைமை மாநிலத்து**
**மன்னுயிர்க் கெல்லாம் இனிது**

என்று கல்வி அறிவூட்டிய
என் தந்தைக்கும் தாய்க்கும்
இந்நூலை
அன்புக் காணிக்கையாக்குகின்றேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளே...


| | | |
|---|---|---|
| | என்னுரை | vi |
| | அணிந்துரை | x |
| | பொங்கு தமிழிற் பூத்த கவிதைகள் | 7 |
| | சிறப்புரை | 9 |
| 1. | தாயே நீ இன்றி... | 13 |
| 2. | என் அழகே அமுதே | 15 |
| 3. | உலகுக்கு உழைப்போம் | 17 |
| 4. | சித்திரைப் புத்தாண்டே விரைந்து வா!! | 19 |
| 5. | விவசாயி | 22 |
| 6. | காதல் இன்பம் | 24 |
| 7. | எழுக வையகமே | 29 |
| 8. | அமைதியும் மகிழ்வும் | 31 |
| 9. | கொலைஞரே ஒழிக! | 33 |
| 10. | வளங்கள் வல்லானுக்கோ? | 35 |
| 11. | முதியோர் | 38 |
| 12. | தமிழ்த்தேன் சுவாமி விபுலாநந்த அடிகளார் | 41 |
| 13. | மெய்ஞானத் துறவி | 46 |
| 14. | விபுலாநந்தர் புகழ் பாடுவோமே | 49 |
| 15. | கனடா விபுலாநந்தர் மன்று வாழ்க! | 50 |
| 16. | என் கவிதை பிறந்த கதை | 52 |
| 17. | எங்கள் நாடு | 57 |
| 18. | மோகங்கொண்ட வெண்முகிலே! | 59 |
| 19. | அமைதிப் புறாவே விரைந்து வா | 62 |
| 20. | போராட்டம் | 65 |
| 21. | மீண்டும் மிடுக்கு | 74 |
| 22. | திராவிடர் பொங்கல் | 76 |
| 23. | தேசம் ஒரு வாடகை வீடு | 77 |
| 24. | வந்த நாட்டில் | 81 |
| 25. | தமிழமுது உண்போம்! | 83 |
| 26. | பாரத மாதா | 85 |
| 27. | போதை அது பேதைமை | 89 |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

28. வந்ததும் ஏனோ ........ 91
29. மற்றவர் செயலே கொள்கிறார் ........ 93
30. சாதி வெறி தீரவில்லை ........ 96
31. மனிதநேயம் பேச்சிலா? ........ 101
32. எம் பாதச் சுவடு ........ 104
33. இன்பத் தமிழ் ........ 108
34. பக்கத்து அழகி ........ 112
35. மழை ........ 116
36. அன்னையே அருள்தருவாய் ........ 118
37. மன்பதை காப்பரோ? ........ 120
38. தொழிலாளரே உணர்வீர் ........ 121
39. நாம் இரண்டானால் ........ 128
40. கோடைப் பாவை ........ 133
41. மருத நிலத்தழகு! ........ 135
42. தமிழர் திருநாள் ........ 138
43. பத்திரிகைப் பைங்கிளி ........ 140
44. மனிதன் இவனோ? ........ 142
45. ஆதிபத்தியம் அழியும் ........ 145
46. மனிதம் நிலைக்குமா? ........ 150
47. கல்வி ........ 152
48. புலம்பெயர்ந்த தமிழ் ........ 154
49. என்று தீரும் எம் அவலம்? ........ 160
50. நத்தார் பண்டிகை ........ 165
51. உணர்வுகள் ஒன்பது ........ 168
52. தேனீ ........ 171
53. குவலயம் ஒளிரவேண்டும் ........ 173
54. வேலிச்சண்டை ........ 175
55. விடிந்திடும் வாழ்வு ........ 177
56. என் தெய்வம் ........ 181
57. நேரம் ........ 183
58. உலகே நீ எங்கே? ........ 186
59. துணிவுடைத் தோழன் டானியல் ........ 188
60. பொதுவுடைமை ஓங்கும் ........ 190

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

UNIVERSITY OF PERADENIYA
14 SEP 2006
LIBRARY

# என்னுரை

கவிதை எழுதவேண்டும் என்னும் மன ஆதங்கம் என் உள்ளத்தில் என் பள்ளிக் காலத்திலிருந்தே கருக்கட்டத் தொடங்கியது. அதற்கான பக்குவம் கைவரப்பெறவில்லை. அக்கறையும் அவ்வளவாக எழவில்லை. தமிழ் கற்றவர்களுக்கு முன் என் தமிழில் எனக்கு நம்பிக்கையின்மை ஒரு காரணம். அதற்கு வள்ளுவன், கம்பன், ஒட்டக்கூத்தன், பாரதி, பாரதிதாசன், கவிமணி தேசிகவிநாயகம் பிள்ளை, ஆகியோரை விட கவிஞர் கண்ணதாசன் போன்றோரது பாடல்களைப் பார்த்து அதன் கருத்தாழத்தை நோக்கி மூக்கின்மீது விரல் வைத்து வியந்து ரசிக்கும் எனக்கு, கவிதை எழுதுவது என்பது எட்டாத கனி என நினைத்திருந்தேன். ஆனால் பத்திரிகைகளில் பலர் கவிதைகள் எழுதுவதைப் பார்த்த பின்னர் நான் எழுதினால் என்ன என்ற எண்ணமும் தோன்றியது. இருந்தாலும் நேரமின்மையும், வேறு வேலைகளில் புலனை முற்றாகச் செலுத்தவேண்டிய நிலையும் என்னைச் சற்றே பின்தள்ள வைத்தது.

என் மாணவப்பருவத்தில் நண்பனாக இருந்த அல்வை சுந்தரனின் கவிதைகளை நான் பார்த்து அவற்றை ரசிப்பதோடு அவைபற்றி நாம் கலந்துரையாடுவதும் உண்டு. பின்னர் அவரின் தொடர்பு அறுந்துபோய்விட்டது. நாங்கள் இருவரும் வெவ்வேறு இடங்களுக்குச் சென்று விட்டமையே அதற்குக் காரணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவிதையைப் படிப்பதோடு மட்டுமன்றி இரா.பி.சேதுப்பிள்ளை அவர்களின் அழகிய தமிழ் வசன நடைக்கு நான் என்நேரத்தை ஒதுக்கி அவரது புத்தகங்களைத் தேடிப்பெற்று வாசித்ததோடு மட்டுமன்றி மறைமலை அடிகளின் தனித்தமிழ் நடையிலும் எனக்குப் பற்று இருந்தது.

பல்கலைக் கழகத்தில் கல்வி பயின்றவேளை தோழர் புதுவை இரத்தினதுரையின் பாடல்களின் உணர்ச்சியும், கருத்துகளும் என்னை அவர்பால் ஈடுபாடு கொள்ள வைத்தன. அவரை நாம் பேராதனைப் பல்கலைக்கழகத்திற்கு அழைத்து அவரது கவிதைகளை அவர் வாயிலாகவே செவிமடுத்தமை என் கவிதை எழுதும் நோக்கத்தை உதைத்து உதைத்து வெளியே கொண்டுவர உதவியது எனின் தவறாகாது.

இவ்வித ஈடுபாடுகள் கவிதைகளை அவ்வப்போது எழுதி ஓர் ஓரத்தில் போட்டுவிடும் தன்மையைத் தந்ததே தவிர, அதற்குமேலாக எனக்கு மன நிறைவைத் தரத்தக்கதாக கவிதை எழுதும் ஆற்றலை வளர்த்துக்கொள்ள நான் முற்படவில்லை எனலாம்.

ஆனால் நான் பிரான்ஸில் இருந்தவேளை அங்கு ஏற்பட்ட மரணச் சடங்குகளில் கண்ணீர் அஞ்சலிகளை எழுதி வாசிக்கவேண்டும் என்னும் உந்தல் என்னை மேலும் எழுதத் துண்டியது. நண்பர்களின் இழப்புகளுக்குப் பரிகாரம் தேடும் அவர்களின் உறவுகளை ஆற்றுப்படுத்தும் தன்மையை கண்ணீர் அஞ்சலிகள் தருவதால் அவற்றை எழுதித்தர முற்பட்டேன்.

கனடிய மண்ணில் எனக்கு ஓய்வுநேரமும் தமிழைக் கற்பித்தலுக்குச் சிறுவர்களுக்கான பாடல்களைத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேடிப்பெறுவதிலும் இங்கு உள்ள சூழ்நிலைகளை மனத்தில் இருத்தி சிறுவர்களுக்கான பாடல்கள், கவிதைகளை எழுதவும் முற்பட்டேன்.

நீண்டகாலமாக மனத்தில் புதைந்திருந்த உள்ளார்ந்த கருத்துகளை வெளிப்படுத்தும் வகையிலே சில கவிதைகளை எழுதினேன். என்னுடன் பணியாற்றிய இந்தி மொழிபேசும் நண்பர் ஒருவர் என்னை அணுகி "இந்திய சுதந்திர தினக் கொண்டாட்டம் வருடந்தோறும் ரொரண்டோ நகரில் இடம்பெறுகிறது. பல மொழிகளிலும் கவிதைகள் வாசிக்கப் படுகின்றன. ஆனால் தமிழ் மொழியில் கவிதை வாசிக்க யாரும் கிடைக்கவில்லை, யாரையாவது தேடித்தர முடியுமா?" என வினவினார். நான் மனமுவந்து அதற்காகக் கவிதை ஒன்றை வாசிக்க முன்வந்தேன். அவர் இன்னுமொருவரை அழைத்து வரும்படி கேட்டமையால் செல்வி பிரதீபா தில்லைநாதன் அவர்களை என்னுடன் அழைத்துச்சென்றேன். அங்கே கவிதை வாசித்ததன் பின்னர் எனக்கு ஒரு துணிவு பிறந்தது. அதன்பின்னர் மெல்ல மெல்ல ஓய்வு நேரங்களில் கவிதைகளை எழுதினேன். திருமண வைபவங்கள், பூப்புனித நீராட்டு விழாக்கள், நடன அரங்கேற்றங்கள், புத்தக வெளியீடுகள், பாராட்டு விழாக்கள் இப்படியாக பல மேடைகளுக்கும் என் கவிதைகளை அரங்கேற்றம் செய்தேன். அதனால் பாராட்டையும் பெற்றுக்கொண்டேன். இது எனக்கு மேலும் ஊக்கத்தைத் தந்தது. நான் எழுதிய கவிதைகளில் சிலவற்றை அதிபர் பொ. கனகசபாபதி அவர்களிடம் காண்பித்தேன். அவர் இன்முகத்தோடு "புத்தகமாக்க வேண்டியதுதானே? ஏன் தாமதம்?" என ஊக்கம் தந்தார் என்று சொல்வதை விட, என்னை நச்சரித்துக்கொண்டே இருந்தார். கட்டுரைகளைப் பத்திரிகையில் எழுதுவதற்கும் என்னைத் தூண்டியவர்களில் முதலிடம் வகிப்பவர் அவரே. நான் தாயகம் சென்றவேளை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என் புத்தகத்தை அச்சிட்டு வரும்படி கட்டளை இட்டிருந்தார். நான் தவிர்க்கமுடியாத காரணங்களினால் அவற்றைச் செய்யாது திரும்பிவிட்டேன். அடேயப்பா! அவருக்கு வந்த கோபம் கொஞ்சமல்ல. ஒரு பார்வை பார்த்தார். தந்தை மகனை உரிமையோடு கண்டிப்பது போலவே இருந்தது. எனவே எப்படியாவது அவரின் முகத்தில் விழிக்கவேண்டும் என்பதற்காக இந்த நூலுருவாக்கும் முயற்சியில் முனைந்தேன்.

இவ்விதமே கவிநாயகர் வி. கந்தவனம் அவர்களும் பெருமனத்துடன் எனது வேண்டுகோளை ஏற்று நான் தந்த சில பாடல்களைப் பார்த்துத் திருத்தங்கள் செய்ததோடு கவிதை தொடர்பான சில புத்திமதிகளையும் சொன்னார். இவ்விதமே நண்பர் அ.பொ.செல்லையா அவர்களும் பேராசிரியர் இ. பாலசுந்தரம், கலாநிதி ம.செ. அலக்சாந்தர், உதயன் பத்திரிகை ஆசிரியர் நண்பன் R.N. லோகேந்திரலிங்கம் அவர்களும் நட்புரிமையோடு ஊக்கம் தந்தவர்கள் என்பதனை மறக்கமுடியாது. என் எழுத்துப் பணிக்கு ஆதார பூர்வமாக உதவியவர்களில் என் சகோதரி பார்வதி கந்தசாமியும் என் துணைவி தயாதேவி அவர்களும் தம் பங்களிப்பைச் செய்ததை உரிமை உணர்வோடு நினைவு கூர்கின்றேன். என் படைப்புகளில் உள்ள தவறுகளைச் சுட்டிக்காட்டுவது எனக்கு ஊக்கத்தையும் தவறுகளை மேலும் இடம்பெறாமல் பார்த்துக்கொள்ளவும் உதவும். எனவே வாசக அன்பர்களிடமிருந்து நான் எதிர்பார்ப்பதெல்லாம் என் படையல்களை அதன் உள்ளே புகுந்து சுவைத்து என்னுடன் குறைநிறைகளைக் கலந்துரையாடவேண்டும் என்பதாகும். என் கவிதைகளும் மேநிலை அடையும்.

**த. சிவபாலு**
டொரண்டோ
கனடா.

416—701—9608

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விற்பனையாகும் இதர நூல்கள்!

## தேசநலக் கவிதைகள்

| | |
|---|---|
| உண்மை உழைப்பாளர் - எஸ்.மணிவாசகம் | 21.00 |
| மலேசிய மண்ணின் வரலாறு | 30.00 |
| மலேஷியாவில் தமிழாசிரியர் | 24.00 |
| வீர வணக்கம் | 35.00 |
| சும்மாவா கிடைத்தது சுதந்திரம் | 35.00 |
| அமைதிக்காக போர் | 28.00 |
| இன்னொரு போர்வாள் | 35.00 |
| ஒரு தியாகியின் கனவு | 28.00 |
| உணர்வுக்களம் | 65.00 |

## சமூக– வாழ்வியல் – தத்துவக் கவிதைகள்

| | |
|---|---|
| உதிராத மலர்கள் - சேலம் பெ.ராஜசேகர் | 18.00 |
| கொடிகள் மட்டும் உயரத்திலே - கு.தென்னவன் | 18.00 |
| ஊமையன் கண்ட கனவுகள் - பா.துளசிமணி | 27.00 |
| அந்தமான் கவிதைகள் - அருன் | 28.00 |
| இருள் விடிவதற்கே | 24.00 |
| நினைவுகளின் அடைமழை | 16.00 |
| ஆத்ம அலைகள் | 20.00 |
| உணர்வுகள் | 30.00 |
| சிந்திப்பாய் என் தோழா | 25.00 |
| பெண்ணினமே வீறுகொண்டு எழு | 23.00 |
| மலரட்டும் மனித நேயம் | 35.00 |
| ஞானக் கிறுக்கல்கள் | 15.00 |
| ஆசிரியரை வணங்கு | 32.00 |
| ஒளியைத் தேடும் இரவு | |
| மனசாட்சி | 27.00 |
| மாண்டுபோன மனித நேயம் | 20.00 |
| சமுதாயத் தேடல்கள் | 24.00 |
| நாளைய தலைமுறையினருக்கு ஓர் அறைகூவல் | 30.00 |
| வாழ்க்கை ஒரு வானவில் | 25.00 |
| வறுமை ஒரு தடையல்ல | 22.00 |

## தமிழ்மொழித் தமிழர் வளர்ச்சி கதைகள்

| | |
|---|---|
| உயிர்(த்) தமிழே | 22.00 |
| நிழல் தேடும் மனிதன் | 30.00 |
| புதிய நூற்றாண்டு தமிழர் | 24.00 |
| தமிழர் மாண்பு | 24.00 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விற்பனையாகும் இதர நூல்கள்!

## இலக்கியம் – பல்சுவைக் கவிதைகள்

| | |
|---|---|
| இதயத்தின் உதயம் (கவிதையும் கட்டுரையும்) பெ. பரிமளசேகர் | 21.00 |
| பாவேந்தரின் புதியதோர் உலகு செய்வோம் - கவிஞர் மித்ரா | 26.00 |
| பாட்டும் நானே படமும் நானே - எம். மாரிமுத்து | 13.00 |
| மாற்றம் நிச்சயம் வரும்–பாவலர் கருமலைப் பழம்நீ | 20.00 |
| கவிதையே விடியலாய் | 34.00 |
| மனதிற்குப் பிடித்த மழைத்துளிகள் | 15.00 |
| பூத்தெழும் புதுமைகள் | 21.00 |
| தேடல் | 16.00 |
| இழைவரம் | 13.00 |
| உலகமெல்லாம் தமிழோசை | 20.00 |
| அமுதுவின் கவிதைகள் | 75.00 |
| இளம்வழுதி கவிதைகள் பாகம் - 1 | 45.00 |
| பாகம் - 2 | 42.00 |
| கவிதைச்சரம் | 25.00 |
| வேதாவின் கவிதைகள் | 42.00 |
| கவிதை எழுத வந்தேன் | 50.00 |
| உள்ளேன் ஐயா | 28.00 |
| ஓர் ஆத்மாவின் ராகம் | 45.00 |
| தூறல் கோலங்கள் | 32.00 |
| தாமிரபரணிக் கரையினிலே | 36.00 |
| கல்விக்கு ஏங்கும் கிராமம் | 25.00 |
| புதுக்கவிதைகள் ஓர் அலசல் | 43.00 |

## இதர கவிதைகள்

| | |
|---|---|
| விடிகாலை கனவுகள் | 22.00 |
| தொடரட்டும் தமிழ் முழக்கம் | 25.00 |
| தனி மனித தியாகங்கள் நாட்டிற்கும் வீட்டிற்கும் | 40.00 |
| வாழி வழி சொல்! | 40.00 |
| வாழ்க்கையின் விலாசம் தேடு | 24.00 |
| நதிக்கரை நாணல்கள் | 30.00 |
| மணியாரம் | 36.00 |
| நெஞ்சத்தைத் தொட்ட நினைவுக் கவிதைகள் | 25.00 |
| யாரென்றே அறியாதவர்கள் | 45.00 |
| அமெரிக்காவில் தமிழ்த் தென்றல் | 50.00 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அணிந்துரை

நண்பர் சிவபாலுவின் தமிழ் அறிவு நிறைகுடம் போன்றது. அவர் ஒரு நிறைந்த திறனுடைய சேவை மனப்பாங்குடைய நல்லாசான். இளைய தலைமுறைக்குத் தமிழையும் அதனை இங்கே கற்பிக்க முனையும் நல் ஆசிரியர்கட்கு அதனைக் கற்பிப்பதைப் பற்றியும் தளராது கற்பித்துவரும் தமிழ்த் தொண்டர்.

அவர் கவிகட்டும் ஆற்றல் கவியரங்குகளிலும், விழாக்களிலும் பிரசித்தி. அத்திறன் பல சமயங்களில் என்னை வியக்க வைத்துள்ளது. சில சமயங்களில் "இவற்றை ஏன் நீங்கள் நூல் வடிவு கொடுத்து எமது பிள்ளைகளுக்கும் பெற்றோர்களுக்கும் உதவப்படாது?" எனக் கேட்டுள்ளேன். "பார்க்கலாம்" என்றார். பார்த்தேன். புலி இவ்வளவு நாளாய் இப்படிப் பதுங்கியது இத்தனை தூரம் பாயவா? பரவசப்படுகிறேன். பாராட்டத்தோன்றுகிறது. நீங்களும் அதே உணர்வினைப் பெறுவீர்கள் என்பதில் ஐயமில்லை! தனது கவிதைகளில் சிலவற்றைப் பொறுக்கி எடுத்து "உலகுக்கு உழைப்போம்" என நூல்வடிவு கொடுத்துள்ளார். சிறுவர்களுக்கான பாடல்களை ஒலிநாடாவாக்கியுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவிதைகளுடன் நின்றுவிடாமல் கீர்த்தனைகளையும் அமைத்து தமிழக மற்றும் இங்கு வாழ் கர்நாடக இசைக் கலைஞர்களாலும், நடன மணிகளாலும் மேடைகளில் கையாள வைத்துள்ளார்.

"இக்கால இலக்கியத்தில் ஏனைய கூறுகள் யாவற்றிலும் கவிதை தனித்துவமாய் நிற்கிறது. வடிவ அடிப்படையில் ஏனைய யாவற்றையும் தாண்டி மேலெழுந்து நிற்பதோடல்லாமல் இக்காலக் கவிதையில் சொற் சிக்கனமும் பேணப்படுவது அதன் தனிச் சிறப்புக்குக் காரணமாய் அமைவதைக் காணமுடியும். பொதுவாகவே மரபுக் கவிதைகள் பல சமுதாயத்தைத் தூண்டுகின்ற எழுச்சிப் பாடல்களாக இல்லை. வெற்றுச்சொல் தொடுப்பதே கவிதை என்று நினைப்பதும் தொகுப்பை வெளியிட்டு விடுவதுந்தான் கேடு பயக்கின்றன" என்கிறார் தமிழ்க்குடிமகன் (கண்ணீர்). பலர் கவிதை என்பது சந்தத்துக்காக மட்டுமே எழுதப்படுகின்ற வெற்றுச்சொல் தொடுப்பாகவே புரிந்துள்ளனர்.

கவிதை என்பது உணர்ச்சியின் பிரவாகம். சுருங்கக்கூறி விளங்கவைக்கும் பொறிமுறை. அங்கே சொற்கள் ஆயுதமாகப் பாவிக்கும் பக்குவம் மலிந்திருக்கும். நண்பர் சிவபாலுவின் கவிதைகள் சிலவற்றை வாசித்தபொழுது அதில் கண்ட புதிய பார்வை, புதிய உள்ளடக்கம், உத்திப் புதுமை, இதோ முத்திரை குத்தக்கூடிய கவிஞர் ஒருவர் உள்ளார் எனச் சொல்ல வைக்கிறது. சமுதாய உயர்வு அபரிமிதமாகக் காணப்படுவதை இங்கு குறிப்பிட்டேயாக வேண்டும்.

அவர் கவிதைகளில் மரபுக்கவிதையின் சாயலும் புதுக்கவிதையின் வேகமும் காணப்படுகின்றன. சமுதாயத்தைத் தூண்டுகின்ற உத்வேகமும் உள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*கற்றதன் பயன் கொள்ளல் மீண்டுமே*
*அதன் வழி நிற்றல் உணர்வரோ*
*கற்றவன் நீ உலகுக்கே தலையாலே*
*தான் வர வேண்டாமோ*
*மற்றவன் போலி வாழ்வு வேண்டுமோ*
*செற்றவை மறத்தல் ஆகுமோ*
*நற்றவன் செயல்கள் போற்றியே*
*பொதுநலன் பேணி வாழ்வமே!*

(உலகு உய்யும்)

ஒருவர் பிறந்தவுடனேயே அவரைச் சமூகம் தத்தெடுத்துக் கொள்கிறது. அவரது ஊட்டம் சமூகத்தைச் சார்ந்தது. எனவே, அவர் வாழ்வின் வெற்றியோ தோல்வியோ சமூகம் சார்புடையது. அதன் பயனைச் சமூகம் அடையவேண்டும். எனவேதான் கவிஞர் "தாளுண்ட நீரைத் தலையாலே தான் தருதல் வேண்டாமோ?" என அறைகூவல் விடுத்துக் "கற்றாங்கு ஒழுகி, பொதுநலம் பேணி" வாழுமாறு வேண்டுகோள் விடுக்கிறார்.

அமைதியான வாழ்க்கை, அதுவே எவர்க்கும் வேண்டும். உலகின் உண்மைத் தேவை அன்பும், அமைதியும். இவை இருந்தால்தான் இதமான வாழ்வு கிடைக்கும். அப்பொழுதுதான் ஒவ்வொருவருடைய இதயமும் சீராக இயங்கும். வாழ்க்கை இயல்பாக ஓடும். எனவேதான் கவிஞர் அமைதியைக் குறைத்துவிடாதே என்று அதமத்துக்கு வேண்டுகோள் விடுக்கின்றார்.

"இதயத் துடிப்பின் இயல்பைக் குறைக்க
இதமே வாழ்வில் அமைதியும் அன்பம் இந்த
உதயமே உலகின் உண்மைத் தேவை
அதமமே அமைதியைக் குலைக்காதே

(அமைதியும் மகிழ்வும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமூகம் மேன்மையுற வேண்டும் என்பது எல்லாருடைய பேரவா. அதற்கு நமது சமூகத்தில் புரையோடிக் கிடக்கும் சாதிபேதம் ஒழிய வேண்டும். அதற்கு சிறக்கும் கல்வியாளர் இயையவேண்டும். நயவுரைகள் தேடிக் கொழிக்கும் அந்த நல்லிதயங்களின் ஒன்றுகூடல் தான் நலியும் நம்மினத்தைக் காக்க முடியும் என உணர்வு பூர்வமாக நண்பர் சிவபாலு எடுத்தியம்புகிறார்.

*இரக்கம் என்றும் இல்லார்க்கு உதவுமே*
*இன்புடனே உதவுதல் மேன்மையே*
*சுரக்கும் இம்மை வாழ்வின் இன்பம்*
*வள்ளல் தன்மை வாழ்விலே*
*உரக்கும் சாதிபேதம் அகலவே*
*சிறக்கும் கல்வியாளர் இயையவே*
*புரக்கும் கொள்கை உயர்த்தியே*
*நலியும் நம்மவர் இடர் காப்பமே*

(சோதரர் வாழ்வு தாழவோ)

இத்தகைய சமுதாய நோக்கு எப்படி வந்தது? அன்னையூட்டிய பாலுடன் சேர்ந்தே வந்தது. அது கொடுத்த வீரிய உணர்வுதான் இத்தகைய கவிதைகளை வடிக்கத் தூண்டுகோலாய் அமைந்தது.

*"நாவினில் நஞ்சும் நய வஞ்சகத்தில் விஞ்சும்*
*நாவினர் நயந்துரைக்கும் கொடுமை நெஞ்சில்*
*வீரியம் வளர்த்த என் தாயின் தயவே*
*பாரினில் உரைக்கப் பிறந்ததென் கவிதை"*

(என் கவிதை பிறந்த கதை)

"ஈன்று புறந்தருதல் என் தலைக் கடனே" என்ற அன்னை அவருக்குத் தமிழூட்டி வளர்த்தாள், வீரியம் ஊட்டி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிறுத்தினாள். சமூகப் பார்வை பார்க்க வைத்தாள். அத்தனையையும் கவிதையாய் உரைக்க வைத்தாள்.

"கீரைக்கடைக்கும் எதிர்க் கடை வேண்டும்" என்பார்கள். அப்படி இருந்தால் தான் வியாபாரிகளிலே நேர்மை, கண்ணியம், செயல் கூர்மை காணக்கூடியதாக இருக்கும். உலக அரங்கிலேயும் இதுவே நியதி. இன்று ஒரு வல்லரசு தன் இச்சையாக தனக்கு வேண்டாதவரை பொய்குற்றம் சாட்டி அழிக்க முனைகிறது என்றால் அதனைத் தட்டிக் கேட்கும் நாதி வேறு நாட்டுக்கும் இல்லை என்பதாலேயே. சோவியத் ரஷ்யா இருந்தால் இன்று அமெரிக்கா இத்தனை ஆட்டம் போட மாட்டாது. கவிஞர் கூறுகிறார் "எதிரலை இன்றி மாய்கிறது உலகு"

*"புதிரலை எழுப்பும் லெனினிசம் மாள*
*அதிரலை எழுப்பி கொர்பசேவ் ஏய்த்து*
*சதிரலை தழுவி ருசியம் உடைத்து*
*எதிரலை இன்றி மாய்க்கிறார் உலகு!"*

கவிஞர் உள்ளம் கொதிக்கிறது. அனலாய்ப் பிறக்கிறது கவிதை.

*"ஈராக் எண்ணெய் வளத்தைக் கவர*
*சாராக் கொள்கை ஐநா தன்னில்*
*மாறாய் நின்றே போரைத் தொடுத்து*
*சாறாய்ப் பிழிகிறார் மன்பதை தானே"*

அறைகூவல் ஒன்று எழுகிறது.

*அநுபவிக்கப் பிறந்தவன் அமெரிக்கன் தானோ?*
*உபயோகிக்க வல்லவன் வெள்ளையன் தானோ?*
*உலகின் பெருவளம் சுரண்டி உறிஞ்சிட*
*உலகே மௌனம் கொள்வது நலனோ?*

(வளங்கள் வல்லானுக்கோ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்போ! இந்தக் கவிஞருக்கு உக்கிரமாகத்தான் எழுத வருமோ? என ஐயுறாதீர்கள். நளினமாகவும் எழுத நன்றாக வரும். இதோ மாதிரிக்கு ஒன்று. மாமா ஒருவர் வருகிறார். அவர் கடையெழு வள்ளல்களிலும் பெரும் வள்ளலாகி நிற்கிறார்.

ஏன்? பள்ளிப்பருவத்திலே கவிஞர் ஒரு கிள்ளையுடன் கிள்ளி விளையாடினாராம். அதைப் பெற்றெடுத்தவர். அந்த மாமாவாம்! உண்மைதான்! அவளின் முகதரிசனம் காணக் கவிஞர் பட்டபாடு? அப்பப்பா! சொல்லிமாளுமா? கேளுங்கள், நீங்களும் அந்த அவஸ்தையை!

*பள்ளிப் பருவத்தே*
*கிள்ளி விளையாடிய*
*வள்ளல் மாமாவின்*
*வள்ளிக் கொடியாளை*
*தள்ளிப் பார்க்காமல்*
*தெள்ளும் முகத்தழகு*
*அள்ளிப் பருகிடவே*
*கள்ளக் கருக்கலிலே*
*பள்ளம் படுகுழிகள்*
*முள்ளுக் கம்பிவேலி*
*மெள்ளக் கால்தூக்கி*
*தள்ளி அடிவைத்தே*
*வெள்ளரிக் கொடியிடற*
*முள்ளிக் கீரைச்செடி*
*கிள்ளி உதிரத்தை*
*மெள்ள ருசிபார்க்க*
*எள்ளும் உணர்வின்றி*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*கள்ளச் சிந்தையெல்லாம்*
*விள்ளும் அவள் எழிலில்*
*உள்ளம் நிரம்பிவர. . .*
*. . . . . . . . . . . . . . . . . .*
*. . . . . . . . . . . . . . . . . .*

போதுமடா சாமி!! இனித் தாங்காது. காதல் பித்து தலைக்குமேலே போய்விட்டது. சுவையுங்கள் வாசகர்களே! மொத்தத்தில் சுவைக்கவும், சிந்திக்கவும் உரிய அருமையான கவிதைகள் இங்கே உள்ளன. வாழ்த்துகளும், பாராட்டுகளும்.

**பொ. கனகசபாபதி**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொங்கு தமிழிற் பூத்த கவிதைகள்
## கலாநிதி கவிநாயகர் வி. கந்தவனம்

'உலகுக்கு உழைப்போம்' என
விழுமிய நண்பன் மிகுநலப் பண்பன்
தங்கராசா சிவபாலு தனது
பொங்கு தமிழிற் பூத்த கவிதைகளைச்
சேர்த்தொரு நூலாய்ச் செந்தமிழ் மடியில்
வாழ்த்தி வணங்கி வைத்திட வந்தான்!

மகிழ்வாழ் அன்னை வன்னி வளத்தை
தகவே கண்டு தமிழரும் மகிழ்வர்!
கூட்டங்களிலே அவர்நா கொழிக்கும்
பாட்டைக் கேட்டுப் பலமுறை மகிழ்ந்து
மெச்சி நல்ல கவிகளை விரைவில்
அச்சில் ஏற்றுக என்றே அடியேன்
சொல்லி வந்தேன் துணிந்தான் நண்பன்
வல்ல பணியில் வளர்வான் வாழ்க!
எழுத்துத் துறையில் 'குமுளன்' என்றும்
பழுத்த 'தங்கபாலு' என்றும்
கட்டுரை விமர்சனம் கதைகள் நாடகம்
கட்டுக் கடங்காக் கவிதைகள் என்றே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மறைமுகமாகத் தமிழை வளர்த்து
சிறகுகள் அடித்த சிவபாலுச் செம்மல்
கல்வியில் வல்லான் கலைகளில் வல்லான்
சொல்லில் வல்லான் சொல்வதில் வல்லான்
அல்லல் இல்லா அழகிய நெஞ்சைச்
செல்வச் சிரிப்பால் திறந்தே காட்டுவான்
விடுதலை உணர்வு மிகுந்தான்
துன்பியல் கண்டு துன்பப் படுவான்
அள்ளிக் கொடுப்பான் ஆதரவளிப்பான்
பள்ள நீர்போற் பாயுஞ் சமூக
உணர்வினை யெல்லாம் ஓசைத் தமிழில்
அணியெனத் தந்தான் அள்ளி
மணிமகன் வாழ்க வளர்கநற் றமிழே!

- வி. கந்தவனம்

UNIVERSITY OF PERADENIYA
14 SEP 2004
LIBRARY

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

UNIVERSITY OF PERADENIYA
14 SEP 2006
LIBRARY



# சிறப்புரை

ஒருவன் காணும் காட்சி, கேட்கும் செய்தி அவனின் உள்ளத்தில் சில தாக்கங்களைக் கொடுக்கிறது. அந்தத் தாக்கங்களின் ஆக்கம் பல வடிவங்களில் வெளிப்படுகின்றன. அவை சிற்பங்களாக, கவிதைகளாக வருகின்றன. சில வேளைகளில் நிகழ்வுகள் யாவற்றையும் ஒன்றிணைத்து நாடகங்களாகவும் காட்டுவர். கவிதையான பாடல்கள் பலபடி வெளிவருகின்றன. பழந்தமிழ்ப் பாடல்கள் செய்யுள் வடிவில் அமைந்துள்ளன. அவற்றிற்கு இலக்கண அமைவு உண்டு.

செய்யுள் கவிதையானது, கவிதை — புதுக்கவிதை, ஹைக்கூ, நறுக்கு எனப் பலவகையான புது வடிவங்களைப் பெற்று, மரபு என வந்துள்ளது. நவீன மரபாகிய புதிய கவிதை உரைநடையினை எதுகை மோனை போன்ற சீர், அமைப்புகளைக் கவனப்படுத்தி எழுதப்படுகின்றது. வஞ்சிப்பா, கலிப்பா, ஆசிரியப்பா போன்றவற்றின் அமைப்பு நவீனத்தின் அமைப்பில் இருக்கின்றது எனலாம்.

மரபுக்கவிதையில் இலக்கணம் இருக்கும். பழந்தமிழ் மாட்சி பெறும்! நவீனத்தில் எதுகை மோனை இருக்கும். நடைமுறைத் தமிழ் ஆட்சியில் அமையும். பிறமொழிக் கலப்பு நவீன கவிதையில் சரளமாக இடம்பெறும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நவீன கவிதைக்கு முன்னோடியாக விளங்கியவர் புரட்சிக்கவி சுப்பிரமணிய பாரதியார். பாரதியார் உடனிருந்த பாவேந்தர் பாரதிதாசன் அதனைப் பின்பற்றினார். இவர்களின் தாக்கத்தால் நவீன கவிஞராக விளங்கியவர் கவியரசு கண்ணதாசன். இவர்களைத் தொடர்ந்து பலரின் பட்டியல் நீளும்!

பேராசிரியர் சுந்தரம்பிள்ளையின் மனோன்மணியம், ஆங்கிலக் கவியரசர் சேக்ஸ்பியரின் மரபைக் கொண்டது. மனோன்மணியம் கூட பழைய மரபிலிருந்து பரிணாம மாற்றத்தைக் கொண்டு விளங்குவதாகும். இந்நூல் ஆசிரியர் தங்கராசா சிவபாலு பல கவிஞர்களின் தாக்கத்தைப் பெற்றிருந்தாலும் யாருடைய சாயலுமற்ற தனித்துவத்தைட் பெற்றவர். இவரது கவிதைகளில் இலக்கணம் இருக்கும். அதனால் மரபுக்கவிதையல்ல. எதுகை மோனை எளிமையாக இருக்கும். கவிதையின் அழகுக்கேற்ப பொருளுக்கேற்ப அணிக்கேற்ப மணிக்கேற்ப சொற்கள் தவழும், விளையாடும்.

அவரது கவிதைகளில் கவிஞர் கண்ணதாசனின் தமிழும் பட்டுக்கோட்டை கல்யாண சுந்தரத்தின் தத்துவமும் மிளிரும். ஆனால், இவர்களின் தாக்கம் அவரிடம் இல்லை.!

ஆசிரியராய், அதிபராய், கொத்தணி அதிபராய் இருந்த அனுபவம் தத்துவங்களாக அவர் கவிதைகளில் மிளிர்கிறது. சட்டத்துறை, கலையியல் முதுமாணிக் கற்கையால் பெற்ற அறிவு சிவபாலுவின் கவிதைகளில் தெரிகிறது.

சிவபாலுவுக்குச் செய்யுள் இயற்றுவதில் மிக்க நாட்டம் இருந்தது. பட்டப் படிப்பின் போது படிப்புக்காகப் பெற்ற அறிவோடு மேலும் சிலப்பதிகாரம், மணிமேகலை மற்றும், சங்க இலக்கியங்கள், கம்பராமாயணத்தோடு பிற்காலக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவிதைகளையும் படித்தார். மனத்துக்குள் ஓர் ஒழுங்கைப் பெற்றார். தொல்காப்பியம், நன்னூல் போன்றவற்றையும் தெரிந்தார். இத்துடன் செய்யுள் இலக்கணம் கொண்ட அமிதசாகரர் இயற்றிய யாப்பருங்கலக்காரிகையும் கற்றுத் தேர்ந்தார். இவற்றால், மனத்துக்குள் மரபுக் கவிதையின் வழிமுறைகளை நிறுத்தி நின்றார்.

பாரதியார், பாரதிதாசன்,கண்ணதாசன் போன்றோரின் நூல்களுடன் அன்றாடம் வெளிவரும் கவிதை நூல்கள் சிலவற்றையும் கற்று நவீன கவிதையின் நிலையினையும் புரிந்தார்.

'நூலோர் தொகுத்தவற்றுள் எல்லாம் தலை' எனக் கூறுவதுபோல மரபும் நவீனமும் அவர் கவிதைகளில் நர்த்தனம் புரிவதை உணரக் கூடியதாக உள்ளது. சிவபாலு பாணி ஒரு தனிப் பாணி எனச் சொல்லும் அளவிற்கு எவரின் தாக்கமும் இல்லாது தனித்துவம் பெற்றுள்ளது இவரது கவிதைகள்.

கோயிலுக்குக் கொண்டுபோகும் பூக்கூடையில் அதிகம் செவ்வரத்தம் பூக்கள் இருக்கும். வெறும் பொன்னொச்சி போன்று மலர்கள் இருக்கும். அடுக்கு நந்தியாவெட்டை, ரோசாப் பூக்கள் அதிகம் இருக்காது. ஆனால், நந்தியாவெட்டை, ரோசாப்பூக்களை பிறப்பாக எடுத்து, கவனப்படுத்தி சிறப்பாகச் சாமிக்குச் சாத்தும் பழக்கம் ஐயரிடம் உண்டு. அதேபோலத்தான் சிவபாலுவின் கவிதைகளும்! அடுக்கு நந்தியாவெட்டை, ரோசாவைப் போல் கவனப்படுத்திப் பாதுகாக்கப்படுபவையாகும். ரோசா, நந்தியாவெட்டையில் நறுமணம் இருப்பதுபோலச் சிவபாலுவின் கவிதைகளில் அழகிருக்கும், எழில் இருக்கும், தத்துவம் இருக்கும், படிப்பினை இருக்கும்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவபாலுவின் வாழ்த்துப்பாக்கள் கண்ணாடிச் சட்டம் போட்டுப் பாதுகாக்கப் படுகின்றன. அதிலும் திருமண வாழ்த்துப்பாக்கள் விரும்பி ஏற்றுக்கொள்ளப்படுபவை. மற்றும் சமூக சீர்திருத்தப் பாடல்களோடு அஞ்சலிப் பாடல்களும் அருமையாக எழுதுவதுண்டு.

சிவபாலுவின் கவிதைத் தொகுப்பு நூலகத்தில் இருக்கவேண்டியது. வாசித்து மகிழ வேண்டியது. அவரது சொல்லாட்சி, தமிழின் மாட்சி படித்து இன்புற வேண்டியது. அவரது விருத்தப்பாக்கள் திருவாசகத்தைப் போல இசையுடன் படித்து இன்புற வேண்டியது. இந்நூல் பலருக்கும் பயனளித்து நல்வழி காட்டும் என நம்புகிறேன். மேலும் பல நூல்களை வெளியிட வாழ்த்தி, இந்நூலின் உயர்விற்கு என் பாராட்டைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**- அ.பொ. செல்லையா**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலகுக்கு உழைப்போம்!





## தாயே! நீ இன்றி...

எடுப்பு

நீ இன்றி எனக்கேது வாழ்வின் இன்பம் — தாயே
நீ இல்லாக் கணமெல்லாம் தீராத் துன்பம்
நீ இன்றி . . .

தொடுப்பு

உன்னிடத்தில் வேறொருவர் இல்லை அம்மா
என்னிடத்தில் நீயில்லாத் துயர் தானம்மா
நீ இன்றி . . .

முடிப்பு

என்துன்பச் சுமை எல்லாம் சுமந்தாய் அம்மா
உன் அமுத மொழியினிலே நனைந்தேன் அம்மா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேன் பாகு தெவிட்டாத சுவையல்லவோ
தமிழமுதத் தாலாட்டுப் பாட்டல்லவோ — தாயே
நீ இன்றி . . .

வேறு

இன்போடு நான் வளர அமுதூட்டினாய்
அன்போடு எனைத் தூக்கித் தாலாட்டினாய்
தென்போடு நீ இருந்து அறிவூட்டினாய்
நானாக வளர்ந்து வர வழிகாட்டினாய்
கனிவோடு எனைவளர்த்து ஆளாக்கினாய்
துணிவோடு நான் பாட இசையாகினாய்
அணியோடு நான் எழுதக் கருவாகினாய்
பணிவோடு உனைத் தொழுது கைகூப்பினேன்
பிணியான துயரோடு மலர் தூவினேன்
மணியான உன்னோசை என் காதிலே
தணியாத ஒலியாக நிதம் கேட்குதே
பணியாக எனைவாழ்த்தி வரம் தா அம்மா
சின்னப் பிள்ளையென வென்றும்
அன்புத் தெய்வ மாகினாய்.

நீ இன்றி .

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என் அழகே அமுதே



## எடுப்பு

அழகே அமுதே தேன் தமிழே
அகலாதென்றும் இருந்திடாயோ?

## தொடுப்பு

தித்திக்கும் அமுதே தமிழே
தேன்சுவைக் கவிபாட
தெவிட்டாதென் நாவினில்
வந்தருள் செய்திடம்மா
அழகே..

## முடிப்பு

தமிழே என்தாயே வாழ்ந்திடுவாய்
அமிழ்தாய் நாவில் துலங்கிடுவாய்
நர்த்தனம் புரிந்தே இருந்திடுவாய்
என்னோடு இணைந்தே இசைத்திடுவாய்
அழகே

என்வாழ்வில் ஒளிவீச வாழ்த்துகிறேன்
உன்னோடு உறவாடி மகிழ்ந்திடுவேன் என்றும்
இணைபிரியா தென்றும் நீ
அணைத்திடாயோ என் தமிழ் அமுதே
இசையால் பேசி இன்பம் தாராயோ
அழகே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வேறு

என்னை நீ பிரிந்துவிட்டால்
என் ஆவி பிரிந்திடாதோ?
என்மூச்சே உன்மூச்சாய்
வாழ்ந்திடுவேன் எந்நாளும்
இன்பச்சோலை அருகினிலே
இசைக்குயில் நீ வாராய்
இன்பம்பெற என்னை இங்கு
அணைத்து அமுதம் தாராயோ?

மழலை நான் பெற்றெடுத்து
ஆராரோ பாடிடவே
மாதே நீ அருள்தாராய்
மயக்கம் நீ தீர்த்திடம்மா
மயிலே நீ நடம் புரிவாய்
மனம் எந்தன் சிறைதனிலே
குயிலே உன் பாட்டிசையை
நிதம் இசைக்க வரம்தருவாய்
அழகே..

தென்றல் எனைத் தாலாட்ட
தனிமையிலே உன் அழகை
முன்றலிலே நான் இருந்து
இனிமையெல்லாம் சுவைத்திடவே
எந்தன் ஆசைக் குலக்கொடியே
கனிந்து இன்பம் தந்திடம்மா
உந்தன் ஆடல் என் நாவில்
உவந்தளித்து நடம்புரிவாய்
அழகே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

UNIVERSITY OF PERADENIYA
14 SEP 2006
LIBRARY

# உலகுக்கு உழைப்போம்



உழைப்பினை உறிஞ்சிடல் கண்டும்
உழைத்தவன் வீதியில் மாய்ந்திட— களைப்பினில்
உன்னவன் வீழ்ந்திட மானிட நேயம்
உன்னிடம் மறைந்த தெங்கோ?

சொந்த நாட்டிலே வாழ்ந்திட்ட போதினில்
பந்தம் மிகப்போற்றி சோம்பேறியாய் — நொந்தே
சந்தப் பொருள் பெருக்கியே வாழ
அந்த இதயமே போனதெங்கோ?

அன்னிய தேசமே அதனில் பெரும்
அநியாயம் நிலவுகின்ற போதில் — தன்னியம்
அறியாதுன் உதிரம் சொரிதல் இங்கு
அறிந்து மனிதம் வளர்த்திடுவாயோ?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

14 SEP 2006

ஒரு வேலை போதும் என்ற எண்ணமே
ஒரு போதும் உதித்ததுவும் இல்லையே—மானிடா
ஒரு நேரம் ஓய்ந்திடவும் முடியுமோ
ஒருவனுக்கும் இயைந்திடாத வாழ்க்கையே!

பல காத தூரம் நீயும் வந்துமே
பல வழியில் பொருள் தேடிய—உனக்கோ
பல இன்னல் தருகின்ற வாழ்க்கையே
பல காலும் வாழ்ந்திடல் தான் நியதியோ?

உன் உழைப்பால் உயர்ந்த நாடதோ
உன் முன்பே சிதைந்து அழிந்து—போகுதே
உன் அரிய வனப்பு மிக்க தேசமே
உன் உரு அழிந்து ஊனம் ஆவதோ?

பற்பல பேதங்கள் கொண்டுமே
பகுத்தறிவு இல்லாத வேலையே—மனிதன்
பாராள வேண்டும் என்ற ஆசையோ?
பாமரர்கள் அழிந்து ஒழிந்து போவதோ?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சித்திரைப் புத்தாண்டே விரைந்து வா !!



சித்திரைப் புத்தாண்டே சிறகடித்துப் பறந்துவா
சித்தமெலாம் களிகூர தேனோடு பால் சிந்த
தித்திக்கும் பொங்கல் முற்றத்தில் படைத்திடவே
தித்திப்பாய் வந்திடுவாய் சித்திரைப் புத்தாண்டே!

சிந்திய வியர்வைகள் நெல்மணியாய் மாறிவர
ஏந்திய உழவனுள்ளம் உவகையிலே உலவிவர
பந்தசொந்தம் சேர்ந்து உறவாட விரைந்து
வந்துவிடு வசந்தகாலப் புத்தாண்டே!

பத்தரை மாற்றுத் தங்கமாம் நெல் மணிகள்
பத்தியிலே மூடைகளாய் உயர்ந்திருக்க
நெற்றியிலே திலகமிட்டுக் கொண்டாட
ஏற்ற நன்நாளினிலே வந்துவிடு புத்தாண்டே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்ன ஊஞ்சலிலே ஊரெல்லாம் உவக்க
வன்னக்கிளி போல் நாம் பறந்தே சின்ன
கன்னக் கதுப்பினிலே கனிவழகு விளையாடிவர
என்ன தாமதமோ சித்திரைப் புத்தாண்டே!

ஆலமர நிழலிலே கிளித்தட்டு விளையாட
ஆலாய்ப் பறந்திடுவர் இளசுகளோ ஆலோலம்
மேலாய்க் களித்திடுவர் வயோதிகரும் கூடவே
வேலாய் ஒளிவீசி வந்துவிடு விரைவாக!

காகக் கூட்டினிலே சோலைக்குயில் முட்டையிட
ஆகக் குஞ்சுகளாய் கூட்டினிலே அடை காக்க
மாகக் கவிபாடி பறந்தே குயில் இசைக்கும்
ஏகக் குரலோசைச் சித்திரையே வந்துவிடு!

மான்குட்டி மருவியோட மரைகளுமே விரைந்தோட
தேன்குவளை மலரிடையே நீராட சித்திரைப்பெண்ணே!
தேன்கமழும் வசந்தத் தென்றலிலே திளைத்திடவே
ஏன்இன்னும் தாமதமோ? வந்துவிடு விரைவாக!

உற்றார் உறவுகளின் ஒன்றாகச் சுவையாகும்
உற்ற சீனிஅரியதரம் சிற்றுண்டி வாய்ப்பன் மாற்றாய்
ஏற்ற நல் பயிற்றம் பணியாரம் கடலை உழுந்து வடை
முற்ற முறுகிய முறுக்கும் புசித்திடலாம் சித்திரையே!

நித்திரைக்குப் போனாலும் உன்நினைவு மாறுதில்லை
எத்திரையைப் பார்த்தாலும் உன்தோற்றம் கண்திரையில்
மத்திரையைக் கேட்கும் ஒலியுடனே இருள்நீங்க
சித்திரையே நீவருவாய் புத்தாடைட் நாம் அணிவோம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புத்தம் புதிதாகக் காசுபணம் கைவிசேடம்
சுத்தம் சுகமாகப் பெரியோர்கள் தந்துவிட நித்தம்
மித்தம் மீதமாகச் சல்லிமூட்டி நிரப்பிடலாம்
சித்தம் சிறகடிக்க வந்துவிடு சித்திரையே!

மானின் மருட்சியிலே மயிலின் ஆடலெல்லாம்
தேனின் மொய்வண்டு திணறிக் கிறங்கும் வானின்
வேனில் இளம்பொழுது வசந்தப் புத்தாண்டே
கானில் மயிலாடக் களித்திடவே வந்திடுவாய்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விவசாயி



உழவர் நாங்கள் ஏர்கொண்டே பண்படுத்தி நிலமதனை
உரமிட்டே நெல்மணிகள் விதைத்திடுவோம் வயலினிலே
வரம்பு கட்டி நீர்பாய்ச்சி வளர்த்திடுவோம் பயிரதனை
வரை வரையாய் அரிவி வெட்டி சூடுவைப்போமே

களத்தினிலே மாடுகட்டி மிதித்திடுவோம் நெற்கதிர்கள்
களத்துமேட்டில் ஏறிநின்றே பொலியோ பொலியெனவே
களத்தருகே பொலிக்கொடியை நயமாக நாமகற்றி
களப்போரை நாடிநின்றார் நலமடைய வழங்கிடுவோமே

தைபிறந்தால் வழிபிறக்கும் விவசாயி வாழ்வினிலே
வையம் விடிந்துவர புதிரெடுத்தே வந்திடுவோம்
தைப்பொங்கல் பொங்கிடவே தந்திடுவோம் புத்தரிசி
தையலரும் சேர்ந்திங்கே கொண்டாடுவோம் உழவர்விழா!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வேறு

பாரினிலே புதுமையினைப் படைத்து நிற்பான் விவசாயி
ஊரினிலே பட்டினியை நீக்கிவைப்பான் உபகாரி
ஏரினிலே காலத்தைக் கழித்திடுவான் கருமயோகி
காரினிலே காத்திடுவான் நெல்மணியை பெரும்போகி

நன்செயாம் நிலமதனை நாடிநிற்பான் விவசாயி
நன்மைகளே செய்திடுவான் நாட்டுக்கோ நலமாக
நன்றெனவே ஊரினிலே பகுத்தளிப்பான் விளைபயிர்கள்
நன்றிகொண்டே படைத்திடுவான் நலமான புதுப்பொங்கல்

வாழ்க வாழ்க வாழ்க என்றே வாழ்த்திடுவோம்
வாழ்வளிக்கும் விவசாயி நீடூழி வாழ்ந்திடவே
வாயார வாழ்த்திடுவோம் நலம்பெறவே விவசாயி
வானம் இரந்து என்றும் வாழ்ந்திடவே எந்நாளும்

உழுதுண்டு வாழ்வதற்கே ஒப்பேது உலகினிலே?
பழுதுண்டோ அவர் பணிக்கே உலகினிலே எந்நாளும்?
வழுவுண்டோ அவர் பணியில் நாம் காண எப்போதும்
தொழுதுண்டே போற்றிடுவோம் உழவர்பணி பாரினிலே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காதல் இன்பம்

கிள்ளை மொழியாளின்
துள்ளல் கவிப் பாடல்
வெள்ளை உள்ளமதில்
உள்ளிப் பூடாக
வெள்ளிப் பூவென்ன
உள்ளத்து உறவுகளை
அள்ளிப்பருகி இன்பம்
மெல்லக் குதூகலிக்க
தள்ளிப் போகாமல்
உள்ள வேலியோரம்
நள்ளி வளைந்துவரும்
உள்ளக் கமலத்தாள்
பள்ளிப் பருவத்தே
கிள்ளி விளையாடிய
வள்ளல் மாமாவின்
வள்ளிக் கொடியாளை
தள்ளிப் பார்க்காமல்
தெள்ளும் முகத்தழகு
அள்ளிப் பருகிடவே
கள்ளக் கருக்கலிலே
பள்ளம் படுகுழிகள்
முள்ளுக் கம்பிவேலி
குள்ளக் கால்தூக்கி
தள்ளி அடிவைத்தே
வெள்ளரிக்கொடி இடற
முள்ளிக் கீரைச்செடி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிள்ளி உதிரத்தை
மெல்ல ருசிபார்க்க
எள்ளவும் உணர்வின்றி
கள்ளச் சிந்தையெல்லாம்
விள்ளும் அவளெழிலில்
உள்ளம் நிரம்பி வர
கள்ள உளத்தோடு
மெல்லத் துணிவின்றி
முள்முருக்கம் மரமேறி
உள்ளம் உடலெல்லாம்
துள்ளி உதிரம்வர
உள்ளம் உறைப்பாக
தெள்ளத் தெளிவாக
கள்ள விழியாளைக்
கள்ளக் கவிபாட
உள்ளக் கமலத்தை
எள்ளிப் பார்த்திடவே
தள்ளிப் பிரித்து இழை
கள்ளக் கருவிழிகள்
மெல்லக் கதைசொல்ல
வெள்ளி வெளிச்சத்தே
அள்ளிச் சுவைத்திடவே
பள்ளிப்பிராய நினைவுகளை
மெள்ள இரைமீட்டு
கொள்ளை இன்பமெலாம்
மெல்லத் துய்த்திடவே
உள்ள சருகெல்லாம்
துள்ளி ஒலிஎழுப்ப
துள்ளிக் குதித்தோடி
உள்ளம் குதூகலிக்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org
598978

துள்ளி இடையசைய
குள்ள வாத்தினைப்போல்
தள்ளி அடிவைத்தே
வள்ளிக் கொடியோரம்
வெள்ளை மாடொன்றை
துள்ளி விரட்டல்போல்
தள்ளி என்னருகே
கள்ள நோட்டத்தாள்
கள்ளக்கவின் உணர்வால்
உள்ளம் படபடக்க
தெள்ளி உணர்வசைய
கோளம் சுழல்வதுபோல்
கள்ள விழி சுழல
மெல்ல அணைக்கையிலே
தள்ளிமின்சாரம் குருதியிலே
துள்ளிப் பாய்வதுபோல்
உள்ளப்பீதியிலே உதடு
மெல்லத் துடிதுடிக்க
உள்ளியவள் அமுதம்
கிள்ளிப்பருக விளைந்திடவே
பிள்ளை என்றங்கே அத்தை
தள்ளி வருகையிலே
புள்ளிமானாய் ஓடிவிட
மெல்ல அடிஎடுத்து
கள்ளப் பாதையிலே
துள்ளும் மனத்தின் துடுக்கு
துள்ளி அடக்கித் திரும்பி
அள்ளிச் சுமையெல்லாம்
உள்ளத்து ஆத்திரமாய்த் திட்டி
மெள்ளத் தீர்த்தேன் மாமிக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கள்ளிவந்தாளே கலவிஇன்பம்
கிள்ளி எறிந்திடவே எனும்
கள்ள உணர்வோடு சாபம்
அள்ளி எறிந்து வந்தேன்!
துள்ளித்தவிக்கும் இதயத்தில்
கொள்ளைச் சோகங்கள்
உள்ளத்தில் கொண்டு
மெல்ல நடைபயின்று
தள்ளாடித் தள்ளாடி
கள்ளத் துடிப்பெல்லாம்
உள்ளத்தில் சோக முகிற்கூட்டம்
உருண்டு திரண்டுவர
அள்ளிச் சுமந்து நான்வரவே
உள்ளத்துப் பாசத்தால்
வெள்ளை உளத்தம்மா
பிள்ளை வாவென்றே
உள்ள உணவெல்லாம்
அள்ளிப் படைத்திருக்க
உள்ளே புகமறுக்கும்
கள்ள மனத்துடனே
அள்ளிப் பிசைகையிலே
கிள்ளி உணவெல்லாம்
கள்ளியவள் முகந்தெரிய
உள்ளத்து நினைவலைகள்
எள்ளிநகையாடச் செயலிழந்து
அள்ளித்திணித்தேன் வாயினிலே
உள்ளேபோகாது விக்கல்
தெள்ளிவர என்னஎந்தன்
வெள்ளைச் செல்லத்தங்கப்
பிள்ளையினை யாரவள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்ளம்வேக நினைந்தாளோ?
கள்ளியவள் கண்பட்டதுவோ?
உள்ளிப்பூடுகொண்டு சுட்டு
கள்ளங்களிக்கச் சூளுரைக்க
தெள்ளியவர் அறியாது
முள்ளுநெருடும் மனத்துடனே
அள்ளியே உண்டேனே
உள்ளே செல்லவில்லை
உள்ளநோய் தீரவில்லை
உளப்பசியால் மாண்டேனே
அள்ளும் விழியாளின் அசைவு
விள்ளி என் உளத்தை
கொள்ளை கொண்டதனால்
உள்ள இரவெல்லாம்
உள்ளம்தனை அடக்கி
புரண்டேனே பாயினிலே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

14 SEP 2006 LIBRARY

# எழுக வையகமே!

இரத்தம் உறிஞ்சும் ஆரவாரப் பேய்களாய்
புரக்கும் புவியின் பொதுமைகள் அழித்து
கரக்கும் குரலில் கடுகி விழித்து விஞ்சிய
அரக்கரை அழித்திட எழுக வையகமே!

கொடுமைகள் கொலைகள் அழிவுகள் என்றும்
தொடுமைகள் என்றே உலகின் வளங்களை
அடிமைகளாய் ஆண்ட பிசாசங்கள் உலகில்
பொடிகளாக்கி நொறுக்கிட எழுக வையகமே!

உலகை உறுத்தும் உட்பகைப் போர்கள் அமைதி
நிலவை மூடும் போர்மேகங்கள் என்றும் எங்கும்
செலவை உயர்த்தி மன்பதை சிதைக்கும் பேயைக்
கலைத்தே அழித்திட எழுக வையகமே!

உலகின் வளத்தை உறிஞ்சவே எண்ணி
அலகின் நஞ்சம் கொண்டுமே ஆடும் அரக்கர்
விலகின் அழிக்கும் அணுவின் மோகம்
துலக்கியே அழித்திட எழுக வையகமே!

மருத்துவ மின்றி பச்சிளம் பாலகர் மாள
கருணையே இன்றி போர்க்கொடி உயர்த்தித்
கருத்திலே வளங்களைச் சுரண்டி யழிப்போன்
நெருப்பிலே தூக்கி எறிந்திட எழுக வையகமே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உணவே இன்றி ஊனமுற்று நடைப்பிணமாக
குணமே யற்ற மாந்தர் நாடு சுடுகளமாக்கி
பிணங்களைக் குவிக்கும் அரக்கரை அழிக்க
கணமேனும் ஓயாமல் எழுக வையகமே!

தேசத்தில் பகைமைகள் தானே தோற்றிட
வேசத்தில் பணத்தை அள்ளியே வீசி இன
துவேசத்தில் நாட்டைச் சிதைத்திடும் இலாப
நேசத்தை அழித்தொழிக்க எழுக வையகமே!

குள்ள நரிக்கூட்டமாய்க் குதறித் தின்னும்
கள்ள மானிடர் உதிரத்தை உறிஞ்ச
கள்ளத் தனமாய்ச் சிந்தைகள் கொள்ளும்
எள்ளுநரை ஒழிக்க எழுக வையகமே!

ஏழ்மையை நாட்டினில் விதைத்திடும் வீரர்
தாழ்மையே நாவில் கொண்டிடும் சூரர்
பாழ்மனப் பகைமையே பாட்டாளி மீது
கீழ்மைக் கயவரை அழிக்க எழுக வையகமே!

எழுக ஏகாதிபத்தியத்தை விரட்டியே ஒடுக்க
எழுகடற் கப்பால் துரத்தியே அடிக்க
அழிக்கப் பகைவர் அடிகள் தொழுவார்
சூழுமமைதி இதனால் எழுக வையகமே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமைதியும் மகிழ்வும்

பஞ்சமும் பட்டினியும் பரிதாபச் சாவெல்லாம்
விஞ்சும் விதமாக மலிந்தே வருகுதையா— நஞ்சாய்
அஞ்சும் விதமாக வாட்டுதையா எம் மனத்தை
கொஞ்சம் அமைதி நிலவாதோ?

தஞ்சங்கள் கொண்டு தயவினிலே வாழ்ந்திடவே
நெஞ்சங்கள் வேதனையால் வேகப் — பஞ்சாய்
வஞ்சகப் பேய்கள் வெந்து சாம்பலாக
விஞ்ச அமைதி நிலவாதோ?

அமைதிவழி அடைந்திடலாம் இன்பமெல்லாம் இதை
சிதைத்தே ஆக்குகின்ற போரெல்லாம் — அமைந்தே
சிதைமீது போய்விட்டால் அமைதி நிலவிவரும்
வதைகளும் நீங்கி மகிழ்வாயோ?

போராட்டக் கெடுபிடிகள் ஆயுதக் குவிப்புகள்
ஏர்பூட்டல் நலிவடைந்து பட்டினிச்சாவுகளே— போரின்
திமிராட்டம் நீங்கிவிட்டால் சமத்துவமே மேலோங்க
கரகாட்டம் களியாட்டம் குதூகலமாம்!

இன்பம் பொங்கிவரும் அமைதி பிறந்துவிட்டால்
துன்பம் தேங்காமல் சிதைந்து விடும் — அன்பாலே
வன்மம் குறையும்; நோயகலும்; எங்கும்
இன்பமே பொங்கும் உயர்வாலே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குண்டு வெடிப்புகளும் என்றும் ஏவுகணைக்
கண்டு பிடிப்புகளும் நலிந்துவிட்டால் — குண்டாய்
விண்டுவரும் தொகைகள் வரவுசெலவினிலே
துண்டுச் செலவாகிடவே வாராயோ!

நல்லதோர் உலகம் போரில்லா உலகம்
வல்லதோர் உலகம் வந்ததே பலத்தால்.
தொல்லைகள் வந்ததே போரால், அமைதி
எல்லைகள் அழித்தே வந்திடாதோ?

இதயத் துடிப்பின் இயல்பைக் குறைக்க
இதமே வாழ்வில் அமைதியும் அன்பும்—அமைதி
உதயமே உலகின் உணர்ந்திடும் தேவை
அதர்மமே அமைதியைக் குலைக்காதே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொலைஞரே ஒழிக!

உட்பகை கொண்டு பிணந்தின்னிக் கழுகாய்
வாட்பகை நிதமும்கொண்டு அழிக்கிறார் போரால்
ஆட்பகை சேர்ந்து அமெரிக்கப் படையோ
வெம்பகை கொண்டே அழிக்குதே உலகை

போரிலா உலகைக்காண உலகமே கூடிநிற்க
நேரிலா அற்பன் அழிக்கவே திடமும்கொண்டான்
நரிநிகர் நயவஞ்சகன் கொலைவெறி பிடித்து
சரிதத்தின் கறையாய் அழிக்குதே மனிதம்

வரலாறு புகழும் என்றதோர் எண்ணந் தானோ
குரலாறு புகுந்தே ஒலிக்க நிதானமே இழந்தாய்
மரணமே உன்னைத் தழுவும் ஹிட்லருக்கு
நிகரோ பஞ்சமா பாதகனே அழிக!

கோமாளிக் கோலம் கொண்டே தன்னுணர்வற்று
ஏமாளிப் பேயாய் தன்னிலையிழந்து மன்பதை
பேமானி யாகக் குருதி குடித்துக் குதறுமுமை
தாமாக வளர விடுமோ உலகு?

உலகமே உரக்கக் கூவ உன்செவி செவிடோ?
கலகமே புரக்க போர்க்களம் புகுந்ததேனோ?
பலமதாய் அறமே தவிர்த்த கொலைகள்
நிலமதில் செய்த கொடிஞனே வீழ்க!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போரிலா உலகைக் காணப் புதுமைகள்
தாரிலா வேந்தனாய் இந்தியப் பிரதமர் நேரு
எகிப்திய ஏந்தல் நாஸர் இணைத்த உலகை
உடைத்து நொறுக்கிய கழுகே வீழ்க!

மன்பதை அழிக்கும் இரசாயனப் பூச்சாண்டி
மன்னிக்க முடியாப் பொய்ம்மையே உரைத்து
மின்னலாய் ஆயுதம் குவித்து குண்டுகள்பொழிந்து
கன்னமிட வழிகள் செய்தவன் வீழ்க!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வளங்கள் வல்லானுக்கோ?

இறைவன் அருளினன் நன்றே வாழ
குறைவிலாச் செல்வம் குவலயம் ஆள
மறைவிலா தொளிரும் இயற்கை வாழ
நிறைவாம் கனிப்பொருள் மாந்தருக்காக!

கறையொடு வாழும் மாக்களாய் மாந்தர்
உறையொடு வாளை உருவியே மாய்த்து
குறையொடு பொருளெலாம் தமக்கேயாக்கி
முறைகெட வாழ்தல் நன்றோ அவர்க்கு?

உலகின் செல்வம் உரியவரிடத்தில்
விலகிட மெல்லக் கவர்ந்தே பறித்து
நிலத்தில் மேலாய்க் கொடுமைகள் புரிந்து
புலனெலாம் வஞ்சனை கொள்வதும் அறமோ?

சிலியின் செல்வம் கவர்ந்திடத்தானே
கிலியென அரண்டே படுகொலை நிகழ்த்தி
புலியென பினஷே பொம்மையே யாக்கி
வலியெனச் சுரண்டியே தீர்த்தனர் நாட்டை

புதிரலை எழுப்பும் லெனினிசம் மாள
அதிரலை எழுப்பி கொர்பச்சேவ் ஏய்த்து
சதிரலை தழுவி ருசியம் உடைத்து
எதிரலை இன்றி மாய்க்கிறார் உலகு!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆகா அந்தோ மானிடத் தழிவு புரிகிறார்
ஓகோ என்றே பூச்சாண்டி காட்டி மாந்தர்
வேக மேலாய் நச்சுக் குண்டுகள் வீச
சோகக் கடலில் வீழுதே உலகு!

முதலைக் கண்ணீர் தாரையாய் வடித்து
குதலைகள் மாதர் மாய்த்துமே யழித்து
சிதலைகள் ஆகி பிணவாடையே வீச
நித்தமும் அழிக்கின்றார் உலகு!

ஈராக் எண்ணெய் வளத்தைக் கவர
சாராக் கொள்கை ஐநா தன்னில்
மாறாய் நின்றே போரைத்தொடுத்து
சாறாய்ப் பிழிகிறார் மன்பதை தானே!

எண்ணெயே குறியாய் இரவும் பகலும்
கண்ணையே வைத்து வஞ்சனை கொண்டு
விண்ணையே அதிரப் பொய்ம்மையே பேசி
மண்ணையே குருதியில் நனைத்திடலாமோ?

உடையும் உணவும் உள்ளமும் தருவேன்
அடையும் வரையும் எஞ்சி இருந்தால்
படையும் பங்கும் எனக்கே எனக் கூறி
உடையும் மக்களை வதைத்திடலாமோ?

சிறிசுகள் மூளைகள் சிதறியே பறக்க
பெரிசுகள் மூலையில் சுருண்டுகிடக்க
ஊர்திகள் குண்டில் நாசமாய் அழித்த
உதிரி விடுதலை தருவான் யார்க்கோ?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிணந்தின்னிக் கழுகுகளாக இதயமே இன்றி
கணந்தனில் அழித்தே குவிக்கிறார் மன்பதை
மணந்துமே இரத்த ஆறுகள் பெருக
உணர்ந்துமே சிதைக்கிறார் உலகு!

வல்லவர் யாமே வலிமையும் நாமே
நில்லவர் பணிக்கே என்றே உலகை
கல்லவர் உளத்தால் வதைக்கின்றாரே
புல்லவர் மாய்ந்திடும் நாளும் வராதோ?

அநுபவிக்கப் பிறந்தவன் அமெரிக்கன் தானோ?
உபயோகிக்க வல்லவன் வெள்ளையன் தானோ?
உலகின் பெருவளம் சுரண்டி உறிஞ்சிட
உலகே இனியும் மௌனம் கொண்டிட லாமோ?

அடிக்கு மேல் அடித்தால் பொறுத்திட லாமோ?
அடிபட்டு மேலும் அடிமையாய் வாழ்ந்திடல் ஏனோ?
சுடுபட்டு வீணே மாய்த்திடல் மன்பதைக் காகுமோ?
விடுபட்டு நலமே வாழ்ந்திட இணைந்திடு உலகே!

தானும் தீண்டாப் பொருளும் தந்துனை ஏய்த்து
மின்னும் மாயா சால மாயமே காட்டி
தின்னும் பொருளைக் கடலிலே கொட்டி
மன்பதை அழிவைத் தடுக்கத் தாமதம் ஏனோ?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முதியோர்

உலக வாழ்வில் இயல்பினிலே
விலக இளமை முதுமைவரும்
அகல உளத்தின் நினைவலைகள்
சகல உறவும் குன்றிவரும்

பிள்ளை வாரிசு என்று இன்பம்
கொள்ளை ஆசையாய் வளர்த்திங்கு
தள்ளி நடையும் போடுகையில்
உள்ளான் பிள்ளை என்றிருப்பர்

நன்றே நினைவாய் வாழ்வினிலே
அன்றே நினைத்து நயங்களெல்லாம்
இன்றே செய்து இருந்திடலே பெற்றோர்
என்றே கடன்களும் உயர்வாய்ச் செய்வாரோ

கனடா வந்து சேர்ந்தவரோ
தேனடா எந்தன் நாட்டினிலே
ஏனடா வந்தோம் என்றிங்கே
கானடா இராகம் இசைக்கின்றார்

பெற்றவர் படுகிறார் துன்பங்கள்
உற்றவர் தடுத்திடார் துயரங்கள்
நற்றவர் எவரின் உதவியுமின்றி
வேற்றவர் ஆகியே வாழ்கின்றார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தந்தையை தாயை அழைத்திங்கு
தன்னிலை தன்னைப் பார்க்கின்றார்
வந்தவர் மழலைகள் பராமரிப்பில்
சோர்ந்தவர் சிறையாய் உணருகிறார்

சுற்றித் திரிந்த கால்களுக்கு விலங்காய்ப்
பெற்ற பூட்சுடனே கொட்டும் பனியில் ஏகாது
கற்றவர் உற்றவர் தொடர்பின்றி உழன்றே
உற்றமன அழுத்தத்தில் மாய்கின்றார்

தமர்க்காய் வாழ்ந்து வந்தவராம்
அவர்கள் செய்யும் செயல்களுக்கே
தாமாய் எல்லாம் ஏற்றிடுவர்
துயராய் ஒதுங்குவர் ஓரமாய்

பிறந்த மண்ணின் மரபினிலே
சிறந்த பண்பின் வளர்வினிலே
நிறைந்தே நின்ற நிலையினிலே
மாறாய்ப் பிள்ளைகள் காண்பாரோ?

குளிரில் குறுகி ஒடுங்குகின்றார் தம்
தளிரில் அன்பே சொரிகின்றார் அவர்
மிளிரும் கருத்தாய் இருக்கின்றார்
கேளிர் உறவின்றித் தவிக்கின்றார்

"*டேக்கெயர்*" காசும் மீதி என்பர்
"*குக்கெயர்*" எல்லாம் அவர்பார்க்க
"*அக்கெயர்*" ஏதும் இல்லாது அழுத்தம்
"*புல்கெயரா*"கத் தருகின்றார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்பாய் வளர்த்த பெற்றோரோ
என்பாய்த் துயரில் வாடுகின்றார்
உலையில் பானை நீர்போன்று
உள்ளம் வேகக் கொதிக்கின்றார்

தன்மதி மயக்கப் பிள்ளைகளோ
தயவாய் தாய் தந்தை பார்க்கின்றார்
நயமே செய்து அவருக்காய்
உயர்வாய்ப் போற்றி நிற்கின்றார்

தம்மைப் பெற்ற பெற்றோருக்கு
செம்மை செய்யா மக்களுக்கோ
இம்மைப் பொழுதில் அவர்மக்கள்
பொம்மை போன்று செய்திடுவர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ்த்தேன்
## சுவாமி விபுலாநந்த அடிகளார்

ஆவின் பால் நவைதவிர் சுவையாய்
பாங்குடன் மேவு கீழ்ப்பாலோரம்
காவின் நீங்கி வாவிபுரந்தே
ஏரின் ஓங்கு கால் நடை
சாலின் நின்றே ஏர்முனையீர்க்க
சிறந்தே ஓங்கு காரைதீவுப் பதி
கோலின் நிறைவில் நிலமகள் மடியில்
நெல்லின் நிறைகொள் மட்டுநகரே!

வேறு

மட்டு நகர் தரு கீழ்நாடு
சொட்டு தமிழ் ஒளிர் பேர்நாடு
முட்டு புகழ் பெறு நெய்தலிடை
விட்டுத் துலங்குது காரைதீவு
தொட்டு புகழ் தமிழ்க் கவிமணக்கும்
மிகு புகழ் கொண்ட விபுலாநந்தர்
சூட்டு புகழ் கொண்ட தீரத்திலே
வந்தே உதித்த வித்தகரே!

வித்தகர் வாழ் திருப் பொன்நாடு
விபுலாநந்தர் அவதாரத் திருநாடு
வித்தவர் தமிழ்த் தாயினுக்கே
பெத்தவர் உளங்குளிர் கதிர்காமச்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொத்தவர் மயில் வாகனனாய்
மெத்த ஓங்குநல் இன்தமிழ்
முத்தவர் செய் மொழிநூல்கள்
சொத்தவர் தமிழ் உத்தமர்க்கே.

கற்றவர் போற்றிடும் கனிவாளர்
மற்றவர் போற்றிடும் மறையாளர்
உற்றவர் ஏற்றிடும் உத்தமனார்
சாற்றுக் கவிசெய் பெரும் புலவர்
பெற்றவர் சாற்றிய மயில் வாகனராம்
மாற்று அவர் விபுலாநந்தர்
நற்றவர் தமிழ்த் தாயினுக்கோ
போற்று தினம் அவர் புகழ்ஓங்க!

வல்லவராகவே வாழ்ந்து நின்றார்
வானவர் போற்றவே ஏறிநின்றார்
சொல்லவராகவே துறவு கண்டார்
நல்லவர் உய்யவே நெறிகண்டார்
கல்லவராகவே நெஞ்சம் கொண்டார்
அல்லவரோடு வினைதொடுத்தார்
மெல்லவராகவே தோற்றம் தந்தார்
மேலவராகவே வழியும் தந்தார்

மானைப் பழிக்கும் மருள் உடையோன்
மயில் வாகனனெனும் கரு உடையோன்
தேனைப் பழிக்கும் மொழி உடையோன்
தெவிட்டாத சொல் வளமுடையோன்
சேனை நிகர்க்கும் படை உடையோன்
சிலைபோல் மாறாக் குணம் உடையோன்
வானைப் பழிக்கும் அருள் உடையோன்
விபுலாநந்தர் என்னும் தமிழ்த்தேனே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பானை புரக்கும் உண வுடையோன்
தானைத் தவவலி தான் உடையோன்
கோனைத் தகர்த்த கொடை உடையோன்
கோவைத் தமிழ்த் தேன் உடையோன்
மோனை முதுமொழி தான் உடையோன்
எதுகைத் தமிழ் நடை உடையோன்
யானைப் படையின் உவப் புடையோன்
தானைக் காரை தீவின் தவப்புதல்வன்

மானுடம் வாழ வழி சமைத்தோன்
மானிலும் மேன்மை எழிலுடையோன்
வானிடம் நிகர்க்கும் நெறியாளன்
நாவிலே சிறக்கும் சொல்லழகன்
தேனிடம் இல்லாச் சுவையழகன்
தேனிசைத் தமிழ் தருமழகன்
கானிடம் செல்லாத் தவசியவன்
களிகொள்ளும் அவன் பெயர்சொல்ல

உள்ளக் கமலத்து உத்தமனே எங்கள்
உள்ளமதைக் கொண்ட பெருமகனாம்
வெள்ளைக் கமலத்து வாணி அருளைக்
கொள்ளை கொண்ட மேதையவன்
பள்ளம் மேடெல்லாம் திரிந்தவனாம்
கள்ளம் கபடிலாத் துறவியாவான்
வெள்ளம் அடித்தாலும் அகலாத
தெள்ளு தமிழ்தந்த உத்தமனாம்

பனிமலை ஓரத்தில் பவனி வந்தார்
தனிமலையாகவே திகழ்ந்திருந்தார்
முனிமலை ஹம்சரின் அருள் நீந்தி நின்றார்
பெருமலை விவேகாநந்தரில் ஊறி வந்தார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கனிமலை விபுலாநந்தர் கற்பகத்தரு வானார்
தருமலைப் பெயர் ஏற்று நின்றார்
நனிமலை யாகவே நிலைத்து விட்டார்
அருள்மலை யாகவே திகழ்கின்றார்

பன்மொழிப் பண்டிதர் விபுலா நந்தர்
பாவளம் கைவந்த வல்லாளர்
நன்மொழி கொண்டவர் எங்கள் நந்தர்
நன்நிலை காட்டியே இலங்குகின்றார்
தன்மொழி என்றும் உயர்ந்த தென்றார்
மேன்மொழி தந்தே திகழ்கின்றார்
இன்மொழி உணர்ந்திட வைத்த நந்தர்
தேன்மொழிப் பாவலர் விபுலா நந்தர்

துள்ளித் திரிந்த இளமையிற் றானே
அள்ளிப்பருகத் தமிழைத் துடித்தவன்
மெள்ள வடபால் நகர்ந்தும் தமிழ்த்தேன்
தெள்ளி மகிழ்ந்த மேதையவன்
கிள்ளியே இசைஞானம் மேலாய்
நுள்ளியே பார்த்து உணர்ந்தவனாம்
தெள்ளியே யாழ்நூல் உலகினிற்கே
கொள்ளவே தந்த மேலாளன்

மட்டு நகர் உயர் திருத்தலங்கள்
விட்டு உயரவே தோத்திரங்கள்
கட்டுக்கடங்காது மாணிக்கப் பிள்ளையார்
தொட்டு வணங்கியே சுப்பிரமணிய சுவாமி
எட்டுபுகழ் கொண்ட இரட்டை மணிமாலை
தட்டு நிறையவே கோதண்ட நியாயபுரி
பாட்டுப் புகழிலே குமரவேள் நான்மணி
கணேச தோத்திரப் பிரபந்தம் தந்தோன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாவென வாணியை வேண்டியே
வாவெனக் குருதேவர் வாக்கியம்
ஆவென மகாலட்சுமி தோத்திரம்
கங்கையில் எழுதி விடுத்தவோலை
ஓமென நீரரிமகளிர் இன்னிசைப் பாடல்கள்
ஈசன் உவக்கும் இன்மலர் மூன்றுடன்
தேனென பல்இசைப் பாடல்கள் உலகியல்
விளக்கமொடு யாழ்நூல் தந்தனனே

பல்கலைக் கழகத்து முந்துதமிழ்
பேராசான் பணிகள் கொண்டனன்
சொல்கலைக் கழகத்தின் தலைவனாய்
பேரகராதி இயற்றியே நின்றனன்
தொல்கலை ஆய்ந்துமே முத்தமிழ்
இசைபட வாழ்ந்துமே ஒப்புயர்வின்றி
நல்கலைச் சிவானந்த வித்தியாலய முன்றில்
சமாதியாய் ஒளிர்தரு ஞானியவன்

பாரதிபுகழ் பாடியே அவன் ஒளி
நானிலம் புரக்கவே செய்தவனாம்
பொருள் செறிகவிதையாய் ஆங்கிலம்
சிறக்கவே மொழிமாற்றம் தந்தவனாம்
அருள் பெறும் கவிதைகள் தொகுப்பினிலே
விபுலாநந்தத் தேனுடன் கவிமலர்
நெறிதரு விபுலாநந்தச் செல்வ அமுதம்
பற்பல வெள்ளமாம் தமிழ் அன்னைக்கே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மெய்ஞ்ஞானத் துறவி

விஞ்ஞான விந்தைமிகு ஆசானாகி
அஞ்ஞானம் அகற்றவே பணிகள்பூண்டு
மிஞ்சியே அறிவொளி ஏற்றிய
மெய்ஞ்ஞான வித்தகத் துறவியாவான்

முத்தமிழின் சுவை தந்த விபுலாநந்தர்
வித்தகனின் இசை வல்ல புலமையிலே
அத்தமிழின் பெருமையுற யாழ்நூலியற்றி
உத்தமனின் பாதமலர் ஏற்றி நின்றான்

விவேகாநந்த பக்தியிலே பற்றுக்கோடாய்
விவேகமெலாம் வினைத்திறனில் திரட்டித்தந்து
உதிரமெலாம் ஊறிடவே உரைகளாற்றி
உள்ளமெலாம் இன்பமுற வைத்த மேதை

பொய்ஞ்ஞானப் பித்துரைத்த பித்தருக்கு
விஞ்ஞான விற்பன்னர் திறல்கள் காட்டி
மெய்ஞ்ஞான ஒளிபடர உரைகள் தந்து
அஞ்ஞானம் அகல்வித்த இளந்துறவி

இமயமலைச் சாரலில் விவேகா நந்தச்சுடர்
அமையச் சார்ந்த விவேகப் பேருரைகள்
தமையறியச் சான்றுதந்த விநோதமட்டுநகர்
உவகைதந்த சுவாமிபுகழ் ஏற்றுவோமே

மீன்பாடும் தேன்நாடன் விபுலாநந்தர் புகழ்
வான்பாடும் பொன்நாடாம் காரைத்தீவு ஈந்த
மான்ஓடும் கரைபுரளக் கயல்கள் துள்ள
தான்ஓரம் விரைந்த வோர்ஞானி அவன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நெய்தலொடு மருதம் இணைந்தங்கே இசை
ஆய்தலொடு புலமைமிகு தமிழறிஞர் மையல்
காய்தலொடு உவப்ப இன்தமிழ்த்தேன்
பெய்தலொடு ஓங்குபுகழ் விபுலாநந்தர்

பிரபுத்த பாரதம் இதழை இமயத்தில்
பிரமித்த கருத்தினிலே மெய்ஞ்ஞானம் தருவித்த
சரமித்த வேதாந்த கேசரியில் இன்தமிழ்
பிரமித்த ஆங்கிலமும் தந்தோன்!

வானோங்க ஈழத்து மட்டுநகர்ப் புகழ்பரப்பி
தானோங்க வேதமோதி இன்புடனே ஆன்மிகக்
கானோங்க பரமஹம்சர் அருள்கொண்ட
வானோங்கும் வரிசையமர் காரைநாடன்!

தமிழ்நாடன் பண்பாட்டின் பாங்கான மேலாளன்
அமிழ்த மொழி செயல் வல்லாளன் இமைக்
குமிழ் இணையா வியப்பினிலே ஆழ்த்தி
அமிழ்தளிக்கும் பேராளன் வாழ்கநாமம்!

சாந்தமெனும் உருவத்தான் மன்பதைக்கோ
காந்தமெனும் உள்ளத்தான் உவகை பொங்க
பாந்தமெனும் பற்றுடையான் உத்தமருக்கோ
வேதாந்த ஊற்றுடையான் உயர்க நாமம்!

பற்றறுத்த பாலகனாய்த் துறவுபூண்டு தமிழ்ப்
பற்றுடனே பாவலனாய் வலமே வந்து
சாற்றினனே கவிமழைகள் நயப்ப என்றும்
ஆற்றினனே உலகறியத் தமிழர்சால்பு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செழுங்கலைகள் ஓதி உணர்ந்த செம்மல்
அருங்கலைகள் அழிந்திடாது காத்தோன் விழுமம்
பெருங்கலைகள் நிலைத்து ஓங்க ஆக்கம்
தருங்கலைகள் நயந்தே தந்தோன்.

விபுலாநந்த வித்தகனின் வினைத்திறன்கள் ஈண்டு
விவேகானந்த பாரம்பரியம் உணர்ந்தே அன்பால்
வினோதத்தான் மயில்வாகனனே தமிழர் சால்பு
விதந்தே தந்தோன் நாமம் வாழ்க!

தந்தையிடம் கற்றுவந்த தமிழின் வாஞ்சை
விந்தையிலே நற்றமிழில் இயைந்த மஞ்ஞை
சிந்தையிலே அமர்ந்திருந்து கண்ட தஞ்சை
விந்தையாய் முனைப்புடனே தந்தான் நெஞ்சை.

அண்ணாமலைப் பல்கலைக்கழக முதற் பேராசான்
எண்ணாமலே தன்நாட்டில் பற்றுவைத்த நேசன்
விண்ணாலே மறைமலையில் பணிகொள் வாசன்
கண்ணாலே கருணைபொழி எங்கள் தாசன்.

இன்பமெலாம் இசையின் காதற் பற்றுக்கோடாய்
துன்பமெலாம் துச்சமெனக் கொள்ளும் பாங்காய்
கன்மமெலாம் கல்வியிலே கருத்து ஊன்றி
சென்மமெலாம் புகழ்ஓங்கு விபுலாநந்தர்.

இன்பமெலாம் இசையின் காதற் பிடியினிலே
துன்பமெலாம் துச்சமென ஊன்றுகோலாய்
வன்மமெலாம் கல்வியிலே கருதுகோளாய்
வின்ணெலாம் புகழ்ஓங்கு விபுலாநந்தர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விபுலாநந்தர் புகழ் பாடுவோமே

பாடுவோமே புகழ் பாடுவோமே
விபுலாநந்தர் புகழ் பாடுவோமே
ஆடுவோமே இணைந்தாடுவோமே
விபுலாநந்தத் தேன்பருகி ஆடுவோமே
கூடுவோமே ஒன்றாய்க் கூடுவோமே
விபுலாநந்தர் புகழ்பாடக் கூடுவோமே
நாடுவோமே எங்கும் நாடுவோமே
விபுலாநந்தர் புகழ் நாடுவோமே

எங்கள் நந்தர் அவர் எங்கள் நந்தர்
அருள் மழை பொழிந்த நந்தர்
திங்கள் ஆகத் திகழ்ந்து நின்ற நந்தர்
தித்திக்கும் கருவூலம் எங்கள் நந்தர்
மங்காப் புகழ் மணக்கும் ஞான நந்தர்
மகானாகத் துறவு கொண்ட நந்தர்
தங்கக் குணக்குன்று எங்கள் நந்தர்
தரணி புகழ் பாடுகின்ற எங்கள் நந்தர்

எட்டாப் புகழ் மணக்கும் கவிதையிலே
இனிதாய்த் தொட்டிடும் மனத்தினிலே
கிட்டாத இசைஞானக் கடலினிலே
திட்டாகக் குவிந்தது பாவினிலே
சிட்டாகப் பறந்து இசைத்த கீதத்திலே
எட்டாத புகழ் மணக்கும் தீரத்திலே
பட்டாகச் செந்தமிழின் சுவைஇனிமையிலே
கிட்டாத சுகமுண்டோ நாதத்திலே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கனடா விபுலாநந்தர் மன்று வாழ்க!

சந்ததமும் தமிழ் கொள்ள
அழகு தமிழ் வளர
விந்தைமிகு கலை ஓங்க
விழுமியங்கள் இயல் மலர
விந்தியமும் மகிழ்ந்து உயர்வெய்தப்
பணிதந்த காரை தீவுத் திருநாடன்
சிந்துதமிழ் சிறந்தோங்கு மட்டுநகர்
விபுலாநந்தர் மன்றம் வாழ்க

வேறு

விபுலாநந்தர்க்கோர் பெரும் விழா
விபுலாநந்த மன்றின் தனி விழா
வித்தகனாருக்கோர் அரும் விழா
வித்தகத் தமிழ் மொழி விழா

கனடாவில் கனி விழா
மானுடத்தின் மதி விழா
அன்பிடத்தின் அரு விழா
மன்சிறக்க மகிழ் விழா

விற்பனரின் வரு விழா
கற்பனரின் கனி விழா
சொற்பனரின் உரை விழா
பாவலரின் இசை விழா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏற்றம் மிகு எம் விழா
போற்றும் எங்கள் புகழ் விழா
சாற்றும் கவி மழை விழா
ஆற்றும் பணிமிகு விழா

இலக்கியத்தின் இசை விழா
இலங்குதமிழ்த் தனி விழா
முத்தமிழின் முழு விழா
செந்தமிழின் பெரு விழா

புலமை மிகு புதுவிழா
புன்னகையின் உதிர்விழா
தலைமை தரு தண்விழா
தன்னிகரில் தனிவிழா

என்றும் ஏற்றும் இயல்விழா
நின்று காணும் இசைவிழா
இன்றும் போற்றும் இன்விழா
இயல்பான நடனவிழா

வாழ்த்துகின்ற வருவிழா
வாய்க்கும் இன்பத் தமிழ்விழா
வாழ்க வாழ்க வென்று
வாய்நிறையும் பெருவிழா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என் கவிதை பிறந்த கதை

விடலைப் பருவத்தே கிளரும் மனவெழுச்சி
நடலை என்மனத்தைத் தகர்க்கும் கண் மடலை
படலை ஓரத்தே விழித்தொருகால் கண்வீசி
உடலை அசைத்திடவே காத்திருந்த காலத்தே

கம்பன் கவிக்கடலில் மூழ்கித் திளைத்திடவே
வம்பென் உதிரத்தில் பாரதியின் கருவினிலே
தெம்பன் பாரதிதாசன் புரிந்துரைகள் உளத்தில்
நம்பென் உணர்வுகளை என்றுரைக்கையிலே

தடல் புடலாய்த் தலைசீவிக் கோதி நெளித்து
கடல் அலைபோல் வாரி வகுத்திழுத்து நிழல்
படல் போலக் கன்னமீசை மினுமினுக்க
அடல் ஏறாய்க் கற்பனையில் மிதக்கையிலே

பார்வையின் பரிந்துரைகள் பலவிதமாய் இதயத்தில்
கோவையாய்ப் பகுத்துணர்ந்த ஓரையின் தேர்வைச்
சோர்வைநீக்கிப் பாவையின் மின்னலிடை நோக்கி
வேர்வை துளிர்த்திடவே உள்ளம் துடித்தவேளையில்

அலையலையாய் அவள் நினைவு மனத்தினிலே
மலை மலையாய் எழுந்து வரும் வேளை கலையாது
குலை குலையாய் உதிர்ந்த உள்ளத்துறவுகளில்
சிலை சிலையாய் உறைந்துவிட்ட வேளையிலே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடைக்கண் பார்வை ஒளிவீச்சில் திக்கித் திணறி
இடைக்குள் இடித்துரைக்கும் நளினத்தில் விடைக்கண்
தடைகள் எடுத்துரைக்க நிதானித்துத் தனிமையிலே
மடைகள் உடைத்தெடுத்து ஓடுகின்ற போதினிலே

என்னோடு உறவாட வாவென்று அழைத்திடவே
பொன்னேடு புதிதாகத் திறந்தே குறித்திடவே மின்னேடு
தன்னேடு மடல்திறந்து இயைந்து நின்ற அந்த
இன்னேடு நிறைத்திட உளம்விழை வேளையிலே

என் இதயச் சுமையெல்லாம் இறக்கிவைக்க வழியாக
மன்இனத்து அவலமெல்லாம் உளத்திருத்தி தான்
தன் விதியின் பாதைகளில் படிசிதறிப் போகையிலே
நன் மதியில் தமிழ்க்கன்னி காதல்கொண்ட வேளையிலே

நாவினில் நஞ்சும் நயவஞ்சகத்தில் விஞ்சும்
நாவினர் நயந்துரைக்கும் கொடுமைகளை நெஞ்சில்
வீரியம் வளர்த்த என் தாயின் தயவே
பாரினில் உரைக்கப் பிறந்ததென் கவிதை

இளமை துள்ளும் குளுகுளுப்பின் வனப்பில்
முழுமை அள்ளும் களிப்பின் விரைவினிலே
வளமைப் பார்வைக் குறிப்பினில் மறந்தே
பழகுதமிழில் பிறந்ததென் கவிதை

கன்னியவள் காலசைவில் இலக்கணமாய்
பின்னியிவள் என்நாவில் நர்த்தனமாய் — உன்னி
மின்னிமறைகின்ற மொழியழகின் அணைப்பினிலே
உன்னியவள் அழகியெனை மறந்தவேளை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மின்னல் வீச்சினிலே மிளிரும் மெல்லரும்பின்
கன்னல் கருவிழிகள் குறும்புப் பார்வை வீசி
பன்னீர் மலராக பல்வரிசை மின்னிவர
மெல்ல இதழ்விரியப் பார்த்திருந்த காலத்தே

உள்ளத்து உணர்வுகளை உலகுக்கே தந்திடவே
கிள்ளைத் தமிழ்மொழியாள் கடைவீச்சில் அள்ள
கள்ளத் தனமாக ஒருதலையாய் நான்கண்டு
உள்ளம் மகிழ்ந்திடவே பிறந்ததென் கவிதை

பள்ளக் குடியிருப்போன் பாடுபட்ட உழைப்பினிலே
தள்ளி மேட்டுக்குடியிருப்பான் உணவருந்தி ஏப்பமிட
கள்ளம் அறியாத உழைப்பாளி பட்டினியில் வாடும்
உள்ளக் குமுறலினால் பிறந்ததென் கவிதை

பள்ளன் பறையன் என்றும் சாதிகள் போற்றி
உள்ள உணர்வுகளைப் புறத்தாக்கி ஒதுக்கி வைக்கும்
கள்ளக் குணம் உடையான் கொடுமையினால்
துள்ளி எழுந்ததென் கவிதைத்தொடை

சாதி பேதம் ஏதையா எல்லாரும் ஓர்குலமே
மீதி பேதங்கள் இல்லையென உரைக்கும் சண்டாளரின்
நீதி தவறான நடத்தையைக் கண்கொண்டு
பாதி தெரிந்திடவே பிறந்ததென் கவிதை!

சேதி கேள் இன்று சேரிக்கு வாழ்வென்று
நாதி யற்றோர்க்கே இவ்வுலகுதான் என்று ஓதி
வீதிப் பேச்சாலே பெரும் மோசம் செய்வோரை
நாதியற அடித்து விரட்ட நினைக்கையிலே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேசத் துரோகிகளாய்த் திரிந்து தம் வயிற்றுப்
பாசத் திணிவுகளால் மனிதம்பலியாக்கி உடல்பெருக்கும்
நாசத் தரித்திரர்கள் எல்லாம் உயர்வாக
வேசம் இடுவோரை நினைக்கையிலே

நெஞ்சத்தைத் தேம்பவைக்கும் கண்ணீர் கதைகளாக
வஞ்சனை இல்லாதான் அண்ணாவி ஆள்வாரின்
விஞ்சும் கல்வெட்டின் கரையும் உள்ளத்தில்
பஞ்சாயப் பற்றிய பக்குவத்தில் பிறந்ததே என்கவிதை

மையல் கொண்டே தன் கனவுக்கினியாளை
மையமாகக் கொண்டே பாட்டில் வடித்துவிட்ட
தையல் அழகோவியத்தின் விந்தை மனத்தைத்
தைக்க வைத்த மகாகவியின் கவிதையாலே

வாய்ச்சொல்லில் வீரர்களை வீணர்களாய்க் காட்டி
வாய்ச்சவடால் புரிவோரின் முகம் கிழித்துச் சுட்டி
வாய்ப்பாகப் பேரரசாய் முண்டாசு முடிகொண்டு
போய்த் தமிழை உலுப்பி விட்ட கவிஞனாலே

வாக்களித்து அனுப்புதலே சனநாயகம் என்று
வாக்காக எத்தனையோ உறுதி மொழிகளையோ
நாக்கூசாது கூறிவிட்டு முதலைகளின் முதுகு
போக்காகச் சொறியும் நயவஞ்சகராலே!

காதலித்துக் கைப்பிடித்த கன்னியரைக் கைநீட்டி
காதகராய் நையப்புடைத்துவிட்டு மதுவிடமே விஞ்சும்
காதலராய் மாறி அவள்வயிற்றில் விதைவிதைத்து
காமுகராய்த் திரிவோரைக் காண்கின்றோமே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாய்முகமே பாராது தவித்தழும் பாலகரை
சேய்முகமே ஏதென்று தெரியாது தவிக்கவைக்க
நாய்முகமே கொண்டலையும் நயவஞ்சகக் கூட்டம்
பாய்முகத்தே பரிதவிக்க விடுகின்ற கதையாலே

வாஉனக்கு வேலை உணவும் இலவசமே
நாஅசைத்து இணங்கினால் சேர்த்திடலாம் பொன்னாக
தாஉனது உடலத்தை எனமோசம் செய்து
சாஉனக்கு வழியென்றுரைக்கும் ஈனர்களாலே

நன்றுநான் செய்வேன் என்னுடனே நீ இருந்தால்
இன்றுநான் சொல்வதெல்லாம் கேட்டுவிடு என்று
மன்றுதான் ஏறிச் சொல்கின்ற பேர்வழிகள்
நின்றுதான் ஏமாற்று வித்தை செய்தாலே!

நூலகரோ இசையேட்டை நினைவில் இருத்த
மேலவரோ தலையசைத்துத் தாளமிட
உலகவரோ இன்புற நினைக்கையிலே
பாலமுதாம் தமிழிசையைப் பாடி அகம்மகிழ்வேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எங்கள் நாடு

இன்பம் எங்கள் நாடடா
ஏன் எமக்கு வேறடா
துன்பம் நமக்கு ஏதடா
அன்பாய் வாழும் நாடடா

வேற்றுமைகள் பலதடா
ஒற்றுமையே கொள்ளடா
வளங் கொழிக்கும் நாடடா
வாழ நல்ல இடமடா

முன்னோர் வாழ்ந்த நாடடா
பின்னோர் தவழ்ந்த ஊரடா
என்னூர் இனிமை தானடா
இன்பம் பொங்கும் நாடடா

எம் இனத்தின் வீடடா
நாம் வாழ்ந்த கூடடா
நம் மவர் வாழும் உலகடா
வம்சம் அங்கே தானடா

இயற்கை வனப்பு மிகையடா
இயல்பே வாழ்வு தானடா
புயலே இல்லாப் பொழுதடா
அயலே உதவும் ஊரடா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிந்தும் பனியும் ஏதடா
முந்தும் உறைபனி யாதடா
சிந்தும் வியர்வை சுகமடா
முந்தும் விடியல் தானடா

இரவும் பகலும் ஒன்றடா
தரவும் ஒன்றே தானடா
வரவும் செலவும் பார்த்திடா
கரவும் இல்லா நாடடா!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மோகங்கொண்ட வெண்முகிலே

மோகங்கொண்ட வெண்முகிலே
தாகந்தீர்க்க கடல் கன்னியிடம்
வேகங்கொண்டு வந்தாயோ?
தேகமெல்லாம் மணித்துளியாய்
வியர்வையிலே நனைந்தாயோ?
ஆசைகொண்டே ஆர்ப்பரித்தாய்
மீசை முறுக்கேறியதோ?
கன்னியமுது ஊட்டினாளோ?
வெண்ணிறமே மாறியதோ?
கருமைதான் படர்ந்ததுவோ?
மருட்சியிலே மங்கையவள்
மாற்றந்தான் தந்தாளோ?
விருப்புமே கொண்டுநீயும்
விரைந்துதான் சென்றாயோ?
கோபந்தான் கொண்டாயோ?
ஊடல்கொண்ட நங்கையிடம்
கூடல்இன்பம் தந்தாயோ?
உடலமே நடுநடுங்க
இடிமுழக்கம் செய்தனையோ?
துடிதுடிக்க அதரமெல்லாம்
வேர்வைத்துளி வீழ்ந்ததுவோ?
கன்னியவள் குளிர்ந்தாளோ?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மீண்டும்வந்து தொட்டே
　　தீண்டி இன்பம் பெறுவதற்கோ
மல்லாந்தே உடல்விரித்து
　　உன்வரவைப் பார்க்கின்றாள்
ஓலமிட்டே அழுகின்றாள்
　　ஓடி நீ வாராயோ?
தாகம் நீ தீராயோ?
　　வறுமைதான் நீங்காதோ?
வெறுமைதான் அகலாதோ?
　　கொடுமைதான் நீங்காதோ?
குளிர்மைதான் தாராயோ?
　　இன்பத்தை மீட்டாயோ?
வறண்டுமே வாடுகின்ற
　　நிலமகளைப் பாராயோ?
பாசந்தான் கொள்ளாயோ?
　　மோசத்தைத் தவிர்த்திங்கு
இங்கிதமே கிடைத்திடவே
　　இயற்கைவளம் பெருகிடவே
முத்துமழை பொழியாயோ?
　　நாவறண்டு உடல்வாடி
நாதியற்று நாம் சாக
　　நாடுசுடுகாடாய் ஆகுமுன்பு
கோபத்தை நீவிடுத்து
　　சோகத்தைத்தான் உணர்ந்து
மன்பதை வாழ்வுயர
　　உயிரினமோ உலவிவர
தெய்வமே வருணனவன்
　　வாய்த்துவிட்ட புத்திரனே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புன்சிரிப்பை உதிராயோ
புல்லும்தான் தழையாதோ?
புழுதிதான் அடங்காதோ?
பசுமைதான் படராதோ?
பாவியர்தம் துயர்துடைக்க
"சேவியராய்" வாராயோ?
மேவியுயர் பயிரினங்கள்
பசுமைதான் கொள்ளாதோ?
புவிநங்கை புன்னகையில்
புல்லரிப்புக் கொள்வாளே!
புலர்ந்து இன்பம் தருவாளே
இன்னும் ஏன்தாமதமோ?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமைதிப்புறாவே விரைந்து வா!

சமாதானத் தூது செல்லும் வெண்புறாவே!
சாதகமாய் உலகு உய்யத் தூதுசெல்லாயோ?
புயலையே எதிர்த்து நின்றார் வெண்புறாவே!
பூவையரோ சீற்றம் கொள்ள வெண்புறாவே!
பூமியிலே விதை விதைத்தார் வெண்புறாவே!
பூ இதழை விரிப்பதுமேன் வெண்புறாவே!

தீ சுடரைக் கக்கிடவோ வெண்புறாவே!
தீ தின்றிக் காத்திடவே வெண்புறாவே!
சிறகடித்துப் பறந்து வா வெண்புறாவே!
சின்ன சின்ன ஆசைபெற வெண்புறாவே!
எப்போதுதான் நீவருவாய் வெண்புறாவே!
நாம் மகிழ்ந்து உலவி வர வெண்புறாவே!

எம் தேசம் வந்திடுவாய் வெண்புறாவே!
அமைதிதான் எம் வாழ்வில் வெண்புறாவே!
அமைந்துவிட்டால் நிம்மதியே வெண்புறாவே!
இன்பம் எமக்கு வேறுண்டோ வெண்புறாவே!
துன்பச் சுமைகள் எல்லாம் வெண்புறாவே!
வெகுதூரம் அகலாதோ வெண்புறாவே!

இனிய உன் வரவாலே வெண்புறாவே!
இதயம் இன்ப உவகையிலே வெண்புறாவே!
இன்பச் சோலையெல்லாம் வெண்புறாவே!
இனிதாய்க் களித்திடலாம் வெண்புறாவே!
தனிமைதான் விரைந்துவிடும் வெண்புறாவே!
பனிக் குளிரில் நடுங்கிடவோ வெண்புறாவே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாய் நிலத்தை நீங்கி வந்தோம் வெண்புறாவே!
உற்றார் உறவுகளோ வெண்புறாவே!
சுற்றம் சூழ்ந்திடவே வெண்புறாவே!
ஏற்றி இணைந்திருந்தோம் வெண்புறாவே!
ஏதம் இன்றி நின்றிருந்தோம் வெண்புறாவே!
சோகம் இன்றி வாழ்ந்திருந்தோம் வெண்புறாவே!

ஈனர்களின் செயல்கள் எல்லாம் வெண்புறாவே!
காணாமல் நாம் இருந்தோம் வெண்புறாவே!
தீனர்களாய் வந்துதித்தார் வெண்புறாவே!
தீராத துன்பம் தந்தார் வெண்புறாவே!
துயரம் சூழ்ந்த வாழ்வுதான் வெண்புறாவே!
துய்த்தே அல்லல் உற்றோம் வெண்புறாவே!

மாய்ந்தே மடிகின்றார் வெண்புறாவே!
மானிலத்து மாந்தர் எல்லாம் வெண்புறாவே!
பாலகரோ பாவையரோ வெண்புறாவே!
நூலகரோ போதகரோ வெண்புறாவே!
வயோதிகரோ வாலிபரோ வெண்புறாவே!
பேதம் இன்றி எம் இனத்தை வெண்புறாவே!

நிதம் அழித்தே ஒழிக்கின்றார் வெண்புறாவே!
போதும் என்றுணர்ந்தோம் வெண்புறாவே!
விரைந்தே போர் புரிய வெண்புறாவே!
ஆடவரோடு நிகராய்ப் அரிவையர் வெண்புறாவே!
மகளிர் அணிவகுத்தோம் வெண்புறாவே!
புதுமை படைத்துவிட வெண்புறாவே!

மெதுமை நீக்கி விட்டோம் வெண்புறாவே!
அச்சம் மடம் நாணம் எதற்கு வெண்புறாவே!
அசந்து தூங்கிடவோ வெண்புறாவே!
அந்நியர்க்கு அடிபணிந்திடவோ வெண்புறாவே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மறவர் குலத்துதித்தோர் வெண்புறாவே!
மானம் இழந்திடவோ வெண்புறாவே!

விடிவைத் தந்திடுமோ வெண்புறாவே!
விடியல் தோன்றிடுமோ வெண்புறாவே!
மடியில் சுமைநீக்கி வெண்புறாவே!
பிடியில் ஆயுதமே தூக்கிடவே வெண்புறாவே!
கடிதில் துணிந்து வந்தோம் வெண்புறாவே!
நெடிதில் போரிடவே வெண்புறாவே

தரையில் தலைசாய எதிரிப்படை வெண்புறாவே!
கரையில் காத்திருந்தோம் வெண்புறாவே!
எம் இனத்தின் விடியலிலே வெண்புறாவே!
நாம் பங்கு கொள்ள வந்தோம் வெண்புறாவே!
எம்மண்ணை மீட்டிடவே வெண்புறாவே!
எங்களுக்கு வலுவளிப்பாய் வெண்புறாவே!

அம்மண்ணில் குருதிதந்தோம் வெண்புறாவே!
செம்மண்ணில் புரளுகின்றோம் வெண்புறாவே!
எம் உரிமை மீட்டுவிட்டால் வெண்புறாவே!
போர் எதற்கு இவ்வுலகில் வெண்புறாவே!
ஏர் நிலமே காடாகியதே வெண்புறாவே!
தேர் ஓடும் வீதியெல்லாம் வெண்புறாவே!

ஊர் திரண்ட கோயிலெல்லாம் வெண்புறாவே!
வார் படர்ந்த பாலை நிலம் வெண்புறாவே!
யார் தருவார் அமைதி இங்கு வெண்புறாவே!
போர் தந்த அனர்த்தமெலாம் வெண்புறாவே!
ஆர்ந்து ஓய்ந்து போக இங்கு வெண்புறாவே!
அமைதி கொண்டு வாராயோ வெண்புறாவே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போராட்டம்

அன்னையின் கருவறையில்
முட்டிமுடங்கி இருந்தே
நண்ணிக் காலமதில்
மண்ணில் பிறக்கையில்
பிறந்ததும் தொப்புள் கொடியினை
அறுத்தும் உறவைப் பிரித்திட
வேதனை நிறைந்த போராட்டம்
உண்ணும் தாய்ப்பாலுக்காய்
அன்னையின் மடியினிலே
உன்னித்து எழுந்திருக்க
நன்னி உணவருந்த
வறண்ட தனத்தினிலே
பாலருந்த என்றென்றும்
தட்டுத்தடுமாறி உடல் அசைக்க
தடுமாறி உருண்டு புரண்டு
தவழ்ந்திடவே பாடாய்
உன்னி உன்னி நெஞ்சம் அழுத்த
உறுதியுடன் எழுந்திருக்கையிலே
கன்னி நடை பயில்கையிலே
பல்லும் வெளிவரவே வேதனையால்
சொல்ல முடியாத அந்த
மழலைமொழி பேசிட
உடை உடுத்திட
கண்டவை பெற்றிட

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெற்றவை அழித்திட
மற்றவை பார்த்திட
தொட்டே மகிழ்ந்திட
எனவெலாம் எண்ணியே
நாட்டமிகு போராட்டம்
உடையிலும் நடையிலும்
தடையிலும் தவிப்பிலும்
மனமடை திறந்திடும்
விடையிலாப் போராட்டம்
இடையின்றிப் போராட்டம்
ஆதியில் மனிதனோ
உணவுக்காய் அலைந்து
உண்ணவே விலங்குடன்
கணமெலாம் போராட்டம்
இயற்கையின் கனிகளும்
குலையெனக் காய்களும்
உண்டே களித்தனன்
உவகை கொண்டனன்.

**இருப்பிடத்திற்கு**

பகலெலாம் அலைந்தவன்
இரவினில் ஒளியின்றி
வீடின்றி மரத்திலும்
குகையிலும் இணைந்துமே
இருந்துமே பயத்திலே
குளிரிலே மழையிலே
குழைகளும் தளைகளும்
மரப் பட்டைகளும்
மரவுரிகளும் உடலினை
விரவியே போர்வையாய்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மருவியே கொண்டனன்
மனத்தையே வருத்தினன்.

**உணவுக்கு**

காடும் மேடும் கடுகி நடந்து
உணவுக்காய்த் தவித்தே
துலக்கமாய்க் கொன்றுமே
குவித்தனன் விலங்கினை
காட்டுத் தீயில் கருகிய
விலங்கின் தசையினைச்
சுவைத்தவன் பச்சையாய்
உண்பதைத் தவிர்த்துமே
தீயினைத் தானே
கல்லிலே உரசியே
தோற்றவும் செய்தனன்
உணவினைச் சுட்டே
உண்ணவும் விழைந்தனன்
ஒன்றாய் இணைந்தே
வருபொருள் பங்கென
பாகம் பண்ணிப் பகிர்ந்தே
பொதுமையாம் வாழ்வும்
உடைமைகள் பொதுமையாய்
இன்னல்கள் இன்றி
இன்பமாய் வாழ்வு
இருந்திடக் கண்டவன்
இங்குள பேதங்கள்
இருப்பவன் இல்லான்
தருபவன் பெறுபவன்
உடையவன் இல்லான்
கடையவன் முதலவன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலவன் கீழவன்
பேதங்கள் இன்றியே
பொருள்களும் பொதுவென
எல்லா வளங்களும்
இயற்கையின் கொடையெனக்
கிடைப்பதைப் பகிர்ந்துமே
கிடைத்ததைப் பதுக்கியே
இலமெனக் கொண்டிடும்
உள்ளம் இன்றியே
ஒற்றுமை உணர்விலே
வேற்றுமை எதுவெனச்
சாற்றவே தெரிந்திலன்
பொது உடைமைச் சிந்தனை
பொலிவுடன் நிலவவே
இன்புடன் வாழ்ந்தவன்
இனியென்ன செய்குவன்?

**பேர் ஆசையில்**

நீர் நிலை கண்டு
பயிரினம் வளர்த்து
பயன்களும் கொண்டனன்
இயற்கையை எதிர்த்தே
பற்பல போராட்டங்கள்
புதிரென மாற்றங்கள்
மதியினால் விடைகளாய்
வியந்திட முன்னோக்கி
விரைந்தே வளர்ந்தவன்
இன்றோ கண்ட
விஞ்ஞானங்கள் வழியே
அஞ்ஞானங்களை வெல்லவும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அஞ்சாதவனாய் வென்றனன்
பஞ்சம்பட்டினிச் சாவுகள்
விஞ்சும்படியாய் வாழ்வைத்
தஞ்சம்எனவே உழைத்தே
மிச்சமின்றி இணைந்தே
நெஞ்சம்இன்புற இருந்தவன்
ஆசையில் அவனியில்
திசையில் மாறினன்

## நிலவுடைமை தந்த போராட்டம்

நிலத்தினில் உடைமை
கலத்தினில் தனிமை
குலத்தினில் பேதம்
பலத்தினில் முதன்மை
தலத்தினில் கொடுமை
வேற்றுமை தோற்றியே
சோதனை ஆக்கி
ஒற்றுமை நீக்கி
உறவுகள் நீக்கி
அறத்தினை மறுத்து
கயமையை வளர்த்து
பொய்ம்மையைக் கொண்டு
வாழவும் வழிகள்
வகுத்திட்ட மனிதன்
அழிவினில் நிலையாய்
படுகுழிகள் தோண்டி
வடுக்களைத் தினமும்
மிடுக்குடன் கொண்டு
முட்டி மோதிக் கடும்சினம் உரைத்து
போட்டி பொறாமையும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காட்டி மேலாய் இனப்பகை
கூட்டிவளர்த்து ஊர்ப்பகை
வாட்டிவதைக்கும் மதப்பகை
உட்பகை கொண்டுமே
போர்ப்பகை யாகவே
நானிலம் தனதென
நாளும் பொழுதும்
போராட்டத்தில் அழிந்தே
வந்தனன் மனிதன்
வருந்தினன் நாளும்.

இன்றோ

வாழ்வியல் மேவ
விதிகளைக் கண்டோர்
மதிகளைச் சதிகளால்
அட்டூழியங்கள் கொடூரங்கள்
மன்பதை அழிவினை
உன்னதமாக்க என்றும்
மதங்களால் போர்கள்
நாட்டால் போர்கள்
இனத்தினால் போர்கள்
வளங்களைக் கவரவே
விளைத்திடும் போர்கள்
மனத்திலே போர்கள்
தினத்திலே அழித்த
ஹிரோசிமா நாகசாகி
கிரகத யுகமாய்
நாசமாய் ஆக்கிய
வடவியட்னாம் போர்கள்
மாறா வடுக்களாய்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலைத்துமே நிற்க
அமெரிக்கன் இன்றும்
ஆப்கான் நாட்டை
துவம்சமே செய்தவன்
றுவண்டா நாட்டில்
துவண்டவர் பல்லாயிரம்
மன்பதை அழிவைக்
கண்கொண்டும் பாராது
விண்ணில் ஆயுதம் ஏவியே
மண்ணில் மன்பதை அழிக்க
ஈராக்மீது போரினைத் தொடுத்தது
மக்களைக் காக்க அன்றி
எண்ணெய்க் குளங்களைத்
தம்பால் ஈர்க்கவே என்பது
தன் புகழ் ஓங்க வழிகளே
போரின் கொடுமைகள்
சிதறி என்றோ ஒருநாள்
எகிறி எழுந்தே
மானுடம் தழைக்கும்
மன்பதை தழைக்கும்.

UNIVERSITY OF PERADENIYA
14 SEP 2006
LIBRARY

## வீறுகொண்டெழுவர்

ஏகாதிபத்தியப் பேய்கள்
கதறிக் கண்கள் பிதுங்கியே
இச்சகம் செய்யில்
அச்சமே கிடைக்கும்
மறந்தும் ஏனோ
மன்பதை மாய்ப்பு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் எழுவர்
மானிடம் வெல்லும்
திரண்டுமே அவர்கள்
திண்ணமாய் இணைவர்
பிரிந்தவர் இணைந்தால்
பேசவும் வேண்டுமோ?
ஒன்றாய் இயைந்து
ஓங்கியே ஒலிப்பர்
அன்றே வீழும்
அச்சமே கொள்ளும்
எச்சகம் இன்றி
இச்சகம் தன்னில்
போர்ப்பகை ஓயும்
பொதுமையே நிலவும்
ஏய்த்து மாய்த்து
ஏப்பமிட்ட அந்த
ஏகாதிபத்தியப் பேய்க்கு
யமலோக வழிகள்
எதுவெனக் காட்டி
சதிகள் விதிகள்
சாத்திரங்கள் என்றுமே
வாய்க்காது அங்கு
வாய்ச் சவடால்கள்
வீச்சுகள் பேச்சுகள்
பெட்டியில் பாம்பாய்
ஒடுங்கியே போகும்
மகுடிஊதிய முதலாளிகளுக்கு
ஆடிய மக்களில்
வகுடிச்சென்ற ஏய்ப்புகள்
மாய்ப்புகள் அன்னியமாக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடங்கியே அழிவர்
முடங்கியே சோர்வர்
உதிரம் உறிஞ்சும்
உண்மைப் பிசாசங்கள்
வண்மை உணர்ந்து
தண்மை கொண்டு
திண்மை இழந்து
தொழிலாளி ஆகும்
வழிகள் தெரிந்திடும்
வனப்பின் நாள்கள்
விரைந்தே வந்திடும்
கரைந்தே காகமாய்
உரைத்தே வாழ்வர்
உண்மை இதுவே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மீண்டும் மிடுக்கு

உழுதுண்டே வாழ்ந்திடுவான்
பழுதுண்டோ அவன் வாழ்வில்
தொழுதுண்டு சோர்ந்திடாமல்
உழைப்பாலே உயர்ந்திடுவான்

நெற்றித் திலகம் வியர்வையாய்ச் சிந்த
பெற்றி சலத்தில் தரை குளிர
வெற்றி கலத்தில் தான் காண
முற்றி தலத்தில் தந்திடுவான்

ஊர் உலகம் போற்றுகின்ற
போர் நிலத்தில் புரிந்திடுவான்
பார் உடைத்துக் கழனியாக்கி
வேர் அறுத்து உழுதிடுவான்

கடுநிலத்தைக் கடைந்திடுவான்
கடுகிநின்றே பிளந்திடுவான்
வான்உயர வளர்த்திடுவான்
பொன்னாக விளைத்திடுவான்

கார்மேகம் கருக்கொள்ள
களித்திடுவான் புன்னகையில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அளித்திடுவான் அவனியிலே
அளப்பரிய அமுதமெல்லாம்

உழவரெல்லாம் உவந்திடவே
உள்ளவரோ மகிழ்ந்திடவே
வள்ளல் அவர் வாழ்ந்திடவே
உள்ளத்தால் வாழ்த்திடுவீர்

மீண்டும் மிடுக்கு அவன்பெறவே
தீண்டும் இடம் செழித்திடவே
வேண்டி உறிஞ்சும் முதலைகளை
நோண்டி நுள்ளி எறிந்திடுவான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திராவிடர் பொங்கல்

திராவிடப் பொன்னாட்டின் பொங்கல் என்றால்
திரவியத் தேன் சுவைதான் தீராது நாவினிலே
திரள்மணி நெல் வயலினிலே புதிரெடுத்தே பால்
திரண்டுவரப் பொங்கிடுவோம் தைப்பொங்கல்!

மேட்டு நிலந்தன்னிலே விளைந்து வந்த
கோட்டு நல்ல பயறு எடுத்து வறுத்துக் குத்தி
காட்டுத் தேனும் சர்க்கரையும் நெய்யும்பாலும்
மீட்டு வரப் பொங்கிடுவோம் தைப்பொங்கல்!

கறவையிலே சுரந்துவரும் தீம்பால் எடுத்துச் செந்
நிறத்தினிலே கோலமிட்டு மாவிலைத் தோரணமே
முற்றத்தே சர்க்கரைப் பந்தலிட்டுப் பகலவனுக்கோ
சுற்றமெலாம் கூடிப் பொங்கிடுவோம் தைப்பொங்கல்

புத்தாடை பொலிவுடனே பாலரெல்லாம் மகிழ்ந்து
புத்தாண்டைக் கொண்டாட பூவுடனே நத்தைகளாய்
புத்தூக்கத்துடன் சென்று வந்திடுவர் சந்நிதிக்கே
புன்சிரிப்பில் பொங்கிடுவோம் தைப்பொங்கல்

கரும்பும் இளநீரும் காரெள்ளும் தேனும்
விரும்பும் பலகாரம் பலவும் தேன்சிந்த
விருப்புடனே மா பலா வாழையுடன் நன்றாய்
கருத்துடனே பொங்கிடுவோம் தைப்பொங்கல்

நிலமகளோ கண்விழிக்க ஆதவனோ மென்நகைக்க
குலமகளோ காதல்கொள்ள திருமகளோ வியந்துவர
அலைமகளோ ஆர்ப்பரிக்க அன்னையவள் உருகிவர
கலைமகளோ ஒளிவீச பொங்கிடுவோம் புதுப்பொங்கல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேசம் ஒரு வாடகை வீடு

தேசம் ஒரு வாடகை வீடு
தேகம் ஒரு தேனமுதக் கூடு
வாதம் ஒரு பொய்யே போடு
மாதம் ஒரு சம்பளம் கேடு
பேதம் ஒரு சாபக் கேடு
ஏதம் கொள்வது இழிவே போடு
சேதம் சேர்வது தீதின் நீடு
பந்தம் இணைவது பாரின் மீது
போகம் ஒரு பித்தலாட்டக் கேடு
பாவம் செய்வது மானிடக் கூடு
வந்தோம் இங்கு வாழ்ந்திட என்று
கொண்டோம் நம்மில் குரோதங்கள் இன்று
மாண்டோம் இங்கு மானிடம் வீழ்ந்து
மந்தம் கொண்டு மமதையும் கண்டு
சத்தம் என்றும் நித்தமே போட்டு
சொத்துகள் சேர்த்திடு மன்று
நித்தம் புத்திகள் சொல்வார் ஓடு
சுத்தம் என்றே உறைந்திடும் நாடு
சுத்தித் திரிந்தே சூறைகள் கொண்டு
எத்தி என்றும் நண்பரை ஏய்த்து
பத்தி என்றே பதங்களும் தூக்கி
வத்தி நிறையக் கொளுத்தியே நின்று
மத்தியில் இருந்து வருகுது என்று
சத்தியம் என்றே சாலவும் கூறி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மத்திமமான மனிதரை மாற்றி
நித்தியமாக மடமையைப் புகுத்தி
பத்தியம் என்றே பலதும் சாற்றி
சித்தியே தோல்விஇல்லை என்று
சித்தம் சிதறப் புரட்டுகள் அடுக்கி
பித்தம் தலைக்கு ஏறவே இருத்தி
நித்தம் சுத்தம் சுகமே இன்றி
புத்தியில் சிறிதும் தெளிவே இன்றி
வித்தகம் என்றே விளம்பி உயர்வாய்
புத்தகம் எல்லாம் புரட்டிக்காட்டி
புத்தா உனையே அருளினேன்
இத்தால் உனக்கு இறப்பே இல்லை!
முத்தி முழுதும் இங்கு உண்டு
சுத்திச் சுகங்கள் பெறுவாய் என்றே
இத்தால் துயரே இணையாது என்று
கத்தி முழுதும் உளதாய்ச் சாற்றி
சுத்திச் சுகங்கள் பெறுவாய் என்றே
சுத்தும் உலகை நிறுத்தியே கூற
புத்தியில் உண்மை உணரா ராகி
நித்தம் நித்தம் உழன்று தவித்து
நித்தம் இல்லா வாழ்வை உயர்வாய்
அந்தியும் இன்பம் பெறவே என்று
எத்தியும் சேர்க்கவே சென்றிடும் ஆவி
புத்தியால் உணரா மானிடப் பிறவி
குத்தியே மாய்க்கும் குரோத விரோத
வக்கிரக் குன்றாய்ச் சுடர்விடும் மனது
வந்தவர் வழியே சென்றிடல் கண்டு
சேர்ந்தவர் நிலையையும் ஓராராகி
நொந்தவர் நோக்கம் தெரியாராகி
சேர்த்து மூட்டைகள் கட்டி வைத்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூற்றுவன் வரவு எமக்கில்லை என்றே
நீத்தார் எல்லாம் மறந்தே இருந்து
தேர்ந்தே செல்லும் தினமதில் தானே
தேசம் வாடகைவீடாய் ஆனதை
பேதம் இன்றி அறியா மானிடர்
வாதம் வீணே புரிவார் என்றும்
வந்தவர் இங்கு நிலைத்ததுமில்லை
சென்றவர் இங்கு மீண்டதுமில்லை
வந்தோம் என்று இருந்திடும் காலை
சொந்தம் என்று கொண்டிட இங்கு
சொந்தம் ஏதும் எமக்கிலையாயின்
தேசம் எமக்கு வாடகை வீடே
பேதம் வாதம் பகைமை கொண்டு
ஏதம் எல்லாம் எமக்குள் நின்று
வந்தவர் எல்லாம் வரவினைக் கண்டு
செல்வதும் இயல்பை மறந்தே இன்று
நின்றவர் யாரும் இலமே இங்கு
நன்றவர் வாழ்வின் விதியே என்று
சென்றவர் விதியை நொந்து அன்று
மனிதநேயம் காட்டிடும் சான்று
இனிதே இன்பம் கொண்டே மீண்டு
கனிதே வாழ்வின் வழிகளில் நீடு
தேடகம் வீடகம் மாடகம் ஆக்கி
நாடகம் ஆடியே வாழ்க்கையை ஓட்டி
நடித்துமே என்றும் மாந்தரை ஏய்த்து
நாட்டினை அரசியல் அரங்கமே ஆக்கி
போட்டிகள் பூசல்கள் கொள்வதும் ஏனோ
நின்மதி நினைவில் கொண்டிட என்று
தன்மதி தன்னைத் தீட்டிட வேண்டும்
உன்மதி உன்னை நடத்திட வேண்டும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாடகை வீட்டினை நயமே கொண்டு
வாழ்ந்தே ஏகுதல் மாந்தரின் கடனே
வாழ்ந்திடும் காலம் சிறிதே என்று
வாழ்வின் இன்பம் பெற்றிடத் தானே
தாழ்வின் நிலையை நீக்கியே என்றும்
தாமாய் இணைந்து இருந்திடல் வேண்டும்
பெரியவன் சிறியவன் பேதம் அகற்றி
பெருமனத்துடனே விரட்டியே நின்று
பெருமையும் சேர வாழ்ந்திட வேண்டும்.
சிறுமை அகன்றிட வாழ்வும் சிறக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வந்த நாட்டில்...!

வந்த நாட்டில் வளம் பெருக்கி
வாழ்ந்திடுதல் போதுமோ?
அந்த நாட்டின் நலிவு கொண்ட
சோதரர் வாழ்வு தாழவோ?
பந்த பாசம் அறுத்து இங்கு
சொந்தம் கொள்ளல் ஆகுமோ?
கந்த லோடு பட்டினி கிடந்து
பாதை மறத்தல் நியாயமோ?

கணத்தில் ஏகும் வாழ்வு நீண்டு
சத்திரத்தில் நிலைக்குமோ?
சணத்தில் உறவை மறந்து போதல்
மதியுள்ளோர்தாம் ஏற்பரோ?
பணத்தில் மனத்தை வைத்திருத்தல்
வாழ்வின் உயர்வை நல்குமோ?
மணத்தில் வாழ்வு மலர ஈண்டு
குணத்தில் உயர வேண்டாமோ?

பெரிது சிறிது பேதமெலாம் நீதியோ
அன்பு ஓங்கி நிலைக்குமோ?
அரிது யார்க்கும் மனிதம் போற்றும்
இதயப் பண்பை மறுக்கலாமோ?
உரிமை என்னும் மன்பதை மாண்பு
கருதி வாழ்தல் கூடுமோ?
அரிது வாழ்வின் மலர்விலே
சமமாம் மனிதம் வேண்டுமே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரக்கம் கொண்டு இல்லார்தம்மை
இன்புடனே உயர்த்திடல்
சுரக்கும் இம்மை வாழ்வின் இன்ப
வனப்பு மேலும் பெருக்கியே
உரக்கும் சாதி பேதம் நீக்கவே
சிறக்கும் கல்வியாளர் இயைவரோ?
புரக்கும் கொள்கை உயர்த்தி
நலியும் எம்மினத்தைக் காப்பமே?

நவநாகரிகம் தன்னிலே நிலை
கலைந்து அலைந்து திரிந்துமே
சுகமான நினைவில் மூழ்கித் தம்மில்
போலிவாழ்வைக் கொள்வரோ?
பகைதீரமாகப் போற்றுதல் மேன்மையோ?
பலகாததூரம் வந்துமே மறந்திடா
வதையாக வாழ்ந்திடல் உணர்ந்துமே
இணைதல் தமிழனுக்கு ஆகுமோ?

கற்றதன் பயன் கொள்ளல் மீண்டுமே
அதன் வழிநிற்றல் உணர்வரோ?
கற்றவன் நீ உலகுக்கே தலையாலே
தான்தருதல் வேண்டாமோ?
மற்றவன் போல் போலிவாழ்வு வேண்டுமோ?
செற்றவை மறத்தல் ஆகுமோ?
நற்றமிழன் செயல் போற்றவே
பொதுநலம் ஓங்கும் உலகிலே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழமுது உண்போம்!

UNIVERSITY OF PERADENIYA
14 SEP 2006
LIBRARY

புலமை நிறைந்த நம் தமிழே
புதுமணம் கமழும் தேன் தமிழே
முத்தாய் இலங்கும் எம்தமிழே
முந்திப் பூத்த நிறைமலரே

ஔவை அரிவை தெரிவையுடன்
செவ்வை தேனாய்ச் சொரிந்திட்ட
பாவை ஆன தமிழ் மொழியை
ஓசை ஆர்ப்பக் கற்றிடுவோம்

அப்பர் மாணிக்கர் சுந்தரர் ஆளுடையர்
செப்பிய அருளைத் தமிழிசையில் என்றும்
நீர்ப்பார் வேற்றுப் பெருமை தந்தே
சேர்ப்பார் அடியைப் போற்றிடுவோம்

தேனாய்ச் சுவைக்கும் திருப்புகழை
தானாய்த் தந்த அருணகிரி தமிழின்
ஊனாய் உருகப் பக்தி தந்தாரே
தானாய்ச் சுவைக்கச் செய்தனரே!

கனிவின் கன்னல் சுவையூறும்
தேனின் தெவிட்டாப் பாகெல்லாம்
வானின் ஒளிரும் மீன் இனமாய்
பாவிலே கம்பன் தந்தனனே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தின்னத் தின்னத் தெவிட்டாத
சின்ன சின்ன முத்தொளியாய்
அன்னைத் தமிழைக் கவியாக்கி
அன்பின் பாரதி தந்தானே

புலமைப் புதுமைப் பித்தரெல்லாம்
தலைமைத் தமிழில் பித்தானார்
நிலைமை புரிந்தே தமிழ் தந்தார்
கலையாய்த் தமிழைக் கற்போமே!

காலம் கடந்தால் வந்திடுமோ?
காத்தே இருந்தால் கனிந்திடுமோ?
கனியாம் தமிழை அருந்தாமல்
இனிமை தன்னை அறிவோமோ!

தமிழின் அமுது உண்டிடவே
அமிழ்தக் கடலில் நீந்திடுவீர்
திருப்பா தினமும் சுவைத்திடலாம்
திருவே தமிழின் இனிமையதாம்

காதல் வலையில் தமிழ்நங்கை
சாதல் வரையில் வாழ்ந்திடுவாள்
மோதல் தவிர்த்தே இணைந்தின்பம்
நாவில் இருத்தித் தந்திடுவாள்

தென்றல் இன்பம் சேர்ந்து வரும்
தேன்தமிழ் இன்பச் சுவையாலே
ஊற்றாய்ச் சுரந்து ஓடிவரும்
ஆறாய்ப் பெருகும் தமிழ்த்தேனே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரத மாதா

*(ரொரண்டோ மாநகரத்தில் இடம்பெற்ற இந்திய சுதந்திரதினக் கொண்டாட்டக் (1999) கவியரங்கத்தில் வாசிக்கப்பட்டது)*

இந்திய தேசம் என்று பெயர் சொல்லவே
இந்திர தேசம் என்ற நினைவூறுதே
சுந்தர நாடு என்று எழில் பொங்குதே
தந்திரம் ஏதுமின்றி தலை ஓங்குதே

தென்கிழக்கு நாட்டில் ஓர் உபகண்டமே
தேன் இனிக்கும் கலை ஓங்கும் பரதகண்டமே
மான் துள்ளி மயிலாடும் எழில் தாண்டுதே
வான் ஓங்கு புகழ் மணக்கும் உயர்தேசமே

புண்ணிய தேசம் எங்கள் பாரததேசமே
கண்ணிய வான்கள் வாழும் உயர்தேசமே
தண்ணிய புத்தனோடு காந்தி அண்ணலும்
எண்ணியே புதுமை தந்த இந்திய நாடே

வந்தோரை வரவேற்று வாழவைத்துமே
வந்தோரின் அதிகாரம் நொண்டி ஆக்கியே
சொந்தபூமி ஏகிடவே வீரசிவாஜி நேத்தாஜி
வெந்துதிரம் சிந்த முனைவு தந்த பாரதநாடே

விவசாயம் கைத்தொழிலும் தன்நிறைவிலே
விரிவாகவே வளர்ந்துவரும் தொழில்நுட்பமும்
விஞ்ஞான உயர்வினிலே அக்கினியாகவே
விஞ்சிநிற்கும் நிலைகொள்ளும் பாரதநாடே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலகினிலே உயர்ந்து நிற்கும் இமயமாகவே
உலகினிற்கோ உயர்கலையாய் ஆகிநிற்குதே
கலையினிலே தாஜ்மகாலின் புகழ் பரப்புதே
நிலையினிலே பொற்கோயில் புதுமைகாட்டுதே!

நாட்டுக்குள்ளே உயர் நாடு இந்தியநாடதே
நாட்டுக்கோட்டை வர்த்தகர்கள் கப்பலோட்டியும்
நாடறிந்த வஉசி ராஜாஜி பெரியார்
நா்ட்டிற்கே உழைத்துநின்ற புண்ணியபூமியே!

கலையுள்ளம் அலைபாயத் தாகூரையும்
மலையாகக் கவிபுனைந்த பாரதியையும்
சிலையாக ராமகாதை காப்பியத்திலே
தலையாகக் கம்பனையும் தந்த பாரதமே!

பல்வேறு பண்பாட்டுக் கருவூலங்கள்
நல்வேறு இனத் தொருமையிலே என்றும்
சொல்வேறு மொழியோடு உறவாடியே
தொல்பெருமை சாற்றுகின்ற பாரததேசமே!

வான் ஓங்கு புகழ் பூத்த பாரதமாதா
தான் ஓங்கி நிலை கொண்ட அக்கினியாலே
கோன் எனவே அப்துல்கலாம் தலைமையிலே
நான் எனவே எளியோரைக் கைதூக்கம்மா

நேர்மைத் திறன்கொண்ட இராதா கிருஷ்ணன்
பேர்மிக்க பிரதமராய்ப் புகழ்கொண்ட நேரு
சீர்மைக் கணிதப் பெருமை தந்த சிவிஇராமன்
கூர்மை வித்திட்ட டாட்டா பிர்லா புகழ்ஓங்கவே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போபாலில் புரையோடிப் போனதெல்லாம்
சாவாயில் கொண்ட கொடுமை யெல்லாம்
நோவாயில் வீழ்த்திவிட்ட ஏழைமையெல்லாம்
நீநாவில் நிலைநிறுத்திக் காத்தருள்வாய்

ஆளுக்கோர் அரசியல் பேசி நின்று
நாளுக்கோர் வாசகங்கள் உரைப்போர் கூட்டம்
வாளுக்கோர் போராகப் பேதமெல்லாம்
தாளுக்கோர் நாராக உரித்தெறிவாய்

பேதங்கள் பெருமூச்சாய்ப் பேசி அங்கு
வாதங்கள் பெருக்கிவரும் பேயரெல்லாம்
சாதனைகள் படைத்து நாட்டில் நாளும்
பேதங்கள் நீங்கிடவே அருள்வாய் அம்மா!

சாதிக்குச் சடுதியிலே சாவுமணி ஒலிக்க
பாதியிலே பகல்வேச தாரிகளை அம்பலத்தில்
வீதியிலே விலைபோகச் சந்தியிலே காட்டி
நீதியிலே உன்நிலையை நிறுத்திடம்மா

நாதியற்றுத் திரிவோர் பக்கம் நீ பாரம்மா
சோதியற்று இருளினிலே இருப்போர் தன்னை
நீதியிலே சேரியெல்லாம் ஒளி ஓங்கவே
ஆதியிலே அருள்புரிந்து காப்பாயம்மா

ஏழ்மை உதிரம் குடிப்போர் உள்ளம்
தாழ்மை உணர்வு கொண்டு ஓடிடவே
கீழ்மை நிலையகற்றிக் காப்பாயம்மா
பாழும் உலகை நீ காப்பாயம்மா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சீதனத்தின் கொடுமைகளை அறுத்தெறிவாய்
சீஎன்றே காறிஉமிழ்ந்திடவே அரிவையரைத்
தீயென்றே சுடர்விடவே அருள் தருவாய்
தீனரெல்லாம் வாழ்வுபெறச் செய்வாயம்மா

ஊதி உலகத்தை உறிஞ்சிவரும் பெருச்சாளி
கோதி உடலத்தை உருக்குலைத்து அழிப்பாய்
பாதிப் பங்கெல்லாம் பாட்டாளி மக்களுக்கே
மீதிப் பொருளெல்லாம் தருவாயம்மா

ஏழ்மையிலே பலியாகும் பாவையரோ
சூழ்ந்துவரும் எயிட்ஸ் ஆட்கொல்லி
கவர்ந்து செல்லும் கயமையை உணர்ந்தே
உவந்து அவர்வாழ்வு காப்பாயம்மா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போதை அது பேதைமை

இன்பமும் துன்பமும் இயற்கையின் நியதியோ
இன்பமாய்த் தினமும் துய்த்திடவென்றே இனியதோ
துன்பப் போதைக்கு அடிமையே யாகுதல்
துன்பமே மீதமாயாகுதே பாரில்

குலமென குணமாய் வளர்க்கிறார் பெற்றோர்
தலமென கனேடிய மண்ணில் சுகந்தம் நலமென்று
சலமென மதுவை அருந்தியே மயங்கி
பலமெலாமிழக்க முடிக்கிறார் வாழ்வை

கண்ணின் மைந்தரோ மகளிரோ அன்புக்காய் ஏங்க
பண்பின் மையமாய் வாய்த்தவர் துன்பமாய் இன்பின்
நின்தன் மையலாள் துணையவள் இன்னுளம் நோக
தன்னின் கைநிலை அறுத்தே செல்வதும் ஏனோ?

மாந்தர்க்கு மறுகுணம் ஊட்டிடும் மதுவை
காந்தமாய் சிறுகுடல் சிதையவும் சோர்ந்தும்
மீதமாய் அருகியே மாய்த்தனை வாழ்வை
சீதமாய் உதிரம் பெருக்கும் மதுவே

அரிது அரிது அவனியில் மானிட வாழ்வு அன்றோ
அரியவர் சோதரர் தம்தமர் தமதுளம் விரவி
தெரிந்திடா வாழ்வை நொந்துமே வெதும்ப
புரிந்திடா உலகம் செல்வதும் விதியோ?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடிதினில் காலன் விதிவழி ஏகிடச் சித்தமாய்
பிடிதனில் காலாய் மதிவழி ஆகிட முடிவினில்
படிதனில் கோலாய் தனிவழி சென்றிட மதுக்
குடியினில் கதியாய் உழல்வதும் விதியோ?

வாழ்வின் இனிமை புரிந்திடாப் பித்தனாய்
வாழ்வின் முடிவினில் செலுத்திடும் ஊழ்வினைச்
சால்பின் மதியினில் மயங்கிட மதுவினை
வீணாய் அருந்தித் தவித்திடல் விதியோ?

உலகியல் இன்பம் உய்த்திடும் பாங்கு
தலத்தினில் உண்டென உணர்ந்தோர் நிலையுணர்ந்து
கலக்கமே இன்றி இனிதே வாழ்தல் கண்டு
துலக்கமே இன்றி மாளுதல் நன்றோ?

மதுவெனும் அரக்கன் நட்பினைப் பூண்டு
சதியெனும் பிசாசமாய் இல்லினைச் சிதைக்க
விதியென நோதல் மடமையே உணர்வீர்
கதியெனக் கேளிர் போற்றியே வாழ்வீர்

நன்றென என்றும் நாடியே நல்லவை
மன்றெனக் கூடி மதிநுட்பத்தாலே சான்றென
நின்ற பெண்டிர் மைந்தரும் இன்புற்றிருத்தல்
என்றும் இல்லையே மதுவினால் ஈண்டு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வந்ததும் ஏனோ?

உறவுகள் அறுத்து ஓடிவந்தோம்
சிறகுகள் அறுத்து பறந்து வந்தோம்
நிறைவுகள் சிறக்க நினைந்து வந்தோம்
மறைவுகள் தவிர்க்க உய்த்து வந்தோம்

துயரச் சுமைகள் சுமந்து வந்தோம்
உயரச் சோகம் நிறைந்து வந்தோம்
சிகரத் தொல்லை உறுத்த வந்தோம்
நிகராய்த் தாய்மொழிக் குரிமை என்றோம்

தகர வேற்று மொழி என்றோம்
தமிழே தாரகம் என்றுரைத்தோம்
புலம் பெயர் நாடே நன்றென்றோம்
வலம் வர அன்னிய மொழி என்றோம்

கலம் நிறை பொருளே பெரிதென்போம்
நலம் பெற எல்லாம் மறக்கின்றோம்
குலம் வளர் தமிழை ஏதென்போம்
நிலமகள் நாமம் மறக்கின்றோம்

அன்னிய ஆதிக்கம் எதிர்த்து நின்றோம்
கன்னித் தமிழே எம் மூச்சென்றோம்
பின்னிய தேசத்தில் தமிழ் எதற்கென்றே
மன்னிய பொருளைத் தேடுகின்றோம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திண்ணிய வாழ்வே வேண்டுகின்றோம்
தன்னிகர் மாந்தர் நிலைமறந்தோம்
அன்னையர் அயலவர் உறவிழந்தோம்
அன்னியர் ஆகவே வளர்கின்றோம்

உறையும் பனியில் விறைக்கின்றோம்
நிறையப் பணத்தைச் சேர்க்கின்றோம்
முறையிலா விரையம் செய்கின்றோம்
குறைகள் கூறித் திரிகின்றோம்

வந்ததும் ஏனோ தெரியாது
நொந்ததும் உண்டே மனத்தினிலே
பந்தம் எல்லாம் மாய்ந்திடவே
நித்தம் உழலவோ நாம்வந்தோம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மற்றவர் செயலே கொள்கிறார்

மற்றவர் செயலைப் பார்க்கின்றார்
உற்றவர் தன்னை அழைக்கின்றார்
ஏற்றவர் சொல்லால் அழிகின்றார்
நற்றவர் தன்னை வெறுக்கின்றார்

பெற்றவர் தன்னை ஒதுக்குகின்றார்
கற்றவர் சொல்லை எதிர்க்கின்றார்
சாற்றுவோர் புகழுக்குச் சாய்க்கின்றார்
போற்றுவோர் உரையைக் கேட்கின்றார்

கண்டவர் கலையைப் போற்றுகின்றார்
தொண்டர் என்றே திரிகின்றார்
கண்டதும் பாவனை செய்கின்றார்
நானே பெரிதென உரைக்கின்றார்

சகலமும் எனக்கே தெரியுமென்பார்
பகலும் இரவும் அலைகின்றார்
பாடுபட்டே உழைக்கின்றார்
கேடுகெட்டே போகின்றார்

கொண்டாட்டங்கள் செய்கின்றார்
திண்டாட்டங்கள் படுகின்றார்
கடனாட்டங்கள் சேர்க்கின்றார்
கட்ட வழியற்றுத் திரிகின்றார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிறந்த தினமும் வைக்கின்றார்
பிறக்கும் தினமும் வைக்கின்றார்
திருமணத் தினமும் வைக்கின்றார்
மறுமணத் தினமும் வைக்கின்றார்

பல் முளைக்கவும் அழைக்கின்றார்
தள்ளி நடக்கவும் அழைக்கின்றார்
துள்ளித் திரியவும் அழைக்கின்றார்
அள்ளி மதுபானம் இறைக்கின்றார்

வீடியோ புகைப்படம் பிடிக்கின்றார்
வீசியே மூலையில் எறிகின்றார்
காசையே அள்ளி இறைக்கின்றார்
சோகை கொண்டே துயில்கின்றார்

கடன்காரருக்கு ஓடி ஒளிகின்றார்
தொலைபேசித் தொல்லை பெரிதென்பார்
தொலைத் தொடர்பே கடன் என்பார்
தொடர்பை அறுத்தே எறிகின்றார்

வேலை இன்றித் திரிகின்றார்
"வெல்பெயர்" எல்லாம் எடுக்கின்றார்
வீட்டை வாங்க முனைகின்றார்
சோட்டுக்கு சோபா வாங்குகின்றார்

அட்டைக்குக் கடனைப் பெறுகின்றார்
குட்டையில் கடனில் வீழுகின்றார்
பட்டையில் பெயரைப் பொறிக்கின்றார்
சிட்டைக் கடனுக்கு ஒளிக்கின்றார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாட்டு நடப்பை மதிக்கின்றார்
நோட்டு இன்றி அலைகின்றார்
சீட்டைப் போட்டு மாள்கின்றார்
கேட்டுக் காசுக்கு அலைகின்றார்

கூட்டுக் குலைந்தே போகின்றார்
மோட்டு உலகைச் சாடுகின்றார்
முட்டி மோதி மாய்கின்றார்
பித்துக் கொண்டு உலைகின்றார்

கல்வி கற்க மறுக்கின்றார்
கலைக் கூடத்தை வெறுக்கின்றார்
தலையில் கூடத்தை வளர்க்கின்றார்
அலைந்து திரிந்தே அழிகின்றார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சாதி வெறி தீரவில்லை

சாதிவெறி இன்னும்
சத்தியமாய்த் தீரவில்லை
எங்கள் தமிழ்ப் போராட்டமும்
அவ்வெறியைத் தீர்க்கவில்லை
பலநூறு மைல்கள்
பறந்துவந்தும் ஐயையோ!
பார்க்கின்றோமே
சாதியது இங்குமல்லோ!

ஆதியிலே சாதியில்லை
பாதியிலே வந்ததென்று
சேதியாகச் சொல்லுறாங்க
ஓதியே வைச்சாங்க
மோதித்தான் சாகிறாங்க
கோதித்தான் பார்க்கிறாங்க
மீதியாய் ஒன்றும் இல்லை
சாதியால் அழிவுதாங்க

பார்ப்பனரோ கொண்டுவந்தார்
ஏற்பவரோ ஏற்றுவிட்டார்
தீர்ப்பவரோ இன்றி இங்கு
திண்டாட்டப் படுறாங்க
மோர்மிளகாய் செய்துதந்தால்
முட்டிமோதித் தின்னுவாங்க
ஊர்க்காரர் உள்ளே வந்தால்
எட்ட நில்லு என்கிறாங்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாதியில்லை என்றேதான்
அம்பேத்கர் சொன்னாங்க
வாதியாகப் பெரியாரும்
அதைத்தானே சொன்னாங்க
நாதியாக்கி ஔவையாரும்
பெண்சாதி ஆண்சாதின்னு
ஓதியே சொன்னாங்க
அதுவும் தெரியவில்லை

உண்மை நிலை புரியவில்லை
உயர் சாதி என்கிறாங்க
பண்ணும் நிலை பாவம் நீங்க
கோயிலுக்குள் போறாங்க
உண்ணும் உணவிலேயும்
சாதிதான் சொல்லுறாங்க
எண்ணும் நிலை என்றும் இல்லை
விண்ணாடம்தான் பேசுறாங்க

அவன் எங்கள் குடிமகனாம்
நான் உடையார் பரம்பரைதான்
இவன் அந்தப் பக்கமாம்
அவன் கரையோரப் பக்கமாம்
தான் அடிமை வேலைதானே
கழிவறைகள் கழுவினாலும்
நான் பெரிய சாதி என்று
செய்யும் தொழில் மறைக்கிறாங்க

ஈழச் சண்டை வந்தபோது
சாதிச்சண்டை போனதென்றார்
சூழச் சண்டை இல்லை என்றார்
சாதிவெறி அகன்றதென்றார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீழச் சாதி நெறி என்றே ஓதுறாங்க
பாதிதானும் போகலைங்க
வாழச் சாதி பேதங்கள்
சுற்றியே வைக்கிறாங்க!

புலம் பெயர்ந்து வந்துட்டாங்க
நலம் பார்த்துத் திரிகிறாங்க
குலம் வேறு என்கிறாங்க
குடிபோதை கொள்கிறாங்க
வலம் வந்தே கலியாணம்
சாதியாலே பேசுறாங்க
கலம் நிறையச் சீதனமும்
பலமாக வாங்குறாங்க!

வந்திருந்த இடத்தினிலே
பிறந்துவந்த பிள்ளைகட்கு
சிந்திக்காச் சாதியெல்லாம்
உந்திக்கச் சொல்லுறாங்க
பந்தியிலே சாதிப்பெயர்
பத்திரமாய் ஊட்டுறாங்க
முந்தி நின்று கழிவறையை
இரவு பகல் கழுவுறாங்க

கடையினிலே சிப்பந்தி
நடையினிலே கால்நடையாய்
உடையினிலே கேவலமாய்
பார்த்தாலே பரிதாபம்
சடையினிலே பேன்வழியும்
மூக்கிலே சளிமூட்டம்
வாடையிலே அசிங்கம் தான்
பெயர்மட்டும் பெரியசாதிதான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தரகர் வேலை தரத்தாங்க
சாதிவேற பாக்கிறாங்க
ஊர்பேர் எல்லாங் கேட்பாங்க
படிக்காத மாப்பிள்ளைக்கு
காரோடு பொம்பிள்ளைங்க
திமிராக வேண்டுங்க
பேரேடு கேட்பானுங்க
வேரோடு விசாரிப்பானுங்க

கறுப்பினம் வெள்ளை இனம்
சாதியேதும் பாக்காதுங்க
நிறத்தைவிட சாதி என்னனன்பாங்க
அணைந்தும்கூட நிற்பானுங்க
மறுத்துவிட முடியாமல்
அவன்பிள்ளை வளர்ப்பாங்க
குறுகுறுத்துத் திரிவாங்க
மௌனம் கொண்டு இருப்பாங்க

பேதிகுடித்தவராய் அலைகிறாங்க
சாதிமான்கள் தானுங்க
ஓதிஇருந்த பிள்ளை மாற்றினதில்
கல்யாணம் பண்ணிட்டாங்க
சேதிசொன்னால் வெட்கமென்று
நாதியற்று உறைந்தாருங்க
மோதிமுட்டி மனைவியிடம்
அடங்கி ஒடுங்கிவிட்டானுங்க

ஐயையோ அநியாயம்
என்றே உளறுகின்றார்
பொய்யையோ என்பிள்ளை
நடக்காது என்கின்றார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மெய்யாகத் தன்பிள்ளை
கலப்புக் கலியாணம்
செய்ததையே ஏற்காது
நிலவுக்கா ஓடப்போறானுங்க?

மன்பதையே மாறவில்லை
மனிதகுலம் வளரவில்லை
என்பதையே சொல்லிடலாம்
தமிழன் மானம் சாதியில்தான்
தன்வினையால் தவிக்கின்றது
இங்கு உள்ளோன் வளர்வதற்கு
பன்மையிலும் சாதியில்லாப்
பக்குவமே உணரானோ நம்தமிழன்?

UNIVERSITY OF PERADENIYA
14 SEP 2006
LIBRARY

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனிதநேயம் பேச்சிலா?

அன்புடை வாழ்வு வேண்டும் ஆங்கே
அரும் பெரும் செல்வம் வேண்டும் பாரில்
பெரும் புகழெல்லாம் நிறைய வேண்டும்
போலியாய்ப் பேசநாவில் மனிதநேயம் வேண்டும்!

அன்பினை ஆதாரம் காட்டிய புத்தனின்
ஐமணிக் கொள்கைகள் எங்கேயோ உயர்ந்த
அறிவினை மனத்தினில் அகற்றியே முழு
அரக்கராய் மாறினரே போலிகள் பாரீர்!

ஆட்டுக்கே இரங்கி நின்ற புத்தனோ
ஆகாத வழியென்று கூறி வைத்தானே
ஆதாரம் இல்லாத போதில் இங்கு
ஆபாசம் நியாயமாக ஆகி நிற்குதே!

காவி உடை தரித்துவிட்ட எல்லாருமே
காவியத்தின் நாயகன் சொன்னதுவோ பாரினில்
காய்ந்திட வேண்டியோரே கயமைதனை
காத்து நிற்றல் ஆகுதையா நாட்டினிலே!

சித்தார்த்தன் சொன்னதுவோ சிறப்பாமே
சித்தரென வேடதாரிகளின் சிறுமையை யாரும்
சித்தரிக்க முடியுமோ இன்று உலகிலே
சித்தத்தில் நீ கொண்டிடுவாய் மனிதனே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புத்தனின் வழி வந்த மதமுங்கூட
புத்திகெட்டுப் பதினெட்டுக் கூறு ஆனதே
புத்தியின்றிப் பாவங்கள் சேர்வது இன்று
புத்தத்தின் பூர்வீக வழியாமோ?

பஞ்ச சீலக் கொள்கை என்று பிதற்றுவர்
பஞ்சமாகச் செல்லவேண்டும் என்றுமே—ஓட்டுடன்
பச்சையாகப் பிச்சை வேண்டும் என்பரே
பஞ்சமே ஒட்டாத சுக்போக வாழ்க்கையே

சுகபோக வாழ்க்கையே அது தானடா
சுகமாக வாழ்ந்திடவே அவன் தானடா—மாறியே
சுரண்டி நின்று குழப்புகின்ற கூட்டமே
சுத்தமாக நினைந்திடுதல் ஆகுமோ!

மானுடம் போற்றிடும் மாண்பினை அன்று
மாமனிதன் புத்தன் தன் வாழ்விலே— தன்னிடம்
மாவுலகம் புரிந்திடவே உரைத்தனன்
மாந்தரோ உணரவில்லை பாரிலே!

ஈழமதில் இணைந்திடவே நாமிங்கே
ஈனர்களாய் இருந்திடுதல் நியாயமோ—எழுந்து
ஈட்டி இன்பம் பெற்றிடவே நாம் ஒன்றாய்
ஊட்டிடுவோம் எம் உதிரம் உரமாக!

யாதும் ஊரே யாவரும் கேளிர் என்றே
யாரும் அறிய உரைக்கின்ற தமிழ் நீதியே
போரும் புகழும் வையகத்தில் நிலையாமோ
சோரும் மாந்தர் வாழ்வு உயருமோ!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விஞ்சி விஞ்சி ஆயுதங்கள் செய்தே குவிக்கிறான்
அஞ்சி அஞ்சி வாழவென்றே எமக்கு விற்கிறான்
மிஞ்சி மிஞ்சிப் பொருளை எல்லாம் சுரண்டுகிறான்
கெஞ்சிக் கெஞ்சி வாங்கி நாமே அழிகின்றோம்!

கஞ்சிக்கு வழி இன்றிப் பிச்சை எடுக்கிறார்
வஞ்சி விழிக்கு பாவனையில் மிதக்கிறார்
எஞ்சியுள்ள பொருளாதாராம் சிதைக்கிறார்
அச்சம் கொண்டு ஆயுதங்கள் சேர்க்கிறார்!

மனிதநேயம் உதட்டோடு முடிவதா! நின்று
மனிதபேதம் உளத்தோடு உரிமை கொள்ளுதா?
தனித்தவன் முதன்மைக்கு பாலம் தேடவா?
இனியும் உணராது மாந்தர் வாழ்வதா?

மனிதம் நிலைத்து ஓங்கவே ஒன்றாய்
தனித்துவம் அகற்றி அழித்து இணைந்துமே
கனித்திடுவோம் மனிதநேயம் உயர்வுடனே
பனித்திடுமே உலகோர் வாழ்வு மேன்மையில்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எம் பாதச் சுவடு

அல்லும் பகலும் அலைந்து திரிந்து
கல்லும் முள்ளும் கடுகி நடந்து
நெல்லும் நேரும் விரவிப் பெருக்கி
கல்லில் வீடு சமைத்தே இருந்தான்
காடும் மேடும் கழனியே ஆக்கி
தோட்டமும் துரவும் தானே தேக்கி
ஓட்டியே நீரை நடையினில் பாய்ச்சி
காட்டியே பாசப் பிள்ளைகள் ஆக்கி
போட்டியாய் உரமெலாம் வளமாய்த் தந்து
ஊட்டியே தினமும் வளர்ந்திட என்றும்
வாட்டமே இல்லாப் பயிரினை வளர்க்க
வானமே குடையாய் வெயிலும் மழையும்
தாங்கியே நிற்க சகாராப் பாலை வனமாய்
மருதமோ சோலையோ காணாக் கலட்டியில்
கடுகியே வியர்வை ஆறாய் நிலத்தினை
மடுவினில் சேரும் விதத்தில் நனைக்க
கடும் நிலம் பிளந்து பாறைகள் தகர்த்து
நெடு நிலமாக்கத் தலையினில் சுமந்து
தொடு வரை வானைச் சென்று சேரவும்
முருகக் கற்பாறை உறுமென ஒலிக்க
அருக அவன் துயர் ஒன்றாய்த் துணையும்
உருக உடலோ உளமே மேலும்
இறுக துணிவும் திணிவும் ஒன்றாய்ச் சேர
கூறுகளாக்க ஆயுதம் ஏந்திக் கடுநிலம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுக போர்க் களமாக்கியே சமர்கள் புரிந்து
உறுக எனவே போரியல் உக்கிரம் கொண்டு
வீறுகொண்டெழுந்த விறல் வேங்கையேயாக
மாறுதல் இன்றிக் கடும் சினமுரைத்து
ஆறுதல் இன்றி உதிரம் சொரிந்து
தன் தலை தன்னில் கந்தல் அணிந்து
தண்டலை யாக்கப் பயிர்களை ஏற்றி
கண்டலை மாந்தரைக் காறியே உமிழ்ந்து
வெண்டலைப் பெரியோர் தொழுதே நின்று
வெற்றிப் பதாகை நிலத்தினில் பரப்பி
மறத் தமிழன் நானே என்று முரசம் சாற்றி
கறைகள் படிந்த கந்தல்கள் உடலின்
நிறைகளே யற்ற மேனியின் அரையினில்
தரையின் சேற்றில் ஊறியே கலந்த
உறையாய் வண்ணம் மாறியே தோன்ற
முறையே இன்றிக் கோடைகால மகளிரின்
நிறைய உடலைக் காட்டியே எங்கும்
பறை சாற்றிக் காட்டும் நாகரிகம் போற்றும்
குறைந்த உடையினை ஒத்த துணியால்
மறைக்கும் இடங்களை இறுக்கியே வரைந்து
கைதனில் போர் ஆயுதம் தாங்கி என்றும்
மையமாய் மண்ணின் நினைவுகள் வாழ
தையலின் கஞ்சிக் குடத்தில் கருத்தாய்
வைகலில் வீட்டினைச் சேரும் தலைவன்
பைதனில் விளைநிலைப் பயன்களை எல்லாம்
கொண்டு வந்தே வாழ்ந்தான் அன்று
கோட்டமும் குடிசையும் வீடும் வாசலும்
பாட்டமும் ஆட்டமும் கலையில் விளைய
நாட்டமும் கொண்டே நயத்துடன் தந்த
தேட்டமே என்றும் அழியாச் செல்வம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏட்டின் பயன்கள் அறிந்தவோர் உண்மை
நாட்டின் புகழைத் தந்திடும் கேண்மை
ஊட்டியே உயர நோக்கமாய் விதைத்து
நோட்டமாய் எதிர்வரும் சந்ததிக் காக்கி
காட்டமாய்க் கல்விக் கூடங்க ளாக்கி
வளமாய் வாழ வழிகளே சமைத்து
உளத்தின் உயர்வில் ஆலயமமைத்து
ஆழத்தின் ஈர மணலைத் தேடி
ஆழப்பதித்துப் புற்றுகள் அமைத்து
சுறுசுறுப்புடனே திகழும் கறையானாக
விறுவிறுப்புடனே நடந்தவன் தமிழன்
முறுமுறுத்து முடுக்கு ஏற்றியே நின்றான்
முருகக் கற்கள் நிறைந்த கலட்டிகள்
உருகக் கண்டே வெயிலின் கொடுமையும்
வருகவெனவே மனத்தில் பொருதி உழைப்பால்
தருகவளங்கள் நிலமகளே என இறைஞ்சி
கடும்பசி பட்டினி கொள்ளைநோய் விரட்ட
நெடுந்தொலைவு நடந்து உணவிற்கு அலைந்து
கல்லுடன் மோதிக் கழனிகளாக்கி ஓயாதென்றும்
நலத்துடன் உழைப்பை வியர்வையாய்ச் சிந்தி
கலந்துமே பயிர்களை கவனமாய் விளைத்து
உலகம் போற்ற உத்தமனாக உழுதே
கலகம் இன்றி வாழ்ந்தனன் என்றும்
அரசியல் பிழைத்து எம்மைநாமே ஆள்வோம்
அரசின் மந்திரம் இயற்றியே இன்பம் என்றும்
நிரந்தரமாக நிலைத்திட வைப்போம் மகாவலி
சுரந்திடச் செய்வோம் எமக்கே வாக்குத் தாரீர்
தமிழே அழிந்து போவதைப்பாரீர் வாரீர்
தமிழின் இனிமை காப்போம் என்றே செல்வத்
திளைப்பில் வாழ வழிகளைப் பார்த்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏழைகள் வாழ்வில் மண்ணைத் தூவி
வகுப்பு வாதம் சரிவரக்கக்கிக் கவர்ந்தே
தொகுப்பு வாதம் புரிந்தே சிங்களன் நாமே
சிங்கை ஆரியர் நாமே என்றே சாற்றி மகாவலி
கங்கை நீரைத் தந்திட மறுத்து
வங்கம் தன்னில் சங்கமம் கொள்ளல்
தங்கம் தருமோ ஈனருக்கு ஆங்கு
பங்கம் தானே எளிதிற் கிடைக்கும்?
பங்கைத் தமதாய்க் கொள்ளும்
மங்கும் மடையர் உணராரே
எங்கை என்ன கேவலமாமோ
அங்கை உயர்த்தி ஒன்றாய்
வாங்கு புகழைப் பரப்பி எங்கும்
ஓங்க வாழ்வு மேவி வருமே.
இருந்தும் ஏனோ தேரா நோன்பு
மருந்தும் உண்டோ நோய்தீர?
விருந்தாய்த் தேனைச் சுவைகொள்ள
மனத்தாய் இணைவில் உயர்ந்திடவே
அருந்தி என்றும் பண்பமுதம்
அருமைப் பாதையை நினைந்திடுவீர்
திரும்பிப் பார்த்தால் புரிந்துவிடும்
கரும்பின் சுவையாய் எம்பாதை!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்பத் தமிழ்

இன்பத் தமிழைப் பாருங்கள்
அப்பா சொல்லைக் கேளுங்கள்
அம்மா பேச்சைப் பாருங்கள்
அமுதம் சொரிவதை நோக்குங்கள்

இன்பத் தமிழைப் பாருங்கள்
பைந்தமிழ் மொழியில் பேசுங்கள்
செந்தமிழ் தன்னைக் கேளுங்கள்
எம்தமிழ்ச் சிறப்பைக் கூறுங்கள்

இன்பத் தமிழைப் பாருங்கள்
இன்பத் தமிழில் பாடுங்கள்
தந்திரம் இல்லை பாருங்கள்
முத்திரை தன்னைப் பதியுங்கள்

அழகு தமிழைப் பாருங்கள்
வீரம் சிறக்கக் கேளுங்கள்
நிறைய நேரம் படியுங்கள்
சிரமேற் காத்து நில்லுங்கள்

அழகு தமிழைப் பாருங்கள்
வணக்கம் செலுத்தி நில்லுங்கள்
வண்டமிழில் ஓங்கி ஒலியுங்கள்
எண்ணத்தில் இருத்தி ஏத்துங்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முத்த தமிழைப் பாருங்கள்
முத்தமிழ் வித்தகம் கேளுங்கள்
இத்தமிழ் இனிமை சுவையுங்கள்
எத்திசை சென்றும் பரப்புங்கள்

UNIVERSITY OF PERADENIYA
14 SEP 2006
LIBRARY

இன்பத் தமிழைப் பாருங்கள்
மெல்லினம் மிளிர்ந்திடச் செய்யுங்கள்
வல்லினம் ஓங்கிட உழையுங்கள்
இடையினம் சேர்ந்திட வையுங்கள்

இன்பத் தமிழைப் பாருங்கள்
உயிரின் உயர்வை நோக்குங்கள்
மெய்யின் இயல்பை இணையுங்கள்
கையில் உள்ளதை உணருங்கள்

இன்பத் தமிழைப் பாருங்கள்
காதல் மிகுதியாய்க் கொள்ளுங்கள்
மோதல் தவிர்த்தே மீளுங்கள்
ஓதல் தலையாய்க் கொள்ளுங்கள்

இன்பத் தமிழைப் பாருங்கள்
உண்மை மொழியைப் படியுங்கள்
உத்தம மொழியே அறியுங்கள்
வித்தகம் மேலுறக் கொள்ளுங்கள்

இன்பத் தமிழைப் பாருங்கள்
வீரமாமுனியை நினையுங்கள்
தரமாய்த் தமிழைக் கற்றதனால்
தமிழ்ப்பெயரானதை அறியுங்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்புத் தமிழைப் பாருங்கள்
கவியின்பம் பெறலாம் கேளுங்கள்
கம்பன் கவிநயம் படியுங்கள்
காவியம் ஓவியம் அறியுங்கள்

இன்பத் தமிழைப் பாருங்கள்
அன்னை அவளைப் பாருங்கள்
அழகின் அணிகலன் நோக்குங்கள்
அழகின் தமிழைச் சுவையுங்கள்

இன்பத் தமிழைப் பாருங்கள்
சிலம்பின் அழகை ரசியுங்கள்
சீலம் சிறக்கத் தமிழின்பம்
தந்த சிறப்பை நுகருங்கள்

மேன்மைத் தமிழைப் பாருங்கள்
குண்டல அசைவை நோக்குங்கள்
தண்டமிழ் வித்தகம் அறியுங்கள்
விண்ணகம் போற்றுதல் கேளுங்கள்

இன்பத் தமிழைப் பாருங்கள்
மணிமேகலையை ரசியுங்கள்
மண்ணின் இன்பம் கேளுங்கள்
காதல் ஓவியம் வரையுங்கள்

இன்பத்தமிழைப் பாருங்கள்
வளையாபதியின் கலகலப்பில்
சிந்திய முத்தைப் பாருங்கள்
விளைந்த தமிழமுது உண்ணுங்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்பத் தமிழைப் பாருங்கள்
சீவகன் சீரைக் கேளுங்கள்
சிந்தாமணியைப் படியுங்கள்
சிந்தனைத் தூபம் வளருங்கள்

அன்புத் தமிழைப் பாருங்கள்
ஔவைத் தமிழை ஓதுங்கள்
நீதி நெறிகளை அறியுங்கள்
ஓதி நூல்களைப் படியுங்கள்

இன்பத் தமிழைப் பாருங்கள்
வள்ளுவம் சொல்வதை உணருங்கள்
வாழ்வின் நெறியே அறியுங்கள்
குறளின்பம் போற்றி மகிழுங்கள்

இன்பத் தமிழைப் பாருங்கள்
பாட்டின் புலவன் பாரதியே
எட்டயபுரத்தின் ஏந்தல் அவன்
கேட்டே ஏற்றிப் பாடுங்கள்

இன்பத் தமிழைப் பாருங்கள்
பெரியார் சீரைக் கேளுங்கள்
அண்ணா மொழியை அறியுங்கள்
விபுலரின் யாழ்நூல் உணருங்கள்

இன்பத் தமிழைப் பாருங்கள்
பாவேந்தன் பாவைக் கேளுங்கள்
கவிமணி கவிதை பாடுங்கள்
கவியின்பம் அள்ளிப் பருகுங்கள்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பக்கத்து அழகி

எதிர் வீட்டுத் தோட்டத்தின்
உதிர் மரத்தின் சோலையில்
கதிர் போல உடல் சிலிர்த்து
சதிர் போட்டுத் திரிந்தாளே

அள்ளும் இளமை ததும்பவே
துள்ளும் மேனி மினுங்கவே
தள்ளி வெளியில் பார்க்கவே
கொள்ளை இன்பம் கொண்டேனே

கண்டு கொண்ட நாளிலே
கண்ணை அகல விரித்துமே
விண்ணைத் தொடும் அழகிலே
என்னை மறந்தேன் நாளுமே

அருகில் நின்றே துள்ளுவாள்
மெருகாய் உடலைக் காட்டுவாள்
பருகி அழகைச் சுவைத்துமே
உருகி நின்றேன் வனப்பிலே

தினமும் காலை மாலையாய்
மனமே கவரும் காட்சியாய்
கனமாய்க் கருத்தில் உறையவே
நனவாய்த் திடம் கொண்டேனே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துக்கம் விட்டு எழுந்ததும்
ஊக்கம் கொண்டு சாளரத்தின்
பக்கம் வந்து பார்க்கவே
வெட்கம் கொண்டே மறைவாளே

யாருமறியா வேளையில்
ஊருமறியாத் தனிமையில்
உருவழகில் மயங்கியே
கருவழகில் திளைத்தேனே

குடிபெயர்ந்து வந்த நான்
அடிமையானேன் வனப்பிலே
செடி மறைவில் தினமுமே
நடையழகில் மயங்குவேன்

என்னுள்ளம் கவர்ந்துமே சாளரத்தின்
முன்னுள்ள மரத்திலே ஆடல் அரங்கமே
கவர்ந்திழுத்து நின்றதே ஒருதலைக்
காதலாய் என்மனத்தில் அமர்ந்தாளே

நித்தமும் என்றன் கண்ணிலே
சித்தமாய் உடல் சிலிர்த்துமே
வித்தகமாய் அங்கும் இங்கும்
தாவித்தாவி உடற்பயிற்சி செய்வாளே

காலை எழுந்து பார்த்திடவே
சோலை வெறுத்துக் கிடந்ததால் திரைச்
சீலை நீக்கிப் பார்க்கவே என் மூத்த
வாலைக் குமரி என்ன அப்பா என்றாளே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அயல் வீட்டுக் கன்னியாம்
கயல் விழியாள் கறுப்பழகில்
மையல் கொண்ட கதையினால்
தையல் மௌனம் கொண்டாளே

மெத்தப் பார்த்த அவளுமோ
செத்துப் போச்சுப் பாரப்பா
யாரோ கொண்டு போட்டானாம்
பாவமறியாப் பிராணியையே

கண்டு கொண்ட என்மனமோ
விண்டு கொண்டு அழுததே
தண்ட மில்லா அப்பாவியை
கொன்ற பாவி யாரைய்யா?

எதிர் வீட்டுச் சன்னலில்
புதிர் போட்ட பூனையின்
சதிர் ஆட்டம் ஆகுமோ
உதிர்ந்து அழிய அப்பாவியும்

என்மனத்தின் பரிவினால்
நன்மனத்தின் உறவினால்
நந்தவனத்துப் பயிரிலே
சிவந்தமலர் வைத்தேனே

முத்திப் பேறு அடையவே
புத்தி தெளிந்து நானுமே
பத்தி யோடு நல்லடக்கம்
சுத்தி யாகச் செய்தேனே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொடுவினைகள் நித்தமும்
அடுவினையாய்க் கொள்கிறார்
தொடுவினை ஏதும் இன்றியே
விடும் வினையே ஏதெதுவோ?

கொலைகள் புரிந்தார் என்றுமே
தொலைகள் கொண்டு நின்றுமே
விலைகள் பேசிக் கண்டுமே
அலைகள் ஆகப் போருமே

ஏதும் அறியா அப்பாவிகள்
ஏதம் செய்து மாய்க்கின்றார்
வேதம் சொல்வது அறியாரோ?
பேதம் கொள்ளல் நியாயமோ?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மழை

தாகத்தால் தவித்தேங்கி
வேகங்கொண்டு வான்முகில்கள்
பாகத்தே வங்கமதில்
மோகங்கொண்டு வான்திரையில்
கோபத்தே ஆர்ப்பரிக்கும்
ஆரவார ஒலியினிலே அமைதியுடன்
தாமதமாய் நீர்மொண்டே
தங்கமெனத் தகதகத்தே மேலெழுந்து

சாதகமாய் உறவாடி உலாவிவர
தென்றல் திரண்டு மெருகூட்டக் கருவாகி
பேதமின்றி மகிழ்ந்தே முகிற்கூட்டம்
ஆனந்தக் களிப்பினிலே சொரிந்திடுவாள்
சோகமில்லா மாரியவள் மேனியெங்கும்
பூமிதனை மகிழ்விப்பாள் தன்னெழிலில்
பாசமில்லாக் காளான்கள் நாளொன்றாய்
முளைத்துச் சிலிர்த்திடுமே அவளாலே

இன்பங்கொண்ட உழவனவன் அதிகாலை
ஏர்பூட்டிப் புதுவிதைகள் தான்விதைத்து
மன்பதையின் உள்ளமெல்லாம் உவந்துவர
கன்னலென இயைந்திடவே உணவளிப்பான்
வன்மைகொண்டு வியர்வை சிந்த நிலம்பிளந்து
வன்னமாக வரிசையிலே பயிரைநாட்டி
மென்மழையின் தூறலிலே நீர்பாய்ச்சி
தன்கண்ணாய்ப் பயிர்வளரப் பார்த்திருப்பான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன்னெழிலைத் தான்காட்டி நாள்தோறுந்தான்
மென்னெழிலில் பயிரினங்கள் தலையசைக்க
பொன்னிழையின் நீராக மழைவெள்ளம்
கன்னல் கருமுகிலின் வடிவினிலே
மின்னல் மிடுக்குடனே வந்திடுமே நிலம் நோக்கி
நன்செய்ப் பயிரினமோ நாளும் செழிப்புறவே
செந்நெல் வயல் பரப்பில் ஏர்பூட்ட
நிலமகளை நீராட்டி மகிழவைக்கும்

இன்பம் துய்த்திடவே இடிமுழக்கம்
வன்மக் கருக்கலைய இடி இடித்து
துன்பச் சுமையினிலே அன்னை துடித்து
மழலையினைப் பிரசவிக்கு மாப்போல
தன்னுடலம் நடுநடுங்கத் தவித்தே தடுமாறி
நோவும் நோக்காடும் நொடிதுற்று
கன்னித் தாயவள்போல் பன்னீர்க் குடமுடைய
இன்பமழலையின் தாயாகப் பூரிப்பாள் நிலமகளே!

UNIVERSITY OF PERADENIYA
14 SEP 2006
LIBRARY

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்னையே அருள்தருவாய்

ஓராயிரம் நினைவுகளே உனைத் தினம்
பராவிவர உளத்தினிலே நினைவலைகள் தீராப்
பாரம் மனது அழுத்த உனைத் தொழுவேன்
சாரம் நீயாக வணங்குகின்றேன் என்தாயே!

தாயே உனைக் கூப்பாத கரங்கள் உண்டோ?
வாயே உனை அழைக்காத நாளும் உண்டோ?
சேயேன் யான் உன்னைத் தினம் நினைந்துருக
நீயே வானின்றருளும் தெய்வமானாய்.

ஈரைந்து மாதங்கள் உன் உடலிலே
தீராத துன்பங்கள் உன் இடத்திலே
சேராத சுமையாய் நான் இருந்தேனே
ஆரா அமுதாய் எனைத் தந்தாய்

பாரா முகமாய் நான் இருக்க
சோரா தென்னை அரவணைத்தாய்
சீராய் என்னை வளர்த்தெடுத்தாய்
நீராய் உருகி எனக்கமுதாய்

துயரம் எல்லாம் துடைத்திருந்தாய்
வைரம் எனக்காய் உரமே தந்தாய்
கோபுர வாசலில் இருத்தி வைத்தாய்
சிகர அறிவுறுத்தி என உரைதந்தாயே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்பத் தென்றல் வீசி நின்றாயம்மா
அன்புத் தெய்வமாய் ஆனாயம்மா
என்உளத்தில் பூசிக்க இடமானாய்
உன்இதயம் எனக்கே ஆக்கிவைத்தாய்

எத்தனை எத்தனை பிறவிகள் எடுத்தாலும்
தாயே உன்நினைவகலா வைரம் நானல்லவோ?
நீயே என்னோடும் உறைகின்றாய் உந்தன்
காயம் காணா நினைவினிலும் அருளேயம்மா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மன்பதை காப்பரோ?

இன்னல்கள் எத்தனை எத்தனை உலகிலே?
உன்மத்த நோய்களின் கொடுமையில் அழியுதே
என்புதோல் உருகியே மாய்த்திடும் மன்பதை
மின்னென உருப்படும் நோய்க் கிருமியால்

விஞ்ஞானம் விஞ்சியே மருத்துவம் மேவியும்
அஞ்ஞானம் கொண்டுமே அழிந்திடும் உலகிலே
எஞ்ஞானம் இன்றியே உறைகிறார் மாந்தரே!
மெய்ஞ்ஞானம் கொண்டிட மார்க்கமும் புரிவரோ?

வகையறியா நோய்களில் மாண்டுமே மாந்தரும்
தகைசான்ற மருத்துவம் இன்றியே மூன்றாம் உலக
குகையிலே மாள்கின்றார் மக்களும் மாக்களும்
தொகையிலே குறியினால் மறுக்கிறார் மருத்துவம்

எச்ஐவி எனும் ஆட்கொல்லிப் பிசாசமே
பச்சையாகவே பறிக்குதே உயிர்களை (எயிட்ஸ்)
கொச்சை மருத்துவம் தந்திட மறுக்கிறார்
பிச்சைகேட்கினும் இரங்கிடா அமெரிக்கர்

மருத்துவம் பொதுமையே உலகு உய்திட
கருத்துடன் ஐ.நா. கொள்கையாய்க் கொண்டதே
உருத்துவம் எனதென யு.எஸ் சொல்லுதல்
உருக்கமோ மன்பதை வாழ்வில் ஆகுமோ!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பஞ்சமும் பட்டினிச் சாவெல்லாம் ஆப்பிரிக்காவில்
அஞ்சிய இலத்தீன் அமெரிக்க ஆசிய நாட்டிற்கே
எஞ்சிய மக்களை அழித்திட மலேரியா
மஞ்சள் காமாலை எயிட்சுமே அழிக்குதே

அங்குள வளங்களைக் கவர்ந்திடும் மேலை
இங்குள முதலைகள் ஈந்திட வருவரோ பங்குகள்
எங்குள மக்களும் சமானராய் வளம்பெற
இங்குள வழிகளோ கிடைக்குமே அவருக்கே

சிந்தனை கொள்ளுமா ஐ.நா. அமைப்பும்?
நிந்தனை இன்றியே பொதுமையில் மருத்துவம்
வந்தனை செய்யவே தருவரோ அவனியில்
வஞ்சனை செய்திடல் நியாயமோ பாரிலே?

பிணிகளோ மக்களை வாட்டி - நித்தமும்
பணிகளோ கொள்வரோ விரட்டிட நோய்களை
தணியுமோ ஆட்கொல்லி நோய்களோ உலகில்
துணியுமோ ஐநா தன்னிலை உயர்விலே!

உலக சுகாதார அமையம் காக்குமோ
கலக ஆதிக்கம் தன்னிலே அறவழி
நிலவ நோய்களே தீர்த்துக் காக்குமோ
நலிந்துமே சிதைவுறும் மக்களை!

பெருவுளம் கொள்ளுமோ வல்லரசுமே
திருவுளம் தந்துமே உதவுமோ மன்பதை
கருவுளம் மறுத்திடல் மருத்துவம் என்றுமே
உருவுளம் நியாயமோ உலகிலே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொல்லியும் செய்திடாக் கயவனோ உளத்திலே
சொல்லாது செய்யும் பெருமையும் உண்டோ
சொல்லியே செய்கின்ற சிறியனாய் இல்லையோ
கொல்லியாம் நோய்களை விரட்டிட வேண்டுமே!

ஆயிரம் ஆயிரம் மன்பதை ஆண்டாண்டு
நோயுரம் கண்டுமே மாளுதே உலகிலே
தாயுரம் இன்றியே மாளுறார் பாலரும்
வாயுரம் இன்றியே மன்பதை நலியுதே!

உலகினைக் காக்கவே நாம் என்றே
அலகிலே ஆயுதம் தூக்கியே அழித்திடும்
பலத்திலே காவல்துறை யாகவே செயலிலே
தலத்திலே மருத்துவம் மறுப்பது நியாயமோ?

அடக்கவே அநியாயம் என்றே பொய்யுரை
மடக்கவே அவர்நிலை சென்றே தன்னுரை
முடக்கவே பொருள்நிலை கைதிகள் நிரை
தடக்கவே உடை களைதல் நியாயமோ?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொழிலாளரே உணர்வீர்

மாணிக்க மனிதருள்
சாதிகள் இல்லை என்றே
சாத்திரங்கள் நாளும் கூறி
பாத்திரங்கள் வேறாக்கி
ஆத்திரங்கள் தமதாக்கி
கோத்திரங்கள் முன்வைப்பார்
கோயிலிலும் முன்னிற்பார்
*ஹோட்டலிலே* கோப்பை கழுவிடுவார்

*மோட்டலிலே* தூய்மைக்கழிவு
காட்டமாகத் தான்செய்வார்
ஆலையிலே அடிமையாக
ஆவென்றே போட்டி போட்டு
பந்தம் கொள்ளச் செய்திடுவர்
தன்னவரைச் சாடிடுவர்
மேற்பார்வை செய்திடுவேன்
மேலாண்மை கொண்டு நடித்திடுவார்

குழியலறைக் கழிவறைகள்
நாற்றமின்றிப் பார்த்திடுவேன்
மிளிர்ந்து ஒளிபெறவே
மினுக்கித் துடைத்திடுவேன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேலை கொள்ள என் இனத்தை
எட்டப்பனாய்க் காட்டிடுவேன்
இரத்தம் உறிஞ்சத் துரையினருக்கோ
பல கூறிடுவேன் மார்க்கங்கள்

நன்நிலை அறிவரோ நம்மிடையில்
நளவன் பேசும் மொழி என்பான்
பள்ளன் பேசும் கதை என்பான்
தமிழ் மொழிக்கே இக்கதியா?
வாழும் தமிழ்ச் சாதிகளின்
மாளும் காலத்தை உணரானோ
தோளும் தோளும் இணைந்திங்கே
நாளும் வேலை செய்வதை உணரானோ?

பாழும் வாயினில் பகுத்தறியான்
கோள் உரைகள் தினம் கொண்டு
நாளும் மடமை மேலும் போற்றி
நாயாகத் தன் இனத்தைக் கடித்துக்
குதறி குருதிகுடிக்க வழி சொல்லல்
பெருமை என்று பேசிடுவான்
கதறி வருந்தும் நாளினிலே
உதவும் கரத்தை உணரானோ

சிறுமைகள் என்றும் செய்திடுவான்
வறுமைகள் என்றே பொய்யுரைத்து
பாதகமோ அரசுப் பணம்
இலவசமாகப் பெற்றிடவே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழிபலதும் தான் கொள்வான்
தமிழன் என்று தன்மானம்
வீரம் எல்லாம் பிறருக்குரைப்பான்
ஊரின் உறவு சொன்னால் தன்

பேரின் மானம் இழிவென்றே
இரத்த உறவை மறைத்திடுவான்
உரத்துடன் வாழ்ந்திடத்தான் என்றும்
கரத்தினில் கிடைத்திடும் வேலையெல்லாம்
சிரத்தினில் செய்தே உடையவன்
கருத்தினில் இருந்திட உழைத்திடுவான்
தன்உதிரம் உறிஞ்சுவதைப் பாராது
உடையவன் வாழவே வழிகொள்வான்

உடைத்தே வைக்கிறான்தன் வர்க்கம்
உணர்விலே பணமே பெரிதென்பான்
கனவிலும் இல்லாத போக்கிரியாய்
நினைவிலே முதலாளிக்கு உழைக்கின்றான்
தொழிலாளர் பக்கம் சாரானாய்
முதலாளிக்கே உழைக்கின்றான்
முதலாளித் தனத்திற்கு விசுவாசி
அதல பாதாளத்திலும் விலைவாசி

அடிமைத் தொழிலில் ஒன்றாக
விடியும் வரையும் தூக்கமின்றி
கடிவாளக் குதிரையா யுழைத்து
பிடியிலே வலமே வருகின்றான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடிதினில் காய்ந்திடும் முதலையிடம்
கனமாய் ஏற்றுச் செய்கின்றான்
நடிப்பினிலே பெருமை கொள்கின்றான்
சகோதரர் துடிப்பினில் மகிழ்கின்றான்

வேலை செய்யும் உற்றவரை
தலைக்கு மேலாகச் செய்என்பான்
தடைகள் இன்றி ஏவலெல்லாம்
மடையராய் மாடாய்ச் செய்திடவே
தற்பெருமை பேசி உழல்கின்றான்
தொழிலாளர் தோழமை உணராது
தோட்டியாய் எண்ணி விடுகின்றான்
மாட்டியே அவரை வைக்கின்றான்

வேண்டியே வேலை செய்தங்கு
விசுவாசம் கொண்ட முதலாளி
தோண்டியே உடலை உறிஞ்சிவிட்டு
வேண்டா வேளை விரட்டுகின்றான்
தீண்டவே முடியா நிலையினிலே
மனமே உடைந்து உலைகின்றான்
நண்பரே இன்றி அலைகின்றான்
ஆற்றொணாத் துயரும் அடைகின்றான்

வேண்டியே இணைந்தால் தொழிலாளி
இடர்கள் வந்தால் காத்திடுவான்
சுடர்கள் ஆகப் பலம் பெறவே
அடர்ந்தே ஒன்றாய்க் கரம்சேர

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடரும் இடரைத் தவிர்த்திங்கு
படரும் ஒளியில் வாழ்ந்திடலாம்.
கேடராகத் தம்முழைப்பை விற்றுப்
பிழைத்தல் பயன் தருமோ?

எண்ணி உழைக்கின்ற உழைப்பினிலே
உதவும் கரமாய் இணைந்துவிடில்
உண்ணியாக உறிஞ்சுகின்ற பெருச்சாளி
மண்ணில் புதைத்திடத் தொழிலாளர்
கண்ணியம் கொண்டே இணைந்துவிடில்
திண்ணிய மனத்தால் நிலைத்திடுமே
பண்ணிய கருமம் கைகூடும் என்றும்
படிந்தே உயர்ந்திடும் உறவாலே

வசத்துடன் கரங்களை உயர்த்தவே
நிசத்துடன் இயைந்தே கூடி
முதலைகள் கொடுமைகள் அழித்து
பேதைகளாக அன்றி வீரியம்
சிந்தைதனில் கொண்ட வாழ்வில்
தொழிலாளர் கரங்கள் ஓங்கும்
வதைகளே இல்லாதிங்கு இன்புடன்
உலகம் ஓங்கும் ஒருநாள்!

UNIVERSITY OF PERADENIYA
14 SEP 2006
LIBRARY

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாம் இரண்டானால்

நாம் இரண்டு பட்டால்
நயமடைவான் கூத்தாடி
ஆம் என்றே இருந்துவிட்டால்
கூத்தாட்டும் முதலைகளோ
மெத்தப் பெருக்கின்ற காலமிது
சேத்தாட்டி எமை யெல்லாம்
வித்துப் பிழைக்கின்ற பெரும்
பித்தலாட்ட உலகமிது உணர்வீரோ?

தேசமதைப் பார்த்திங்கு மோசமாய்
நாசம் போகின்றோம் மானமின்றி
பாசம் ஏதுமின்றி எம்மவரை
மோசம் செய்கின்றோம் எனும்
வாசம் ஏதுமின்றி வாழ்கின்றார்
மானிடரோ சாதிகள் பேசிஇங்கு
பேதிகள் குடித்தோர் போல
பாதியிலே பெருமை கொள்கின்றார்

வீதியிலே விற்று எம்மை
சேதியிலே பெருமை கொள்ளும்
சமத்துவம் பெற்றிட ஏதும் இல்லை
கசத்துமே மனத்தினிலே அழுந்தி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெம்பி வெடிக்கின்ற கோளாறு
உம்பித் தலைக்குமேல் ஏற
வம்பில் மாட்டி விட்டு விட்டு
தம்மில் பிடியேது மின்றி

நம்பிக் கடிதங்கள் மறைவினிலே
மொட்டையாக எழுதியங்கே
தும்பி போலப் பறந்து சென்று
இணைந்தே இருப்போர் பிரிந்திடவே
சமத்துவம் உதட்டினிலே நலமாய்ப் பேசி
உரிமைகளை வென்றெடுக்க வாரும்
உயர்த்துவம் நும்வாழ்வு என்றுரத்து
ஊருக்கெல்லாம் உபதேசம்

கயமை நினைவோடு உளத்தில்
பகைமைதனை வளர்த்து
தயவைத் தான்பெறவே
போலி வேடங்கள்
நயமாகப் பொய் உரைகள்
நேருக்கு நேராகப்
பேருரைகள் சமபந்தி
சமபோசனம் உண்பர்

தீர்ந்ததே சாதியென
ஓலமிடும் பலபேர்தாம்
பாருக்குள் பல சாதி
ஆருக்கும் தெரிந்திடா
நேருக்கு நேர் கூறா
நெருக்கடி மனத்தினிலே
நெருடி வதை வதைக்கக்
கரடி போல் திரிகின்றார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருட்டு விழி விழித்து
தற்பெருமை கொள்வதற்கே
கற்றவரைச் சாடி நிற்கும்
கயமைக் கூட்டம் இங்கு
தயவாக உண்பதற்கு
மிகையாகப் பிச்சை
அகதியெனப் பொய் உரைத்து
அரசுப் பணம் பெறுவார்

இருகரம் கூப்பி தயங்காது
இல்லாப் பொய்யுரைகள்
நல்ல ரகமாய் எடுத்துரைத்துப்
பெறுகின்றார் உள்ள பயன்
நரைதிரை ஏறினாலும்
நம்மவரின் மதியினிலே
நல்லவை தேங்காது
பொல்லா நினைவுகளாம்

கயமையெலாம் ஏறிவர
தெளிவற்ற சொற்களையே
பயமின்றிப் பிதற்றுகின்றார்
வயமாகப் பாலகர்க்கோ
நயமில்லாப் பொய்யுரைகள்
சுயமாகப் போதித்து
வயமாக ஆக்குகின்றார்
மெய்யிழக்கப் பாலகரை.

தொலைபேசி அழைப்புக்கு
தொல்லை எனச் சொல்லி
மலைபோலத் தானிருந்து
மல்லாந்து இல்லையென பொய்க்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலைகள் எல்லாம் தம் பிள்ளைக்கு
நிலையாய்ப் பயிற்றுவித்து
கொலை செய்யும் மன நிலையை
மைந்தர்க்கு வளர்க்கின்றார்

பொய்யிலே வளர்ந்து
செய்கையிலே மாறாக
வாய்மை தெரியாது
கயமை தலைக்கொண்டு
மடமை வழிநின்று
உடைமை கைக்கொள்ளத்
திடமாய்க் குறுக்குவழி
நினைவில் இருத்தியாங்கு

தினமும் முனைகின்றார்
பொய் களவு தயக்கமின்றி
செய்யவே வழிபட்டு
மாற்றான் உடைமையெலாம்
மாற்றமின்றிப் பெற்றிடவே
ஆற்றாமை மிகக்கொண்டு
தோற்றாமல் வானொலியும்
கூட்டாகக் கார் உடைப்பும்

வீட்டோரம் செய்கின்றார்
நாட்டோரம் நயமாகச்
சீட்டாட வழிகண்டு
நீட்டாத விடுதியிலே
இரவுநடனம் ஆடுகின்றார்
தரவுதான் என்னவென்றால்
வேலைக்குச் செல்லாது
தொலைக்கின்றார் தம்வாழ்வு

UNIVERSITY OF ... 14 SEP 200... LIBRARY

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொலைவின்றி காவற்துறை
வலையில் தொடராக மாட்டி
மலைத்துமே மாய்க்கின்றார் வாழ்வு தனை
அறியாத வயதினிலே அன்புடனே
கலையாகப் பண்புகளை பயிற்றாத
நிலையாலே தடுமாறித் தவிக்கின்றார்
சிலையாகப் பெற்றோரோ சிதைக்கின்றார்
உலைந்திங்கு தம் வாழ்வை

இலவசக் கல்வி சலுகை விலை
போக்கு வரத்து வாடகை வீடு
பலமாகத் தனியான அரசு நிதியுதவி
விலையில்லாத் தொலைபேசி
துணையில்லாத் தாயவளுக்கோ
அணைப்புகளோ மிகவதிகம்
நிலையான வசதிகளே நம்மவர்க்கு
உலைவில்லா வாழ்விங்கு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கோடைப் பாவை

வசந்தம் இலை துளிர்க்க
வாசமலர் மொட்ட விழ்க்க
இளந் தென்றல் வீசி வர
இளவேனில் கதிர் வீச
குளிர் காற்றுத் தொட்டணைக்க
துளிர் மலர்த் தேன் ஊற
தளிர்மேனி துள்ளியெழத்
தவித்திடுமே இளமை.

மலர் வனமோ மணம்வீச
அலர் வண்டு இசைத்து வர
உலக மெலாம் உவப்பெய்த
இன்ப வசந்தம் வெயிலவனோ
இனியேன் யான் எனக் கதிர்பரப்ப
இனிய நல் வசந்தம் மாறிவர
கனிகள் கனிந்து கனத்து நிற்க
கொளுத்தும் கொடும் வெயில்

கோடை கனலாக வெயில் எரிக்க
சோடை மர நிழலில் தவமிருக்க
ஓடை நிழலினிலே குதூகலிக்கும்
மடை போடும் சிறுவர் உளம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குடையின்றி வெயிலினிலே
தடையின்றி விளையாடி வர
எங்கும் வெளிச்சம் கண்ணைப் பறிக்க
அங்கும் பசுமை செழிப்பாய்த் தெரிந்திடவே

சங்கும் சிப்பியும் கரையில் ஒளிர்ந்திடவே
தங்கும் இடமெலாம் தணலாய்க் கொதிக்க
கோடை வெயிலின் கொடுமையும் தெரிய
சாடையாகவே சூடும் மேலே உயர்ந்துவர
ஓடைநீரினில் நீச்சலடித்திட நாளும்
மேடையோரமாய் நீரும் குறைந்திடுமே
கொடும் வெயில் வீச்சில் வாடிடும்
கொண்ட நற் பசுமையும் மாறிடுமே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மருத நிலத்தழகு!

முல்லைப்பூ மொட்டவிழ்க்கும்
முல்லையூர்க் கரையழகே
பல்லைக் காட்டியே நிற்கின்ற
கவியினங்கள் தாவி வரும்
எல்லைபட வாழ்ந்த அந்த
எழில்மிகு காட்சி எல்லாம்
தொல்லை நீங்கப் பார்த்திடலாம்
தேனோடும் வன்னியிலே

பணி கொண்டு ஏர்பூட்டி பயிர் நாட்ட
கார்காலம் மையல் கொண்டு
அணியாக மல்லாந்து இதழ் விரிக்க
மகரந்தம் சொட்டுச் சொடுக்கிவிட
மணிக் கொடியோ உடல் பெருத்து
மத்தளம் போல் புடைத்து நின்று
மணி மணியாய்க் காய்த்து நிற்கக்
கண்டிடலாம் வயற்பரப்பினிலே

அந்தப்புறம் மானினமும்
இந்தப்புறம் மயிலினமும்
கொஞ்சிக் குலாவி நிற்க
காதல் வேட்கை எல்லாம்
மனத்தில் கிளர்ந்து சிலிர்த்துவர
கார்த்திகை மலர் பறித்தே
தனதில் மனமிருத்தி வீடுசேரும்
காளையர் பலரைக் கண்டிடலாம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காட்டுக்கோழி கானகத்தே கூவிக்
காட்டி யழைக்கையிலே
பேட்டினமோ அருகணைந்து வர
புழுதி கிளப்பிப் புயலாகக்
காமம் கொண்ட சேவலங்கே
கால்தூக்கி வருகையிலே
தத்தித் தத்தித் தடுமாறிச் சுழன்றுவரும்
சித்திப் பேடுகளின் அழகு மருதத்திலே!

அலைமோதி ஆர்ப்பரிக்க எருமையினம்
வாவி புகும் காட்சியெல்லாம்
தலைதெரிய அல்லிக் கொடியிடையே
ஓய்வெடுக்கும் வேளையிலே
அலையலையாய் நீர் அசைந்து வர
நீர்யானை போலங்கு காட்சிதரும்
நிலையான காட்சிகளை நீர் நிலையில்
பார்த்திடலாம் மருதநிலப் பரப்பினிலே

கஞ்சிக் கலயம் தலையில் சுமையாக
விஞ்சிக் கைவீசி வரும் நங்கையரோ
கெஞ்சிக் கண்ணசைத்துக் காதலனை
மெச்சி அருகழைத்து வரப்பு மேட்டில்
மிஞ்ச மிஞ்ச உணவளித்து உவகையிலே
கொஞ்சிக் குலாவிக் கடைக்கண் வீச்சாலே
தஞ்சம் எல்லாம் தான்நீக்கி காதலர்க்கு
விஞ்ச மிடுக்கதனை வரப்பினிலே தந்திருப்பாள்

துள்ளி வரும் கன்றுகளைத் தாமணைத்து
அள்ளி உச்சி மோந்து உறவுகொண்டு
வெள்ளி வெளிச்சத்திலே பாலூட்டும் கறவைகளோ
உள்ள இன்பக் காட்சிகளாம் மருதத்தின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெள்ளி வரும் நன்செய் நிலமகளின்
புன்செய் புலங்களிலே அழகுமிளிர் தரையாக
புள்ளி கொள்ளப் பசுவினங்கள் காளைகளோ
காதல் கொண்டு வலம்வருமே மருதத்திலே

மான் துள்ள மயிலாடும் குயிலிசையின்
குரலொலியோ சோலையிலே
கிளியினங்கள் அருகமர்ந்து மருதமரம்
மீதிருந்து கிள்ளை மொழி பேசிவர
கவியினங்கள் இளைப்பாறும் மழலைகளின்
உறவினிலே உல்லாசம் கண்டிடுமே
தவிப்பின்றித் தூக்கணாம் குருவிக்கூடு தென்றலில்
அசைந்தாடும் எழில்மேவும் மருதத்திலே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழர் திருநாள்

தமிழர் திருநாளாம் தைப்பொங்கல் தினமதனை
தமிழ் உணர்வு பொங்கிடவே போற்றிடுவோம்— நாமே
தமிழ் மகனின் தகைமையான பெருநாளே தேன்இனிய
தமிழ்அமுதுச் சுவையுடனே ஏற்றிடுவோம் பொங்கலினை.

முன்னவனின் வழிவழியே போற்றிவந்த தமிழ்அமுது
பொன்னவனின் நினைவுடனே பொங்கி மகிழ்ந்திடுவோம்
அன்னவனின் அமுதவார்த்தை நினைவினிலே பொங்கி
தென்னவரின் அற்புதங்கள் உலகறிய வைத்திடுவோம்.

நெற்றிவியர்வை நிலத்தில் சிந்த விதைத்து வைத்த
நெல்மணிகள் வீடுசேரும் நேரமதில் நிறைவுடனே
செய்நன்றி நினைவினிலே இயற்கை அன்னையைப்
போற்றிப் புத்துணர்வில் பொங்கிப் படைத்திடுவோம்.

மாவிலைத் தோரணங்கள் மாவிளக்கு முற்றத்தே
மாவினிலே கோலங்கள் மாதரவர் கைவண்ணம்
மானிலம் நலம்பெறவே முற்றத்தே அடுப்பமைத்து
மகிழ்வுடனே பொங்கலிட்டு வாழ்த்திடுவோமே!

காடுவெட்டிக் கழனியாக்கி களிப்புடனே விவசாயி
காடெல்லாம் பயிர்படைத்தே உலகதனைக் காக்கின்ற
காவுயர் சோலைவாழ்வு மலர்கின்ற பொழுதினிலே
காவல் தெய்வத்திற்கே பொங்குகின்ற பொங்கலிது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாலாறு பாய்கின்ற பட்டியிலே பாலெடுத்து
தேனாறு தெவிட்டுகின்ற நெய்யுடனே பழவமுது
தேன்கதலி பலாச்சுளைகள் மாம்பழங்கள் வைத்தே
வாயார வாழ்த்தி நிற்கப் பொங்குகின்ற பொங்கலிது.

கோடையிலே வறண்டுவிடும் கடும்பாறை தானுடைத்தே
கோடரிக் கையுடனே கலப்பைநுகம் சேர்த்து அவன்
கோடை எல்லாம் நிலம் புரட்டிப் பண்படுத்தி
கோடாகப் பயிர் நாட்டிப் பயனுற்ற பொங்கலிது.

ஈசனவன் வரம்வேண்டி நேர்ந்து நின்று உழவு கட்டி
ஈன்றெடுக்க முனைந்துநின்று கன்னியவள் உதிரத்தில்
ஈனமின்றித் தான்கலந்து விளைந்துவிட்ட முத்தினிலே
ஈரமுடன் பொங்கல் குடமேற்றும் பொங்கலிது.

நிலமகளிடன் காதலிலே அவளுடனே உறவாடி
நிலைமகளின் களிப்பினிலே தன்னுதிரம் தான் கலந்து
விதைத்து விட்ட முத்துகள் குடலை விரித்து வளர்ந்து
விதையாக வந்தபின்பு பொங்குகின்ற பொங்கலிது.

பூமி நல்லாள் புன்சிரிப்பில் தனை மறந்த விவசாயி
பூமி நங்கை உடலினிலே விதைகள் தான் விதைத்தே
பயிர் வளர்ந்து நிறைமாதக் கர்ப்பிணியாய் நிற்கையிலே
பக்குவமாய் உணவளித்தே களிகொண்ட பொங்கலிது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பத்திரிகைப் பைங்கிளி

பலமாகப் பாரிலே புதிதாகத் தருவாள்
பண்பாளர் அவள்மீது கண்வைக்க நகைப்பாள்
தலமாகத் திரிந்துமே உலவிவரு மிகையாள்
தடையில்லா இடமெலாம் தன்னெழில் பொழிவாள்
கலமெனவே எப்பொருளும் தன்னகத்தே கொள்வாள்
கடைவீதி வலமாக வந்துமே நிறைவாள்
வலமென வந்துமே கரங்களில் அமர்வாள்
வளமுடன் வாசகர் உள்ளத்தில் உறைவாள்

செய்திகள் செயல்களாய்க் கருக்கொண்டே இருப்பாள்
செவ்வியும் சிலபோது சிறப்புறவே தருவாள்
வதந்திகள் வளமாக வசைபாடத் தருவாள்
வாந்தியாய் உள்ளவை உமிழ்ந்துமே தருவாள்
பந்திகள் நிறையவே கதைகளும் அளப்பாள்
பல்லக்கில் ஏறியோர் விவரமும் தருவாள்
பிந்திய நிலைகளும் பாதியாய்த் தருவாள்
பரிதவித்தேங்கிட வாசகர்க்கு வழிவைப்பாள்

உத்தமர் கையிலே தருமமே காப்பாள்
உலகையே ஒன்றாக இணைத்துமே தருவாள்
வித்தகர் வியந்திட விமர்சனமும் செய்வாள்
விடியலைத் தேடவும் விழித்திடச் செய்வாள்
எத்தர்கள் ஏய்த்திட எச்சரிக்கை தருவாள்
ஏமாற்றம் கொண்டோர் பரிதாபம் உரைப்பாள்
சித்தர்கள் சிறப்புகள் சீர்மையில் கொள்வாள்
சிரித்திடச் சிலபோது நகைமுகம் தருவாள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேண்டாதார் வீம்புகள் விசனமாய் உரைப்பாள்
வேண்டாதாரை வீதியில் தூக்கியே எறிவாள்
தாண்டாத அன்பரை அணைத்துமே இருப்பாள்
தாண்டிய தவறுகள் இடித்துமே உரைப்பாள்
சீண்டுவோரைக் கண்டு சீறியே எழுவாள்
சீண்டியும் சிலவேளை சிலையாக நிற்பாள்
தீண்டியே சிலபேரைச் சந்திக்கு இழுப்பாள்
தீயதோ நல்லதோ நடுநிலை என்பாள்.

வஞ்சனை இன்றியே வரும்பொருள் உரைப்பாள்
வரவிலே வாஞ்சையே மிகையாகக் கொள்வாள்
கஞ்சனைக் கயவனைக் கடிந்துமே கனல்வாள்
காமுகன் கருத்துகள் விருப்புடன் தருவாள்
நஞ்சனைய மாந்தரை நயமாக எடுத்துரைப்பாள்
நயவஞ்சகம் புரிவோரைச் சாடவும் செய்வாள்
தஞ்சமெனும் வாசகரை வளமாக வாழ்த்தி
தரணியில் தான்வாழ வழிகளே செய்வாள்.

விளம்பரம் விளைதிறன் வினையாகக் கொள்வாள்
வினயமாய் என்றும் அவர்துணை ஏற்பாள்
விளம்பலே இன்றித் தன்னகம் நிறைப்பாள்
தன்னிலை உயரத் தவித்துமே துடிப்பாள்
களம்பல கண்டுமே கருத்துகள் தருவாள்
கவின்கலைக் கருத்திலே உயர்ந்துமே நிற்பாள்
வளம்பல கூட்டவே கவர்ச்சியும் தருவாள்
உளம்பல கொள்வாளே பத்திரிகைப் பைங்கிளி!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனிதன் இவனோ?

மனிதன் என்பவன் இவன்தானோ?
மனத்தில் உண்மை கொள்வானோ?
தினத்தில் தன்னை மறப்பானோ?
கணத்தில் நினைவுகள் கொள்வானோ?

சேர்ந்தே வாழ்ந்தே உயர்வானோ?
ஆர்ந்தே எழுந்து வளர்வானோ?
சார்ந்தே கருமம் செய்வானோ?
ஓர்ந்தே உலகைப் புரிவானோ?

தன்னிலை தன்னை உணரானோ?
முன்னிலை மேவிட உதவானோ?
முன்னோர் தம்மை மதியானோ?
என்னிலை இடரும் தீரானோ?

ஏழைமையை விரட்ட இணைவானோ?
வாய்மையை வாழ்வில் கொள்வானோ?
பொய்மையே பேசித் திரிவானோ?
உண்மையை உரக்கச் சொல்வானோ?

கயமையை வாழ்வில் கொள்கின்றான்
பகைமையால் அழிந்தே போகின்றான்
தொகைமையில் பணமே சேர்க்கின்றான்
பேதைமையால் அழிந்தே போகின்றான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காந்தியின் வழியைப் பேசுகின்றான் எனினும்
கோட்சேயின் வழியில் செல்கின்றான்
வள்ளுவன் சொன்னதை உரைக்கின்றான் எனினும்
கள்ளனாய் என்றும் வாழ்கின்றான்

புத்தனின் வழியே பெரிதென்பான்
எத்தனாய் வாழ்ந்தே வருகின்றான்
சுத்தமே உடையில் கொள்கின்றான்
அசுத்தமே மனத்தில் விதைக்கின்றான்

அன்பே பெரிதெனச் சாற்றுகின்றான்
இன்பை அழித்தே ஒழிக்கின்றான்
துன்பம் மாய்வதைக் களிக்கின்றான்
என்பை உடைத்தே சிதைக்கின்றான்

உலகம் தனக்கே என்கின்றான்
திலகம் இட்டே அழிக்கின்றான்
பலதும் தானே என்கின்றான்
சிலதும் இன்றி அழிக்கின்றான்

உலகு உய்ய வழி என்பான்
அலகு நிறையப் பழி கொள்வான்
சிலவே தனக்காம் என்றுரைப்பான்
நிலவும் வளங்கள் குவித்திருப்பான்

மன்பதை வாழ வழிகள் என்றே
தன்வினை எங்கும் விதைக்கின்றான்
உலகை அழித்தே சிதைக்கின்றான்
அகலக் காலை வைக்கின்றான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாரணி வாழ வழி என்பான்
தாரணி வேந்தன் தான் என்பான்
ஊரணி எல்லாம் சிதைக்கின்றான்
போரணி எங்கும் நடத்துகின்றான்

வளங்கள் குவிக்கும் நோக்கினிலே
உளங்கள் உரக்கக் கதைத்திடுவான்
களங்கள் பிணமே நினைக்கின்றான்
தளங்கள் நிறைத்தே வருகின்றான்

அணு குண்டுகளை அடுக்கிவைத்தே
பணக் குண்டுகள் சேர்க்கின்றான்
பிணக் குண்டுகள் நிறைந்திடவே
குணமிலாப் போரைத் தொடர்கிறான்

மன்பதை வாழ்ந்திட வழியின்றி
முன்பகை கொண்டே அழிக்கின்றான்
லேசர் ஆயுதம் தான் தோற்றி
மன்குலம் அழிப்பவன் மனிதனாமோ?

எண்ணெய் வளத்தைக் கவர்ந்திடவே
பண்ணும் கொலைகள் எத்தனையோ?
மண்ணும் நம்பாப் பொய்யுரைகள் தினம்
எண்ணும் மனிதன் இவன்தானோ?

மனிதம் உலகில் உய்ந்திடுமோ?
மனிதன் என்பவன் உணர்வினிலே
தனிமை கொண்டே எழுவானோ
பொதுமை படைக்க வருவானோ?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆதிபத்தியம் அழியும்

காடும் மேடும் கல்லும் முள்ளும்
அல்லும் பகலும் கடுகி நடந்து
உடலில் உதிரம் நீரென வடிந்து
அருவியில் விழுந்து கடலில் கலந்து
கிழக்கு வானம் செம்மையே சேர
மரத்தில் மரமும் உரசிடப் பொறியை
சிரத்தில் கண்டே கல்லும் கல்லும் மோத
தீயினைக் கண்டு கடுங்குளிர் போக்கி
உணவைச் சுட்டு உருசியும் கண்டு
கல்லைக் கடைந்து கருவியே ஆக்கி
தொல்லை தந்த இயற்கையை மாற்றி
மண்ணைத் தொட்டு மதியினால் பார்த்து
பாத்திரம் எனப்பல மெல்லவே செய்து
மண்ணில் நல்ல இரும்பையே கண்டு
கல்லில் மரத்தில் ஆயுதம் நீக்கி
இரும்பில் நல்ல ஆக்கமும் செய்து
இருந்தே விலங்கென அலைதலின்றி
இருள்சூழ் காடுகள் கழனிகள் ஆக்கி
இருப்பின் மண்ணைப் பிளந்து தந்து
மருப்பினில் மருவியே தானியமாக்கி
நீரின் நிலையைத் தேர்ந்துமே கொண்டு
குழுமம் அமைத்து குடிலும் அமைத்து
வழுவுடை வாழ்வை வளமாய் ஆக்கி
வான்பயிர் கான்பயிர் கனதியில் அறிந்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேன் இனம் கண்டு தெவிட்டா வாழ்வு
என் இனம் அலைதல் என்று தீருமென
தன் இனம் வாழ வழிகளும் ஆற்றி
புல்லினம் புதுமை தானே உணர்ந்து
பல்வகைத் தானியம் பார்த்தே தேர்ந்து
கல்லில் விதைகள் இணங்காதென்றே
பள்ளம் பார்த்து பயிரிடும் வாழ்வை
வெள்ளம் சேரா இடமது பார்த்து
கள்ளமில்லா உள்ளமே கொண்டு
மெள்ள வீடு வாசலும் கட்டி
உள்ளம் கொண்டு உணவுகள் தேடி
கள்ளம் இன்றிப் பகிர்ந்தே உண்டு
ஒற்றுமை ஓங்க மானிடம் மேவி
வேற்றுமை களைய விரதமே பூண்டு
பொதுமை வாழ்வின் இலக்கணம் மேவி
தனிமை உடைமை பேதமே இன்றி
யாரும் ஒன்றே யாவரும் கேளிர்
ஆரும் பகையா வாழ்வினைக் கண்டு
மனமும் மகிழ்ந்தே குலாவி என்றும்
பெருமை சிறுமை இல்லா வாழ்வு
அருமை எனவே இல்லிடம் சேர்ந்து
குழுமம் ஒன்றாய்க் குதூகலமாக
நழுவுதல் செழுமை ஏதுமே இன்றி
அந்தியும் சந்தியும் ஆடிப்பாடி
அருவியின் நீரை முறையாய்த் தேக்கி
அணையைக் கட்டி வாவியுமாக்கி
நன்னீர் பாய்ச்சி பயிர்களும் வளர்த்து
கானத்து விலங்குகள் கட்டிக் காத்து
இல்லத்து விலங்காய் ஆக்கியே தந்து

UNIVERSITY 14 LI

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆடும் மாடும் குதிரையும் கோழியும்
வாழ்வுக்கு ஆக்கி இணைந்தே வாழ
நாயும் பூனையும் நயத்துடன் வளர்த்து
சிறிய பயனும் பெரிதெனக் கொண்டு
உலகின் பொருள்கள் தனக்கெனக் கொண்டு
உலவும் இயந்திரம் உருண்டிட ஆக்கி
பலவும் பார்த்து கடிதில் புரிந்து
நீரினில் செல்ல ஓடமும் ஆக்கி
காற்றின் வழியைத் தனதே ஆக்கி
பாய்மரம் பறக்கப் பயனும் தந்து
பறவையைக் கண்டு பறந்திட எண்ணி
விரைந்து செல்ல விமானமும் ஆக்கி
தரையினில் வாழ்வு தரமில தென்றே
விரைவினில் ஏகி விண்ணகம் சேர
அண்டம் எங்கும் நிலைகளைத் தேடி
அலைந்திடும் மனிதனின் வாழ்வுநிலையே
அமைதியும் அற்று ஆறுதல் இன்றி
அகத்தினில் ஆணவம் தலைக்கே ஏற்றி
அயலவர் உலகவர் எல்லாம் இங்கு
அடிமையாய் ஆக்கப் போரில் விழைந்து
அல்லும் பகலும் விரோதமும் குரோதமும்
வெல்லும் என்றே கங்கணம் கட்டி
செல்லும் இடமெலாம் போரினால் முடிய
ஒல்லும் மன்பதை மாய்ந்தே போக
வளங்களை நிறைத்து ஆயுதமாக்கி
வளமெலாம் அழித்துச் சிதைந்து போக
இல்லிடம் இருப்பிடம் எல்லாம் அழித்து
நல்லிடம் எல்லாம் புழுதிக ளாக்கி
விளைவிடமெல்லாம் பாலைவன மாக்கி

OF PERADENIYA
SEP 2006
LIBRARY

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வளமெலாம் கொண்டு குவித்துமே
உலகின் தலைவன் நானே என்று
நிலத்தின் மன்பதை உதிரத்தைக் குடித்து
புலத்தின் ஓநாய் வேடமும் பூண்டு
மனத்தில் மன்பதை நினைவுகள் அகற்றி
களத்தில் பேயாய் பிசாசாய் நின்று
பிள்ளைகள் பிஞ்சுகள் குழந்தைகள் பெண்டிர்
கிள்ளைகள் முதியோர் அனைவரும் ஒன்றாய்
கூட்டியே என்பை அள்ளவே அங்கு
குண்டுகள் வீசி மாடங்கள் கோட்டங்கள்
வண்டுகள் போல மானிடர் மாள
திண்டுமே திமிராய் இருக்கின்ற மேலை
திமிரினை அடக்க அணியில் திரள
தண்ணொளி மாந்தர் இணைவது உறுதி
பாமரர் பாட்டாளி மீண்டும் இங்கு
ஏமாளி ஆகார் என்பது என்றும் உண்மை.
என்றோ ஒருநாள் எமது ஏக்கம்
ஏற்றே இணைவர் இடித்தே வீழ்த்த
காற்றாய் கனமின்றிப் பறந்தே
கடிதினில் குலைப்பர் ஏகாதிபத்தியப்
பிடியினில் உள்ள கூட்டினை ஒருநாள்
அன்றே மானிடர் விடிவு பிறக்கும்
நன்றே அழிவர் நரமாமிசப் பிரியர்
இரத்தப் பேய்களும் பிசாசங்களும்
உரத்த குரலில் கூவி அலறி
மரத்த விழிகள் பிதுங்கியே சிதற
விறைத்த மனங்களும் கிலிகொண்டு நடுங்க
உள்ளம் குமுற உறைபனி மூட
தள்ளி அடக்கித் தனியிடம் சேர

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எள்ளி நகைத்து இறுமாப் பூத
ஏகாதி பத்தியம் சிதைந்தே போகும்
சாதி சமயச் சதிகாரப் பேய்கள்
வீதி ஓரம் ஒதுங்கிடும் நாளில்
நாதி யற்றோர் நயம்பட வாழ
நீதி யற்றோர் நிலத்தில் வீழ
ஆதி வாழ்வின் அருமை தேர்ந்து
பாதி யாகும் மனிதம் நிமிர்த்தி
ஓதி உணர்ந்து இருப்பர் உண்மை
வீதி ஓரம் விரட்டியே பெற்றவை
மோதிப் பெற்றுப் பொதுவின் நாட்டம்
கோதிக் கொண்ட உடைமைகள் தேட்டம்
நலமாய்ப் பகுத்து ஏதம் பேதம்
கலத்திலும் இல்லா இயல்பு மேலாய்
வலமாய் வந்தே சேரும் ஒருநாள்
தலத்தில் இணைந்தே இன்பமாய் இருக்க
புலத்தில் வாழ்ந்திட வாழ்வு ஓங்கிட
வந்தே தீரும் உண்மை
ஏகாதிபத்தியம் அழியும் அழியும்
ஏகாந்தம் திரும்பும் நாளை நாளை
ஏற்போம்; இனிக்க வாழ்வோம் வாழ்வோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனிதம் நிலைக்குமா?

ஆதிமனிதன் விலங்கென இயற்கையோடு இயைந்தனன்
நாதியாக நின்றவன் நலன்கள்பல கண்டு வந்தனன்
சேதிகேட்கத் தெரிந்துமே தொடர்புகொண்டு நின்றனன்
வாதியாக எதனிலும் அறிவு மேவக் கண்டனன்

சாதிபேதம் இன்றியே இணைந்து நன்றே ஒழுகினன்
பீதியேதும் இயைந்திடா இணைவில் குழுவாய் வாழ்ந்தனன்
நீதிநிலை நிலைக்கவே பொதுவுடைமை கொண்டனன்
மீதியேதும் இன்றியே பகுத்துண்டு வாழ்ந்தே வந்தனன்

ஆசைமனத்தில் வளரவே சொத்துச் சுகம் கண்டனன்
மீசைமுறுக்கு ஏறவே போட்டி போட்டுக் கொண்டனன்
காசைக் கண்ட கணத்திலே கதிகலங்கி நின்றனன்
பூசைபோட்டுக் கொண்டுமே முதன்மை என்றும் தேடினன்

பொதுமை வாழ்வை நாசமாக்கியே புகழுக்காய்ப் போர்புரிந்தனன்
பதுமையான மனிதனோ பாசநேசம் தவிடுபொடி யாக்கினன்
புதுமைகொண்டு மனத்திலே தன்னினத்தின் எதிரியாய் மாறினன்
பகைமை பூண்டு நாய்களாய்க் கடித்தே குதறி எறிகிறான்

எஜமான் வீட்டு சோற்றுக்காய் வாலாட்டி நிற்கின்றான்
நிஜத்தை மறைத்து என்றுமே போதையில் மயங்குகிறான்
புஜத்தை உயர்த்தி புன்னகை புரிந்தே உயிர்ப்பலிகளாக்குகிறான்
விஷத்தை நாவால் கக்கியே பகைமைப் போரைத் தூண்டுகிறான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இடம்பிடிக்க என்றுமே இனப்பகையை மூட்டுகிறார்
தடம்புரண்ட மனிதரோ தம்முள் அடிபட்டே மாள்கிறார்
மடம்கட்டும் கற்பனையில் மாய்ந்தே ஏய்ந்து போகிறார்
சடமெனச் சொல்வதைக் கேட்டு மாய்ந்தே போகிறார்

வலியான் வலிதின் கொடுமையில் வகையாக மாட்டியே
மெலியான் மெலிந்தே போகவே வளங்களைக் கவர்கிறான்
கிலியால் அவர் வாடியே வகையறியாமலே உழல்கின்றார்
நலிவில் மன்பதை மாண்புகள் நிலைக்குமோ உலகிலே?

வல்லரசு என்றுமே வலிந்து போர்கள் புரிந்துமே
செல்லரசு ஓட்டியே பொலிந்த பொருள் குவிக்கிறார்
நல்லரசு குலைக்கவே நயவஞ்சகம் செய்கின்றார்
பல்லரசு சிதைத்துமே ஏகாதிபத்தியம் கொள்கிறார்.

எண்ணெய் வளம் கவரவே ஏலேலோ பாடுகிறார்
கண்ணைக் கரித்து கயமைத் தனம் செய்கிறார்
மண்ணை மனையாக்கவே திருகுதாளம் போடுகிறார்
திண்ணை வீட்டைத் தீயினால் பாலகரோ டெரிக்கிறார்

சிலியின் உதிரம் குடித்துமே வெள்ளிப் பாளம் கவர்ந்தவன்
கலியின் அவதார புருஷராய் அரக்கத்தனம் புரிகிறார்
பலியில் மாந்தர் உதிரம் ருசித்து இன்பம் கொள்கிறார்
நலியும் மன்பதை மேவ மனிதம் நிலைக்குமா உலகிலே?

உண்மை நிலை உணர்வரோ ஊமை நிலை மாறுமோ?
மண்ணை மனிதம் மறுக்குமோ மாந்தர் தலை நிமிர்வரோ?
விண்ணைத் தொடும் வினைகளே மனிதநேயம் வளர்க்குமோ?
கண்ணைக் கருத்தில் இருத்தியே காத்திடுவீர் மனிதமே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்வி

கற்பதற்குக் கரையுளதோ?
கல்லார்க்கு நிலையுளதோ?
சொல்லேர் தானுளதோ?
வில்லேர் வினையுளதோ?
நல்லோர்க்குத் தீதுளதோ?
புல்லோர்க்குப் புகழுளதோ?
மேன்மையுறக் கற்பதெல்லாம்
தன்மையுறும் பணிவாலே
புத்தகப் பூச்சியாய்ப் புவியினிலே
நித்தமும் வாழ்ந்து இங்கு
வித்தகம் மிகச் செய்வதாலே
சுத்தமான அறிவுஒளி வாராதே
நித்த அவதானிப்பே சிறந்ததுவே
மெத்த அறிந்திடலாம் என்றும்
சித்தம் சிறந்துவிட்ட மகான்கள்
சத்தம் ஏதுமின்றிக் கற்றனரே
சுத்தமாகப் பள்ளிக்குச்செல்லாது
படிப்பதுவோ பலவிதமாம்
உழவுத் தொழிலெல்லாம்
உழுதுண்டே கற்கின்றான்
உழுதொழில் நுட்பம் தன்னை
உயர்வாகத் தந்தை வழியில்
அயர்வின்றிக் கற்கின்றார்
பெயர்பெற்ற அறிஞர்களோ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துயர்கொண்டார் பள்ளியிலே
நிகரில்லா விஞ்ஞானிகளோ
பெயர்கொண்டார் சிந்தையிலே
அவர் கொண்ட பெயர் எல்லாம்
சுவர் கொண்டு எழுதலாமோ?
அவர் சொல்லும் கல்வியன்றோ
நிகர் ஏது கல்விக்கு? கற்றுவிடு!
பகர்ந்துவிடக் கல்வி யன்றோ
நகரிலே வாய்ப்புண்டே கற்றுவிட
கற்றதனால் ஆய பயன் என்ன?
நற்றவனாய் ஆவதுதான், எனவே
நற்பண்பு கொண்டிடுவாய்
சொற்பண்பு சிறப்புறவே செயல்படுவாய்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புலம்பெயர்ந்த தமிழ்

சிந்துவெளி சிறப்புறவே சிறகடித்த செந்தமிழே
சிந்துகவி சீர்பெறவே பறந்துவந்த பைந்தமிழே
முந்துகவி கொண்டு முன்னின்ற மணிக்கொடியே
வந்துகவி வளர்க்க வாழ்க தமிழ்த்தாயே!

தருங்கவியின் மாமன்னர் வீற்றுமே தலைமை
அருங்கவியின் நீட்டத்தை அளந்துதரு மீசை
வருங்கவியோ தேவநேயப்பாவாணர் இசைவை
பெருங்கவிக்கோவை தலை தாழ்த்தி வணங்கினேன்!

மொழிப்பணியே தலையாகப் பாரதிநிகர்ப்போய்
'தமிழ்ப்பணி'யென பத்திரிகை சாரமாய்த் தருவோய்
அமிழ்தமெனக் கவிபொழிகின்ற அறிவுசால்மேதாய்
மிகுதலைமை போற்றினேன் பொன்னின்வழி வாழ்க!

உயிரெனத் தமிழன்னை உணர்விலே இருத்தி
பயிரெனப் பேணியே வளர்க்கின்ற சபையில்
உயர்விலே விழாக்காண வந்துள பெரியோர்
அயர்வின்றி உழைப்போர் ஏற்கவென் வணக்கம்!

புலம்பெயர் நாட்டினில் புதுமொழி ஒன்று
நலம்பெறக் கேட்குதே அம்மொழி என்ன?
நிலமகள் வியக்கவே தமிழன்னை இன்று
உலவியே வருகிறாள் உலகில் சிறப்புற!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழகம் தமிழீழம் தரையினில் கொள்ள
திகழக மாகவே மலேசியம் சிங்கப்பூராய்
சிறையக முடைத்துமே திக்கெட்டும் ஏகி
நிறைவுடன் வாழ்கிறாள் தமிழன்னை இன்று!

சிந்தனைச் சிறப்புறு வள்ளுவம் ஓங்க
வந்தனை மிகவுற சங்கம் வளர்த்த எம்
விந்தனை வியனுறு முத்தமிழ் எங்கும்
செந்தமிழ் தருகிறாள் தமிழன்னையாமே!

அருகியே நின்ற அருந்தமிழ் தன்னில்
உருகியே பயின்றிட உலகிலே இன்று
மருவியே விரைந்தவள் மானிலம் புரக்க
விரவியே தன்வயம் ஈர்க்கிறாள் உலகு!

கம்பனைக் கூத்தனைக் காளமேகத்தைத் தந்து
நம்பனைப் பாடிட நாவல்லோர் தமை ஈர்ந்து
செம்பொனாய்த் தமிழிலே ஒளிபெற நக்கீரனெரித்து
அம்பொனாய்த் திகழ்கிறாள் புலம்பெயர் நாட்டில்!

கனடா இலண்டன் பிரான்சு ஜெர்மெனி நெதர்லாந்துடன்
நானடா தமிழென டென்மார்க்கு பின்லாந்து சுவீடன், சுவிசுடன்
தானடா உலகிலே மலிந்துமே ஈரறுபதாய் நாடுகள் விரவி
ஏனடா இலமென ஒலிக்கிறாள் பாரிலே தமிழ்த்தாய்!

கடுகியே வளர்ந்து விளம்பரம் செந்தாமரையுடன் ஈழநாடென
நெடுகவே உதயன் நம்நாடு சுதந்திரன் முழக்கம் தினமுரசு
திடமென உலகத் தமிழரெனப் பற்பல பத்திரிகை வளர்விலே
அடமென இவ்வுயர்மண்ணில் வளர்கிறாள் அன்னை!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திடுமென வானொலி தோன்றியே தொடுவானிடை
குடுமென தமிழொலி ஊன்றியே ஒலிக்க உலகெலாம்
படுமென தொலைக்காட்சி வழியிலும் தமிழ் அன்னை
திட்முடன் தொடர்கிறார் தமிழ்ப்பணி இங்கு

கவியரங்கம் கலையரங்கம் நாடகவரங்கொடு இயற்றமிழ்
செவியரங்காகவே கருத்தரங்கமாய் வழக்காடு மன்றுகள்
புவியரங்காய் மிளிருதே உலகெங்கும் புலப்பெயர்விலே
திரையரங்கமும் செழிக்கவே நகைக்கிறாள் தமிழன்னையீங்கு

நலம்பெற இலக்கியம் எங்கெங்கும் இணையில்
புலம்பெயர் இலக்கியம் படைக்கின்றார் திணைபட
நலம்பெறத் தமிழன்னை உவகையில் மிதந்து
தலமெலாம் தமிழொலி எழுப்புகிறாள் அன்னை

தமிழனுக்கு வீழ்ச்சி சகத்தினில் இல்லையென
தமிழன்னை எழுச்சி பாடினான் பாரதிதாசனே!
இழித்தவர் ஏங்கவே எழுகிறாள் தமிழ்த் தாயவள்
களிப்பிலே தேரேறி உலாவருகிறாள் அன்னை!

பதமலர் பூக்கவே வழிகள் காண்கிறார் இங்கு
விதவிதம் ஆகவே கவிகள் தருகிறார் பங்கு
புதுமலர் போற்றியே ஊதுறார் தமிழ்ச் சங்கு
நிதமவர் தமிழ்த்தாயை வாழ்த்துறார் அங்கு

எத்திசை ஏகினும் தமிழொலி ஒலிப்ப
சித்திசை ஆகவே தேன்மொழி அசையால்
மத்திசை போலவே ரீங்காரம் இசைத்து
சொத்திசை தானாய் வளர்கிறாள் அன்னை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூம்பனி வெண்பனி வெள்ளிப்பனி யொடு
ஆம்பனி சினோவென படிவு வீழ்ச்சியாய்
தம்பணி தமிழெனக் கொண்ட பேரறிஞர்
செம்பணி யாற்றியே வளர்க்கிறார் தமிழே!

(வேறு)

தன்னுயிர்த் தமிழை இங்கு
தண்மையாய் வளர்த்தே ஈண்டு
மன்னுயிர் எல்லாம் பெறவே
மனவெழில் நன்றே கொண்டு
என்னுயிர்த் தமிழ்த்தாய் வாழப் பற்பல
எண்ணங் கூட்டி புலம்பெயர் அறிஞர்
இன்னருந்தமிழை யாயிரம் மொழியில் காண
வழிகளே சமைப்பார் அன்றோ!

எத்துறை யாகினும் எண்ணித் துணிந்திட
ஏற்றமே தமிழனின் வாழ்விலே நலம்பட
அத்துறை மேவவே இரண்டு இலட்சமே என
அணைத்துறை கனேடிய மண்ணில் மேவிட
சித்துறை தமிழன்னை போற்றுவார் உயர்ந்திட
சிறந்துமே தம்தமர் வளத்துடன் ஓங்கிட
முத்துறை நகையென கண் ஒலிபட
முத்தமிழ் வித்தகி வளர்கவே நலம்பட!

ஆப்பிரிக்காவிலே அழிந்த தமிழ்
மடகாஸ்கரிலே மாண்ட தமிழ்
ஆர்ப்பரிக்குதே ஈழவன் புலம்பெயர் நாடெலாம்
ஆழ்ந்த கயானாத் தமிழ் உயிர்ப்புற
தார்மீகத் தமிழ்தனை ஓங்கி வளர்த்திட
புதுக்கரம் நீட்டியே இணைத்திட
சீர்பெறு தமிழன்னை எழில்பெற இன்று
சீருடன் செயல்தர எழுவோம் நாமே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாராண்ட முத்தமிழின் செல்வப்புதல்வர்
பத்துடன் பத்தாண்டு காலமாய்ப் பரந்துமே
ஊராண்ட புலம்நீங்கி அனைத்துலகும்
அகதிகளாய்ப் பான்மை கெடப்
பேர்கொண்ட நிலை நீக்கி எங்கும்
நேர்கொண்ட தமிழர்களாய்த் தரணியில்
யார்கொண்டார் தமிழெனவே போற்ற
வாழ்கின்றாள் தமிழன்னை இன்று!

தண்டமொடு தமிழனவன் தவித்து
தரணிமிசை ஏங்கியே அலைய
கண்டமொடு கண்டமாய்த் தாவிக்கலங்க
கண்ணரிய தமிழன்னை தொடர்ந்தாள்
விண்டவரோ வினைதொடுக்க வீணே
விதியெனவே அலைந்துமே மலைத்தாள்
பண்டமெனப் பதுங்கியே தொடர்ந்து தமிழ்ப்
பாவையெனப் பாரினிலே நிலைத்தாள்!

நெஞ்சத்து உறைகின்றாள் எம்மன்னை
எஞ்சியே வளர்கின்றாள் புலம்பெயர்ந்து
இச்சகத்து மக்களொடு மாக்களும் வியக்க
துஞ்சவே மாட்டாள் தமிழ் நங்கை
விஞ்சியே வளர்கின்றாள் அனைத்துலகு மயங்க
கஞ்சியோ பாலோ ஊற்றியே வளர்க்க
தஞ்சமே இல்லையே எம்மன்னைக் கிங்கு
விஞ்சியே தமிழன்னை என்றுமே வாழ்க!

நயம்படப் பேசவல்ல நறுந்தமிழ்
நமக்கேனோ வாழவிங்கு நயமோ?
வயமாகப் பிறமொழி போதுமென்றே
வசையெனவே தமிழ் பேசல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தயக்கமே இல்லாது இழித்துரைக்கும்
தீநாவின் விடமனைய இழிசனமே
வியக்கவே வீறுகொண்டு எழுகிறாள்
வீரத்தாயவள் புலம்பெயர் தேசமெலாம்!

அம்புவியில் அமுதமென நிலைத்தாள்
அழகொளிரும் தமிழ்நங்கை நல்லாள்
செம்புவியில் பல்கலை மேவிவரு தொல்கலையாள்
செவ்வியமாய்ப் பாரிஸில் பல்கலை வியக்க
தம்புவியில் மேன்மை, புகழ் கொண்டாள்
செம்புவியாம் சோவியத்தில் மிதந்தாள்
நம்புலம் பெயர்வில் நடமாடுகின்றாள்
நயத்துடனே புதுக்கோலம் கொண்டாள்!

மென்தமிழ் உதிரத்துதித்த நற்றமிழன் வழியிலே
தன்னுள மொழியழகில் மயங்கியே
பொன்குலேந்திரன் பொன்மனதாய் வாசகர்வட்டம்
பொற்புடன் பெருக்கி வளர்க்கவே
தன்னெழில் கொண்டுமே குவியமாய்
தரணியில் வளர்க்கிறார் வியக்கவே
மின்னெழில் கொண்டனள் தமிழன்னை
மின்னொளி பரப்பியே ஒளிர்பவளேதான்!

நலிவிலாள் தமிழன்னை நயங்களே கொள்வாள்
நலத்திலே தமிழ் நடமே புரிவாள்
மெலிவிலாள் எம்மன்னை மேதினியில் ஒளிர்வாள்
மலிவுடன் தமிழ்த் தேன்சுவையே தருவாள்
வலியிலாள் கன்னி அமுதமே சொரிவாள்
வலம்வரும் உலகிலே வித்தகம் நிறைப்பாள்
கலியிலாள் என்றுமே இன்பமே தருவாள்
கல்வியில் கருமமேயாகி நிற்பாள்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என்று தீரும் எம் அவலம்?

ஆனைகட்டி ஆண்டுவந்த நீள்புலமும்
ஆசைகாட்டி வளர்த்துவந்த ஆநிரையும்
ஆற்றங்கரை தன்னில் வீற்றிருந்த வாழ்வும்
அணைகட்டி ஏற்றி வந்த நீர்வளமும்
மனை கட்டி மகிழ்ந்திருந்த மருப்பும்
தினை விதைத்தே தித்தித்த நிறைவும்
சுனை யதனைச் சூழ்ந்திட்ட பயிரும்
கனைத்து வரும் மோட்டெருமைப் பாலும்
மீண்டும் பிறந்து வரும் மிடுக்கும்
மீகாமன் கொண்டுவரும் உணவும்
மீண்டொருகால் பெற்றுவரு தேனும்
மீதமின்றிப் பருகி வந்த வாழ்வும்
அரக்கர் கூட்டமங்கே அழித்திடவே
அகன்று எம் மண்விட்டே ஏகி
அகதி நிலை தேடி அலைந்தே
அங்கொன்றும் இங்கொன்றுமாக
அன்பாக இணைந்திருந்த நாங்கள்
அநாதைகளாய் அபலைகளாய்
அடி உதைகள் வாங்கி என்றும்
அலறி வரும் வானூர்திக் குண்டில்
அகப்படாது பதுங்குகுழி தோண்டி
அடிவயிற்றைக் கலக்கிவரும் ஒலியில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடிபடவே கால்கள் புதைகுழியின்
அடியினிலே போகின்ற எண்ணம்
பாசக் கயிற்றோடு யமனாக பொம்பர்
பார்த்து உயிர்காக்க மழை வெயில்
பாராது ஓடிச் சகதியில் வீழ்ந்து
பாம்புப் படுக்கையில் கால் வைத்து
பாழாகப் போகின்ற வாழ்வு
பச்சிளம் பாலகர் நொந்து
பால் இன்றி நலிந்து என்புடன்
பச்சையாய்த் தோன்றியே சாகும்
பரிதாபமான மகளிரின் அவலமும்
பாரினில் உதவிடல் இன்றியே
பாவியராகச் செத்திடும் அவலம்
என்று தான் தீருமோ தமிழனுக்கு?
என்றுமவன் படும் இந்த அவலம்
பாவையர் என்போரை என்றும்
பாவியராகவே ஆக்கி கற்பு
பார்த்துமே பறித்து புதைகுழியில்
பார்த்திடாமலே புதைத்திடும்
ஆமிக் காம்புகள் எல்லாம்
ஆகின்ற தெங்கள் புதைகுழிகள்
சாட்சிகள் சொன்னாலும் புதைகுழிதான்
கூடவே சென்றாலும் புதைகுழிதான்
காணோம் என்றாலும் புதைகுழிதான்
சித்திர வதைகளோ என்றும்
சிறு பூனை கையில் பட்ட

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுண்டெலிகளாகச் சுரண்டியே
சுட்டெரித்து அழிக்கின்ற அவலம்
என்றுதான் தீருமோ ஐயா?
சிங்களப் பேரின வாதம்
என்றுதான் தீருமோ ஐயா?
தேசிய அடையாள அட்டை
தேசத்தின் அட்டையாய் அன்றி
தேடித்திரிந்துமே பிடிக்க தமிழன்
தேசியச் சின்னமே அடையாள அட்டை
வீட்டினில் இருந்தது வெனினும்
போலீஸ் பதிவேடு வேண்டும்
வீதியில் சென்றிடத் தமிழன்
வேறு பத்திரம் வேண்டும்
பெற்றிடக் காசுகள் அங்கே
வாரி இறைத்திடல் வேண்டும்
சிறையினில் சித்திர வதைகள்
சிரசினில் கொண்டிட்டான் தமிழன்
அடி இடி உதை தினமுமே
பெறுகின்ற பேறு என்றுதான்
அகலுமோ தமிழனின் வாழ்வில்?
உணவுதான் ஏற்றி வந்த கப்பலை
உணர்ந்துமே குண்டுகள் வீசி
அழித்து அமிழ்த்தி தமிழர்க்கு
அழிவைத் தருகின்ற பசி பட்டினிச்
சாவை எதியோப்பியாவாக்கித் தருகின்ற
அவலம் என்றுதான் தீருமோ ஐயா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மருந்து வில்லைகள் என்றால்
மானமே போய்விடும் சோதனைகள்
மாயமாய் நோக்கி புலிக்கா என்றே
மாற்றியே கூறி ஏளனம் செய்து
மண்டையைப் பிளந்துமே
மரணமடைய வைத்திடும்
மாண்பு மிகு நாடு
யூகோசுலேவிய நாட்டிற்காய்
யூஎஸ்ஏ யுடன் கனடாவும்
ஐரோப்பிய யூனியனும் இணைந்தனவே
ஐயகோ பாரீர் அவலத்தை!
மன்பதை அழிவைப் பாரீரோ?
இந்நிலை நாமும் பொறுக்கோமே
அந்நிலை தன்னைக் கண்டித்தே
முதலைக் கண்ணீர் வடித்தனரே
ஆர்ப்பரித்தேகி அழித்தார் சிசுக்கள்
ஆய்ந்து பாராமல் ஆசுபத்திரி தன்னிலே
ஆகாயம் அதிர குண்டுகளை இணைந்தே
போட்டே தீர்த்தனரே பொதுமை கொண்ட
நாட்டிடையே பொருளியல் அழிப்பே
நோட்டிடையாய்க் கொண்டார் முறைமை
வேண்டீரோ அழித்தார் அவலம் தன்னையே
வேண்டாதழித்த மன்பதையை றுவண்டா
கொண்டே குவித்ததுவே மலையாய்
மனிதப் பிணக்குவியல் உலகம் முழுதும்
தொனியினிலே தெரிந்தும் இந்தப் பிசாசுகளுக்கு
மன்பதை அழிப்பாய்த் தோன்றவில்லை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நைரோபி சிறிலங்கா மூன்றாம் உலகம்
நையப்புடைத்திடும் பிணக்குவியல்
நாற்றமே எடுக்கப் பல்லாயிரமாய்
நாறிப்போகும் நிலையினிலும்
நாவினாற் கூடப் பேசாமல் மறைத்திடும்
நாதியற்றோர் இறந்துவிட்டால் நீதி
உண்டோ என்றுரையா ஏகாதிபத்தியம்
கண்டுகொண்டும் மனிதர்களே வாயில்
என்றுதான் அழியும் இந்தக் கொடிய நிலை?
மன்றுதான் கேட்கமுடியாத மன்பதை அழிப்பும்
மன்னுயிர் கொல்லும் ஆயுதமும்
தான்தான் உற்பத்தி செய்திடலாம்
தான்தான் உலகின் சண்டியன் என எதிலும்
நான்தான் என்றே உலகை உலுப்பும்
ஆதிபத்தியத்தை அழிக்காதோ இப்புவி?
ஆதியாய் அன்பாய் அமையாதோ?
மன்பதை மீள உணவேதான் உற்பத்தி
என்பதை நினைவில் கொள்ளாரோ?
தன்பகை தன்னை நிறுத்தாரோ
உதிரிம் சொரியக் கொலைகளை நிறுத்த
உத்தரவிட்டால் அழிவு நீங்காதோ?
மன்பதை வாழ்வும் இனிதே ஓங்காதோ?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நத்தார் பண்டிகை

வீதியோ வண்ண ஒளி மயம்
சோதியாய்க் கண்ணைப் பறிக்க
பனி படர் செடிகள் கொடிகள்
பகலவன் தோற்றம் கண்டே
சிறிசுகள் உள்ளம் மலரப்
பரிசுகள் மகிழ்ந்தே பெறவே
நத்தார்த் தாத்தா வரவுமோ
நளினமாய் வடக்கே நின்று

நறும் புகைபோக்கி ஊடே
நறுக்குடன் வந்தே வாழ்த்தும்
நத்தார் பண்டிகைத் தினமே
இல்லிடம் ஜொலிக்கும் ஆற்றால்
இந்திர தேசமாக்கி கண்கவர்
இப்புவி வித்தையாக்கி ஒளிர
இயல்பிலே வான வில்லேயாக
இனித்திடும் நத்தார் தினமே

வாயினில் கோலம் காட்டி
வாரியே அணைக்க விளையும்
பாலகர் மனங்கள் எல்லாம்
புதுவிழாக் கோலம் தானே?
பாவங்கள் அறுத்தே நல்ல

EP 2006
ARY

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொதுமையாய் வாழ்வு காட்ட
இரட்சகர் இயேசு பாலன் உதித்த
நத்தார் பண்டிகைத் தினமே!

துன்பச் சுமைகளைத் தானே
துச்சமாய்க் கொண்டே நன்றாய்
வாழ்ந்திட மன்பதை உலகில்
செங்குருதி ஆறாய்த் தன்னை
தந்தே காத்த அன்புளம்
தந்தோன் இயேசு பாலன்
தரணி மிசை உதித்திட்ட
நத்தார் பண்டிகைத் தினமே!

சீலமாய் என்றும் இங்கே
சீலர்கள் எல்லாம் சேர்ந்தே
ஏற்றியே போற்றும் தினமே
இளையவர் எல்லாம் இங்கே
இணைந்துமே மகிழும் நாளே
நத்தார் பண்டிகைத் தினமே!

அன்புடன் மானுடம் போற்ற
உதித்திட்ட அண்ணல் காந்தி
அன்பினில் உறைந்தே விட்ட
தன்னிகரில்லா புத்தன் வழியது
தானே இயேசு கொண்ட கொள்கை
அன்பினால் உலகை ஆண்டான்

எருசலேம் மாநகரின் புறத்தே
மாட்டுத் தொழுவத்தில் அன்றோ
மானிடர் போற்றும் தெய்வமகனாம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இயேசு பாலன் வந்தனன் உலகுஉய்ய?
மார்கழி இருபத்தைந்தில் கொண்டனர்
நத்தார் பண்டிகை தினமே!

நாடுகள் எல்லாம் இன்று
நாட்டமாய்க் கொள்ளும் விழாவே
நயமுடன் கொண்டே ஏத்தி
நலமெலாம் பெற்றே வாழ
நலம் பகர் இயேசு பாதம் போற்றி
நலமுறு மாந்தர் கொள்கை
விருப்புடன் கொண்டே போற்றும்
நத்தார் பண்டிகை தினமே!

கருத்துடன் உலகில் உதித்தோன்
கருவினில் கொண்ட கொள்கை
பெருகவே ஒளியாய் வழியாய்
மருவியே மாந்தர் நெறியாகி
குருதியே உவந்தே உதிர்த்து
உருகியே சிலுவையில் உயிரிழந்தானே
பெருகிய குருதிச்சேற்றில் மாய்ந்தனர்
அருகிய குணத்தினோர் பாடமாய்க்
கருதியே கொள்ள விழைந்தோன்
பரிதியாய் ஒலிக்கும் மேலோன்
பாரினில் உதித்த நாளாம் கருதிய
பாவம் தீரும் நத்தார் பண்டிகைத்தினமே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உணர்வுகள் ஒன்பது

(நகை, அழுகை, இழிவரல், உவகை, மருட்கை, அச்சம், பெருமிதம், வெகுளி, சமநிலை)

ஒன்பான் சுவைகள் ஒருவருக்கு
வாய்த்தே இருத்தல் இயல்பாமோ?
நன்பாச் சுவைகள் எவையெனவே
ஓர்ந்தே தேறல் நன்றன்றோ?

நகையே அழகு தருவதனால்
முகத்தில் புன்னகை அணியாகும்
உளத்தின் அழகே முகத்தினிலே
இன்பத்தின் அணிகலன் என்றென்றுமே

அழுகை துயரின் இருப்பிடமே
துயரச் சுமைகள் நீக்கிடலாம்
உணர்வின் தன்மை வெளிப்பாடே
அழுகுணியாதல் இழிவன்றே?
மனிதன் பிறப்பின் வெளிப்பாடே
அழுகுரல் தானே கூப்பாடு?

இழிவரல் தோன்றின் மனத்தினிலே
அச்சம்தானே விஞ்சி நிற்கும்
உச்சம் கொண்டு முன்வரவே
எஞ்சி நிற்கும் பயவுணர்வே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விஞ்சி நிறைவைக் கண்டிடவே
தஞ்சம் தடையாய் நின்றிடுமே
கொஞ்சம் உணர்வை அழுத்த என்றும்
துஞ்சியே போகும் உவகையன்றோ?

உவகை பொங்கும் உள்ளத்திலே
இன்பம் என்றும் இயைந்திருக்கும்
மான்போல் மருட்கை தோன்றிடுமோ?
மனத்தில் மகிழ்வே உவகையாகும்.
அறிவின் முதிர்வே வெளிப்பாடு
மாற்றம் இல்லாத் திறப்பாடு.

மருட்கைப் பார்வை என்றென்றும்
உணர்த்தி நிற்கும் அச்சமன்றோ
அழகே அதிலும் பொதிந்துவிடும்
வியப்பும் அங்கே புதைந்திருக்கும்
மானின் பார்வை எமக்குணர்த்தும்
மருட்கை அச்சத்தின் உடன்பாடே

அச்சம் தவிர்த்தால் உள்ளத்தில்
வெற்றிப் பெருமிதம் தோன்றாதோ
அச்சம் தவிர்த்தால் முன்னேற்றம்
இன்றேல் எதிலும் பின்னடைவே
முயன்றால் எதுவும் கைகூடும்
துணிவே துணையாய் ஆகிவிட்டால்

பெருமிதம் கொண்டால் மாந்தர்க்கு
பெருமை சேர்ந்தால் நலம் பெறலாம்
தருமிதமான செயல்களினால் கொள்ளல்
அருமிதமே தற்பெருமை துயராமே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வருமிதமாமே நல்லோர் உயர்வில்
வெகுளி மனத்தில் இல்லையெனில்.

வெகுளி கொண்டால் உள்ளத்தில்
அழிந்தேபோகும் தன்நிலையே
பகைமைதானே மீதமாகும்
தகைமை இல்லான் என்றுரைக்க
வெகுளி மனத்தில் தவிர்த்துவிட்டு
சமநிலை காத்தல் நன்றன்றே!

சமநிலை பேணல் என்றென்றும்
ஏற்றம் தருமே வாழ்விற்கு!
நோய்கள் என்றும் அணுகாவாம்.

இவ்வகைப் பேறுகள் நாம் பெறவே
நன்மதி கொண்டு வாழ்வாமோ
நிம்மதி மனத்தில் தோன்றிடுமே
தன்மதி பெருகிச் சுடர்விடுமே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேனீ

சுற்றமே சூழ வாழும்
சுற்றியே திரிந்து சேரும்
பற்பல காத தூரம் ஏகியே
பற்றுடன் தேனைச் சேர்க்கும்
நற்றுள வலிமையோடு
நற்றலைமை ஏற்றே வாழும்
சிற்றுயிர் அதனைப் பார்த்து
சிறப்பாய் நாமும் கடைப்பிடிப்போம்

சுறுசுறுப்பாக இயங்கும்
விறுவிறுப்பாக என்றும்
சிறுசிறு மலர்கள் நாடும்
சிறுகவே தேனைத் தினமும்
குறுகுறுப்புடனே விரைந்து
குறுங்கூட்டில் தேக்கிவைக்கும்
நறுநறுப்பாக என்றும்
நறுமணம் கமழவைக்கும்

உருவத்தில் சிறிதே தேனீ
பருவத்தில் உணவு தேடும்
கருமத்தில் பெரிதே என்றும்
கருத்தினில் ஒன்றாய் வாழும்
வருமிடர் கண்டபோது
வருந்தியே இணைந்து தாக்கும்
தருபவர் துன்பம் எல்லாம்
தரணியில் ஒன்றாய்க் காக்கும்

உறைவிடம் தேடித் தேர்ந்து
உறைந்திடும் மகரந்தப் பொடியால்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மறைவிடம் பார்த்தே வியந்திட
மறைத்திடும் தனித்தனி அறைகள்
நிறைவிலே தொழிற்றிறன் கொண்டு
நிறைந்திடும் இல்லம் அமைத்தே
கறையிலா வாழ்வு கொள்ளும்
கறையான்கள் போன்று வாழும்

தேனீக்கள் வாழ்வின் பெருமை
தேனிலும் இனிமை யாகும்
தேனீயின் சுறுசுறுப்பை நாமும் வாழ்வில்
தினமும் ஏற்றால் காணலாம் முன்னேற்றம்
தனித்தும் கருதா உறவில்
தன்னினச் சமத்துவம் சிறப்பே
தேனீபோல் சுறுசுறுப்பாய் வாழக் கற்றால்
தேடிவருமே நலவாழ்வு சிறப்புடனே!

எண்ணிய கருமம் ஆற்ற
என்றுமே இணைந்தே வாழும்
கண்ணியம் கற்றல் வேண்டும்
கருத்திலே இணைந்தே செயல்கள்
திண்ணியமாகச் செய்தால் நாமும்
திடமுடன் கொள்ளல் உய்வே
நண்ணிய ஒருமைப் பாட்டை
நாளும்நாம் உணரல் நன்றே!

தேடிய பொருள்கள் எல்லாம்
கூடியே உண்ணல் காண்பீர்
வாடிய வாழ்வு என்றும் அவர்க்கு
வடிவத்தில் வந்தாற் கூட
நாடியே ஒன்றாய் ஓடியே
நட்புடன் வாழும் மேன்மை
கூடியே பெற்றல் எமக்கும்
கூறிய தேனீயின் வழியே யாகும்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குவலயம் ஒளிரவேண்டும்

உலகில் அமைதி நிலைத் திருக்க
அலகில் உணவும் நிறை ததும்ப
புலத்தில் அமைதி நிலைத் தங்கு
நிலத்தில் நன்னிலை வரவேண்டும்

போரில்லா உலகில் அறம் ஓங்கி
சோர்விலா மனத்தினை உய்த்தூன்றி
நேரில்லா மன்பதை நிலை நீங்கி
சார்பில்லாச் சமத்துவம் வரவேண்டும்

கரடும் முரடும் உயர்வும் தாழ்வும்
தொடரும் சுரண்டலும் உலககற்றி
இடரும் இருப்பும் தரும் உடைமை
வேகும் மணலில் புதைய வேண்டும்

ஆண்டான் அடிமை வர்க்க பேதம்
சீண்டான் சிறுமை நிலை அகன்று
மீண்ட பிறவிச் சமுதாயப் புத்துலகு
நீண்ட வகையில் உயர வேண்டும்

அன்பும் பண்பும் ஆதரவும் என்றும்
இன்பும் இயல்பும் இயைந் தெங்கும்
முன்பும் பின்பும் போரில்லா வுலகு
தென்பும் கொண்டு இலங்க வேண்டும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உறுபசியால் உழல்கின்றோர் உயர்வு
மறுநிசியில் மாயவகை செய்தல் இங்கு
அறுசுவையில் அல்லல் உறுவோர் சிறு
தறுகண்ணர் மாய்ந்திட வழிகள் வேண்டும்

நாட்டின் வளங்கள் நலிந்தவர் கொள்ள
ஏட்டின் இயைவு வரைந்திடவே நல்ல
கூட்டின் உரிமை சாற்றியே மெல்ல
பூட்டின் உடைமை பொதுவிலே வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வேலிச்சண்டை

ஈ இருக்கும் இடமேனும் நான் தாரேன் என்றவன்
ஈனமாய் இறந்தனன் சாம்பலாய்ப் போயினன்
ஈங்கிது புரிந்திடல் பகைமையே விரண்டிடும்
ஈனர்கள் புரிவரோ அறத்துடன் வாழ்வரோ?

ஈங்கிவர் போராடியே மடிகிறார் நலமின்றி
ஈவதோ இயல்பிலே நலிந்தவன் வாழ்ந்திட
ஈவரோ இல்லாதான் வாழ்ந்திடப் பாரிலே
ஈகையே இன்பம் தந்திடும் வாழ்விலே!

போக்கிலே கொண்டு செல்வரோ தேட்டமும்
காவிலே கனதியாய்த் தேடியே சேர்க்கிறார்
நாவிலே நயவஞ்சகம் பேசியே மாய்கிறார்
சாவிலே கொள்வரோ ஒருபிடி நிலமதை?

வேலிச் சண்டையில் விரோதமே கொள்கிறார்
தாலிச் சண்டையில் குடும்பத்தைப் பிரிக்கிறார்
கேலிப் பேச்சிலே கயமையைக் ககுறார்
போலி யாகவே வாழ்கிறார் உலகிலே!

கதியால் நிறைத்துமே எல்லைகள் வகுத்துமே
மதியில் மனத்திலே பாகப்பிரிவினை செய்கிறார்
சதியென எண்ணியே விரோதமே கொள்கிறார்
பதிவிரதை சொல்லிலே சோதரர் பகைக்கிறார்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்வீட்டில் நிழல் உன்வீட்டு மரத்தால்
தன்வீட்டு மாடு மேயுதே வேலியால்
பின்வீட்டு வளவில் கோழியும் வருகுது
முன்வீட்டு நாயோ போகுது என்பர்

சன்னதம் கொண்டுமே சதுராட்டம் ஆடியே
உன்னதம் மாண்டிட செருபகை கொண்டு
தன்னகம் இயல்புற ஆயுதம் தூக்கியே
தன்னவன் உறவு அறுக்கிறார் பகையிலே!

வந்தவர் வரவிலே வந்ததோ இல்லையே
நொந்தவர் கண்டதோ பகைமையே சொத்தில்
பந்தவர் வினையிலே பாழாகி அழிகிறான்றார்
வெந்து அவர் சாம்பலாய் ஏகிறார் அன்றோ!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விடிந்திடும் வாழ்வு

மனிதன் ஏனோ
மனிதம் அழித்து
புனிதம் இழந்து
தனிமை உயர்வில்
இனிமை கண்டு
கனிவே விழைந்து
ஆசையில் பொருள்கள்
ஓசையில் குவிக்க
காசைக் கருத்தாய்
ஓசை இன்றிப் பதுக்க
வாஞ்சை கொண்டு
நனி முனிவாலே
தனிப் பகையேற்று
மனிதம் மறந்து
புனிதம் சிதைத்து
நனிவினில் நயங்கள்
கனிந்திடச் செய்ய
சனியெனக் கேடு
துணிவினில் ஏற்று
பணிவிலாப் பாதகம்
அணிகலன் ஆக்கி
தணிவிலா மோகம்
தோணியாய்க் கொண்டு
ஏணியில் ஏறிப்
பணிகள் ஆற்றி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆணி அடித்து
பாணி ரத்தம்
நீழ்புலம் தன்னில்
கீழ்புலம் எல்லாம்
செம்மையே படிய
உற்றவர் நற்றவர்
உறவினில் பள்ளமும்
வேற்றவர் வினையில்
கற்றவர் தகைவில்
கருத்துமே இன்றி
மன்றினில் முந்தி
மன்னனே ஆக
சின்னவர் அங்கு
முன்வரிசை ஆசனம்
பல்வரிசை காட்டி
செல்லா மொழியில்
பொல்லா உரைகள்
தொல்லையில் தந்து
சொல்லை இழந்து
வில்லை வளைத்து
நில்லாப் பாணம்
கொல்லவே விடுத்து
தறுகணராக வாழ்கிறார்
மறுகணம் என்ன
உறுகணம் எங்கும்
உணராராக வாழ்கின்றார்
பஞ்சமும் பட்டினி
விஞ்சியே உலகை
அஞ்சியே விரட்ட
கொஞ்சமும் கருணை
தஞ்சமே இல்லா

UNIVERSITY OF PERA[DENIYA]
14 SEP 2006
LIBRARY

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வஞ்சனைப் பேய்களாய்
நஞ்சனை கொண்டு
மஞ்சத்தின் மீது
பஞ்சணை சாமரம்
துஞ்சிட நிற்கும்
பாதகர் வாழ்வின்
சாதகம் எங்கோ
உணவுக்காய் உழைத்து
ஊதியம் இன்றி
சாதியம் பேசி
சமாதியாய்ப் போகும்
விதியோ தொடரும்

என்றோ ஒருநாள்
ஒன்றாய் இணைந்து
ஓதியே அழித்திட
மன்பதை வளமாய்
துன்பமே இன்றி
வாழ்ந்திடும் நாளும்
தன்பகை நீக்கி
இன்பதையாக
துணையாய்
இணைவிலே
அணைந்திட
விடியும் வாழ்வும்
மடியும் மாய்வினை

நொடியும் நோயும்
குடியும் கும்மாளமும்
விடியும் வரையும்
கொண்டே வாழ்வை

UNIVERSITY OF PERADENIYA
14 SEP 2006
LIBRARY

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உறிஞ்சிடும் முதலை
தறிகெட்ட உலகு
மடியினில் கனவும்
குடியினில் மிதமும்
அடியினில் கனவும்
துடிப்பிலே நீங்கி
விடிந்திடும் வாழ்வு
புலர்ந்திடும் பொழுது
மலர்ந்திடும் சமதர்மச்
சமுதாயம் உலகில்
உணர்ந்திடும் நாளும்
விரைந்திடத் தானே!

அதர்மம் அழிந்து
நிதர்சன வாழ்வு
நிரந்தரம் ஆக
உரமென செய்வினை
தரமெனக் கொண்டு
கரமெலாம் பற்றி
சிரமெலாம் ஒன்றாய்
தரத்துடன் இணைந்து
புரத்தினில் துணிந்து
முரசென ஒலித்து
ஒற்றுமை ஓங்கிட
உறுபகை நீங்கி
உற்றவர் எல்லாம்
நற்றவர் ஆவர்
நயத்துடன் நாடும்
நனிபெறும் தானே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## என் தெய்வம்

மல்லிகை பூத்திருக்கு
தென்றல் தழுவிவருது
மெல்லிசை மேவிவருது
இன்பம் பொங்கிவருதே
அன்பான உன்நினைவிலே
நீ அருகில் இருந்துவிட்டால்
தீப் புண்ணும் ஆறிவிடும்
வெம்மைதான் தணிந்திடுமே

என் இதயம் அடிக்கிறதே
என் உதடுகள் துடிக்கிறதே
நீ என்உள் இருக்கையிலே
என்னைப் பிரியா திருந்திடாயோ?

என்னைப் படைத்தவளே!
உன்உதிரம் தந்தவளே!
எத்தனை துன்பங்கள்
எனக்காகச் சுமந்தனையே!
தாயே என் வாழ்வினிலே
உன்னைப்போல் ஒருவர்
உலகினிலே உண்டோ?

கருவறையில் நான் இருந்தே
இடி உதைகள் தந்திடவும்
இன்புடனே அன்பூட்டி திருவாக
பாலூட்டித் தாலாட்டி வளர்த்தவளே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமைதியாக நீ உறங்க
உன்பாத மலரிணையில்
நான்பாடத் துயில்வாயே
என் மனக் கோயிலிலே
உன் உருவம் எந்நாளும்
அந்தி பகல் பூசிக்க
என்னகத்தில் உறைபவளே!

என் உயிரின் நிலை மூச்சே
உன்போல் ஒருவர் உண்டோ?
என் தனிமை வாட்டுதம்மா
என் அருகில் நீ இருக்க
என் உலகே நீயானாய்
மென் உடலம் நீ விடுத்து
சென்றதுமேன் எனைப்பிரிந்து?
என்றும் இருக்காமல் சென்றனையே!

ஏன் எனக்குச் சுமை என்றே
எண்ணம் தான் கொண்டனையோ?
கவிதைநான் பாட இன்பம்தான்
கொள்வாயோ புன்னகை புரிந்தே?
வாழ்த்தாயோ உந்தன் மகன்நான்
வாழ்ந்திடவே வாழ்த்தி என்னோடு
எந்நாளும் என் வாழ்வில் துணையாக
இருந்திடுவாய் என் தெய்வம் நீயாக!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நேரம்

நேரமிது நேரமிது நாம்பார்க்கும் நேரமிது
நேராக ஓடுதே குறுக்கு வழிபாராது

கடையினிலே வாங்கிடவும்
தடுத்தோ நிறுத்திடவும்
தூக்கத்தில் ஆழ்த்திடவும்
யாருண்டோ பூமியிலே?

எத்திசையால் வருகிறது?
எத்திசையால் போகிறது?
இரவுபகல் ஆனாலும்
நித்திரையே ஆகாது

அகிலமே இயங்கிவரும் கதிரவனின்
விதிபார்த்தே நேரத்தைக் கணித்திடுவர்
கதிபோகும் நேரத்தை நிறுத்திடவே
நிலமதில் யார் உளரே?

கீழ்த்திசையில் வருகையிலே
எழுகிறான் கதிரவனே என்றே
விழும் திசையை மேற்கென்பர்
பாழும் பொழுது மாறாதே

சாமக்கோழி கூவிவிட்டால்
சாய்த்தே தலை தன்னை
விண்மீனைக் காட்டிடுவார்
கணித்திடுவர் நேரத்தை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வயிற்றில் பசிதோன்றிடவே
வாயில் உணவிட்டுவிட்டால்
வயிற்றுப் பசி நின்றிடுமே
வகையேது நிறுத்திவிட?

புவிதன்னைச் சுற்றுவதால்
இரவு பகல் ஆவதென்பார்
இரவினிலும் பகலினிலும்
இருபத்திநான்கு மணியாமே?

சூரியனைச் சுற்றிவந்தால்
சூத்திரமே வருடமென்பார்
கதிரவனை வலம்வரவே
மாரிகோடைக் காலமென்பார்

இரவு பகல் தெரியாமல்
ஓடி உழைத்திடவும்
மணிக்கணக்கில் பார்த்திடவும்
நேரம் போதாதென்பார்

நேரத்தை வீணடித்து
வீண்வம்பு பேசிடுவார்
காலமே போனபின்பு
கவலைகள் தான்கொள்வார்

ஆகாதே எது நினைவும்
ஆலாகப் பறக்காவிட்டால்
நேரத்தை விஞ்சிடவும்
நினைவுண்டோ நம்மவர்க்கு?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பஞ்சுபோல் நரைத்த பின்பு
பஞ்சம் பேசிடுவார் நேரம்
கடந்ததென்றே கனன்று மனம்
கடைந்திடுவார் கவலை நேரமதே

வேகத்தைக் கூட்டி இங்கே
வேகமாகச் செயல் காட்டி
வேண்டிய நேரமதை
வேண்டியே கொள்ளலாமோ?

பொன்னான நேரமெல்லாம்
பொலிவின்றி நகர்ந்திடவே
பொறுத்திருந்து பார்த்திடலும்
பொறுமையோ சொல்லிடுவீர்?

கண்ணிமைக்கும் பொழுதுகூட
காத்திராத நேரமையா
காத்திரமாய்ச் சென்றிடுமே
நேத்திரமாய்க் கொண்டிடுவீர்!

நினைந்திடுவீர் நேரத்தை
மறைத்திடுவீர் சோகத்தை
மறத்தமிழர் நினைவோடு
சுறுசுறுப்பாய் உழைத்திடுவீர்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலகே நீ எங்கே?

நீள் புலமாகப் பரந்து நீ இங்கு நீர் நிலை நிறைந்த
ஆள் புலமானாய் அன்றோ எங்குமே இயற்கை மலர
வீழ் புனல் உன்னகத்தே செழிப்பாய் உறைந்துமே
வாழ் கனல் ஆற்றி அற்புதம் தருகின்றாயே

உன்உடல் மாந்தர்க்காக அளித்தனை இயல்பு நீங்க
தன்னுடல் மேவியிங்கே வளமெலாம் தமதாய்க் கொண்டார்
மென்னுளம் நோக உந்தன் வனப்புமே கெடுத்தார் அன்றோ?
கன்மனம் கொண்டார் கருதியே அழிக்கின்றாரே பாழாய்

ஏக்கமே உலகே உனக்கோ ஏன்னிலை மாற்றுகின்றார்?
ஆக்கமே இல்லாதழித்து அறுதியில் மாய்கின்றாரே
வீக்கமே உந்தன் உடலம் மாசுமே படிகின்றதே
தூக்கமே போரால் உன்னுடல் குருதிச் சேறே

போரிடும் உலகாய் இன்று ஆக்கியே உந்தன்
தேரோடும் வீதியெல்லாம் குண்டுகள் வீசியே
சீரோடு சிறப்பும் சிதைத்து அழிக்கின்றார்
பாரோடு பலதும் பத்தும் தமக்கேயாக்க

மன்பதை வாழ வழிகள் செய்யவே வந்தார்
தன்பகை கேடாய்க் கொண்டு தீர்த்துமே
என்வதை செய்கின்றார் ஐயகோ அவலம்
நின்பதை நிறுத்தும் மார்க்கமும் ஏதோ?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கன்னியர் கயவர் கூட்டம் தீண்டவே
அன்னியர் ஆக்கிரமிப்பில் தீய்ந்துபோக
மன்னிய பகைகள் ஓங்க அழிகிறார்
உன்னிய உந்தன் மைந்தர் அன்றோ?

விஞ்ஞானம் வளர்த்தார் எல்லாம் உண்மை
மெய்ஞானம் என்றே சொன்னார் அந்தோ!
அஞ்ஞான இருளில் மூழ்கவே உந்தன்
விண்ணாடம் எங்கே உலகே சொல்லாய்?

பச்சிளம் பாலகர்க்கோ பசித்திட உணவுமின்றி
நச்சிளம் சிறாராய் மாய்கின்றார் உந்தன்மேனி
உச்சமே உதிரியாக உதிர்ந்துமே கறையேயாக
விஞ்சுமே இன்பம் உலகேநீ எங்கு சொல்லாய்?

தனி ஒருவனுக்கு உணவில்லை எனில் இந்த
பனி உலகையே அழிப்போம் என்றான் அந்த
தனி உலகில் அழிக்கவும் ஏதும் உண்டோ?
கனி வளமே அளித்த உலகே நீ எங்கே?

போரிடும் உலகாய் இன்றி மாறினாய் ஐயோ
தாரிட்டே கொளுத்திப் பாலகர் பாவையரோடும்
கோதரித் தழித்தே கொல்லும் உலகாய் ஆகினை
நீயிறைத்த மாந்தர் மாள உலகே நீ எங்கே?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# துணிவுடைத் தோழன் டானியல்

சரிநிகர் மாந்தர் எனவே மறுப்பினில் வாதம் தந்து
நரிநிகர் மாக்கள் தன்னைச் சாடியே நிஜத்தின் — கரமுயர்
புரிந்த வேகக் கதைகள் மனமெலாம் பொங்கிக் கொதித்து
எரிந்த வோர் மலையே மனிதநேயன் டானியலே!

பிறப்பொக்கும் மாந்தர் தம்மை வர்ணமாய் வகுத்த
வறட்டுத் தத்துவம் தன்னைச் சாடி மனுநீதி — திறப்பென
அறத்திலே பஞ்சமர் பகுப்புக் கறையென உணர்ந்தே
புறத்திலே ஒதுங்கா தெழுந்தான் டானியலே!

கற்றவன் இல்லை பண்டிதத் தமிழை அவனோ
உற்றவன் உலகை மனத்தில் வரித்தே — பெற்றவன்
நற்றவ மாந்தர் உணர நுட்பமாய் யதார்த்தம்
பெற்றவர் புரியக் கதைகள் தந்தனன் டானியலே!

பஞ்சமர் நஞ்சலர் என்றே கஞ்சலர் கதைகள் தந்து
நெஞ்சலர் கொடுமைகள் உளத்தின் உதிரமாய் —வஞ்சகர்
வெஞ்சமர் நினைவுகூர்ந்து முதன்மையின் வர்க்கம்
நஞ்சவர் என்றே உரைத்தனன் டானியலே!

உள்ளத்தே உண்மை ஒளியினை ஏற்றி என்றும்
பள்ளத்தே வீழ்ந்துளலும் பாமரர் வாழ்வு — மெள்ளவே
குள்ளமாய்த் தோண்டிப் புதைக்கும் கொடுமைகள்
வெள்ளமாய்ப் பரவப் பதைத்தவன் டானியலே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாமரர் வாழ்வு ஓங்க முனைப்புடன் முன்னே சென்று
சோதரர் சோகமெல்லாம் தனதென நெஞ்சம் — சோர
ஏதிலர் அடிமை குடிமை நொறுக்கியே பொசுக்க
தீதிலர் உணர்ந்து ஓங்க வைத்தவன் டானியலே!

மாந்தரை மாக்களாய் மிதித்தவர் மறுகி மாள
வேந்தராய் வாழ்ந்தோர் ஆழ்ந்தே போக — சார்ந்தாரை
ஏந்தார் ஆக்க எழுதுகோலில் உணர்வை ஊட்டி
சேர்ந்தார்க்கு உழைத்த செம்மல் டானியலே!

சாதிப்பேயை மடக்கி விரட்டியே அடித்தே ஓட்ட
நாதியாய் நலிந்தோர் அடக்கியே வைத்தோர்— பாதியில்
சமாதியாய்ப் போகத் துணிவைத் தூவியே தூண்டிப்
பொதுவுடைமை துலக்கியமேதகு டானியலே!

அச்சமே அறியான் அடிமையாய் வாழ்தல் மன்பதைக்கு
துச்சமோ எழுவீர் ஏகிட ஆலயம் எவர்க்கும் — எச்சமோ
தீட்சதர் மறைநூல் மடமையை உணர்ந்த செம்மல்
நீச்சரின் செயல்கள் சாடிய தோழன் டானியலே!

தண்ணீரில் தாகம் தீர்க்கக் கண்ணீரைச் சொரிந்தோர்
மண்ணினில் மாந்தராய் வீதியில் உலவ —வண்ணவர்
திண்ணியர் ஆதல் வேண்டி எழுதி எழுதியே ஓய்ந்த
கண்ணியத் தோழன் டானியல் நாமம் வாழ்க!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொதுவுடைமை ஓங்கும்

அடிமைவாழ்வு அகலவே
குடிமைப்பண்பு சமமென
முடியுரிமை நீக்கவே
மக்கள் யுகம் புலரவே
பூக்கள் என மலரவே
கடிதில் உணர்வு பொங்கவே
நொடிப் பொழுதும் தூக்கமின்றி
வடித்தெடுத்த எண்ணமாக
மடியில் மூலதனம் ஆக்கியே
கடிதில் மக்கள் கையில்
ஆண்டான் அடிமைச் சமுதாயம்
தோண்டிப் புதைத்திட
கொண்ட எண்ணம்
மீண்டு சொர்க்க மாக்கவே
போரிடும் உலகை
வேருடன் கெடுத்து
போரில்லாச் சமுதாயம்
பாரினில் அமையவே
மன்பதை தளை அறுந்திட
குடிமை கொண்டோர் விலகிட
மனிதநேயம் உடன் கண்டு
படிசார்ந்த பாட்டாளி
நிலை வளமாய் ஓங்கவே
மேட்டுக் குடியிருப்போனும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தோட்டம் துரவு செய்துமே
நாட்டமாக சமத்துவமாய்
தேட்டம் ஓட்டம் நீங்கவே
இடிந்துபோன மனித இருப்பு
விடிந்துபோக மீட்டுமிங்கு
அடிப்படையில் தந்த மேதை
விடிவெள்ளி மார்க்ஸ் வழியே
மிடுக்குச் சேர சமத்துவமாய்
நீடு வாழச் சகோதரத்துவம்
நாடு போற்றும் மாமுனிவன்
உழைப்பின் உயர்வு ஓங்கவே
வளையுள் பதுங்கி ஒடுங்கியதே
விளைவில் பொதுமைச் சமதர்மம்
தளைத்து ஓங்கி மக்கள் இன்பம்
திளைத்து நன்றே வாழவே
ஆண்டான் அடிமைச் சமுதாயம்
தீண்டான் தொடுமை ஏற்றுமே
மீட்டான் மனிதம் நிலைக்கவே
தேட்டம் மக்கள் வாழ்க்கையே
நோட்டம் கொண்டான் அழிவையே
கூட்டம் கூட்டி ஏகாதிபத்தியம்
காட்டம் கொண்டு வளர்க்கவே
நீட்டம் கொண்டு சனியனாக
மூட்டம் தந்தான் புரையோட
கோட்டான் ஓசை எழுப்பியே
போட்டான் குண்டு மழையுமே
நாட்டான் நலிந்து போகவே
தொட்டான் சாத்தான் ஆகவே
வாட்டும் வன்மம் கொண்டுமே
தாட்டான் மண்ணில் மனிதநேயமே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேட்டான் வாழ்வு ஓங்கவே
கூட்டாய் வளம் பெருக்கவே
நாகசாக்கி கிரோசிமா போலவே
வியட்னாம் சிலியும் வீழவே
தயவேயின்றி ஆப்கான் அழித்து
அயர்விலாப் பாலஸ்தீனம் அழியவே
நயங்கொளவென்றே ஈராக் படுகொலை
காடேறிக் கழுகாகக் குருதி குடித்து
நாடேறி ஆக்கிரமிப்பே செய்கின்றான்
தோண்டிப் புதைத்திடவே ஒன்றாய்
வேண்டி இணைந்திடுவர் மக்களோ
உலக மக்கள் இணைவில் நிதம்
திலகமாய் மக்கள் வாழ்வு மேவுமே
துலங்கிடச் சமத்துவ சமுதாயம்
மலர்ந்திடுமே மனிதநேயம் அவனியில்
புலர்வினிலே புதுமை காண்போம் இன்பாய்
மீண்டும் இங்கே மாமுனிவன் மாக்ஸ்ஸின்
தீண்டும் சிந்தை மனத்தில் இருத்தியே!

UNIVERSITY OF PERADENIYA
14 SEP 2006
LIBRARY

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

UNIVERSITY OF PERADENIYA
14 SEP 2006
LIBRARY

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

UNIVERSITY OF PERADENIYA
14 SEP 2006
LIBRARY

598978

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

UNIVERSITY OF PERADENIYA
14 SEP 2006
LIBRARY

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இந்நூலாசிரியரைப் பற்றி...



மரபுக் கவிதைகளை மரணிக்க விடாததொரு சந்தக் கவிஞராகவும் புதுக்கவிதைப் படைப்பாளியாகவும் இம்மண்ணில் வாழ்ந்து வரும் இந்நூலின் ஆசிரியர் திரு. த. சிவபாலு அவர்கள் முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள குமுள முனையைப் பிறப்பிடமாகக் கொண்டவர். முள்ளியவளை வித்தியானந்தக் கல்லூரி, நெல்லியடி மத்திய கல்லூரி ஆகியவற்றில் கல்வி கற்ற இவர் பேராதனைப் பல்கலைக் கழகத்தில் கல்விமாமணி சிறப்பு பட்டத்தினையும் பெற்றவர். 1974-ல் ஆசிரியராக நியமனம் பெற்ற இவர் ஆசிரிய ஆலோசகர், அதிபர், கொத்தணி அதிபர் பதவிகளி கல்விப்பணி புரிந்தவர்.

598978

பல்கலைக் கழகத்தில் இருக்கும்போதே கல்வியில் தொடர்பான கட்டுரைகளை எழுத ஆரம்பித்த இவர் பிரான்சு நாட்டிற்குப் புலம் பெயர்ந்த பின்பு கவிதைத் துறையிலும் தன் ஆற்றலை வளர்த்துக்கொண்டார். கனடாவிற்குப் புலம்பெயர்ந்த வேளையில் கல்வித்துறை ஆர்வம் காரணமாக அதிபர் திரு. பொ. கனகசபாபதி அவர்களுடன் இணைந்து பணிகள் பல புரிந்தார். தொடர்ந்து கவிதை, கட்டுரை, விமர்சனம் ஆகிய துறைகளில் சிறந்த ஆளுமை பெற்ற எழுத்தாளராகி உதயன் பத்திரிகை மூலம் கனடிய தமிழர்களுக்கு மிக அறிமுகமானவர். தமிழர் செந்தாமரை, விளம்பரப் பத்திரிகைகளிலும் சில ஆக்கங்களை வெளியிட்டுள்ள இவர் வன்னித் தமிழ் கலாச்சார அமையத்தின் கொம்பறை மலரின் ஆசிரியர் குழுவில் பணியாற்றியதோடு அதில் பல கவிதைகளையும் சிறந்த கட்டுரை ஆக்கங்களைத் தந்துள்ளார். தமிழர் தகவல்; ஆண்டு மலரிலும் பதிவுகள்; குவியம் போன்ற வலையமைப்புப் பத்திரிகைகளிலும் இவரது சிறந்த கட்டுரைகள் வெளிவந்துள்ளன. தமிழர் திருமணமும் வைதீகத் திருமணமும் என்ற நூல் இவரது கன்னிப் படைப்பாகும். திருமண முறிவு பற்றி உதயன்; பத்திரிகையில் தொடர் கட்டுரைகளை எழுதி வருகின்றார். பல குழந்தைக் கவிதைகளையும் எழுதியுள்ள இவரது ஆக்கங்கள் எதிர்காலத்தில் குறும் இசைத்தட்டுக்கள் மூலம் இவரது படைப்புக்கள் வெளிவரவுள்ளன. இவர் எழுதியுள்ள கட்டுரைகளின் தொகுதி ஒன்றினையும் வெளியிட உள்ளார். பேச்சுப் போட்டிகளுக்கான இவரது ஆக்கங்கள் பல மாவர்களாலும் விரும்பிப் பேசத்தக்க சிறப்பு மிக்கன.

சிவபாலு அவர்கள் பலபக்கப் பரிமாணங்களையும் தொட்டு எழுதும் சிறந்த படைப்பாளியாக விளங்குகின்றார். என் பணி தமிழ் செய்து கிடப்பதே! என்ற நிலையில் தமிழ்ப் பற்றாளராக இவர் விளங்குகின்றார். வார்த்தைகளை மிகச் சந்தத்தோடு மிக விரைவாக எழுதிக் குவிக்கும் இவரது கவிதைப் படைப்புக்களில் 60 கவிதைகள் இந்நூலில் உள்ளன. எல்லாத் துறைகளிலும் நுழைபுலம் கொண்ட இவரது ஆற்றல் அளவிடற்கரியது. கவிதைத் துறையில் தனக்கென ஓர் இடத்தினைப் பிடிக்கவுள்ள இவரை வாழ்த்துவதில் பெருமை அடைகின்றேன்.

சிந்தனைப் பூக்கள் **எஸ். பத்மநாபன்,**
கனடா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org